தமிழ்நாடு அரசு

# ஒன்பதாம் வகுப்பு

## முதல் பருவம்

### தொகுதி 1

## தமிழ்

## ENGLISH

விற்பனைக்கு அன்று

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு
இலவசப்பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு – 2013
திருத்திய பதிப்பு – 2014
(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006

நூல் அச்சாக்கம்
தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006

இந்நூல் 80 ஜி எஸ் எம் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது

விலை : ரூ.

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

பாடநூல் வலைதளம்
www.textbooksonline.tn.nic.in

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

## THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
Tava Subha asisa mage,
Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

### SHORT VERSION

Jana-gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Jaya he, jaya he, jaya he
Jaya jaya, jaya, jaya he.

### AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
mingles in the music of the Yamuna and Ganges
and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல், பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

## INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

## THE NATIONAL INTEGRATION PLEDGE

“I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation.”

“I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means.”

## A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vandemataram!

Signature

## பொருளடக்கம்

### தமிழ் ( 1 – 108 )


| இயல் | தலைப்பு | பக்க எண் |
| --- | --- | --- |
| 1. | வாழ்த்து | 2 |
| | திருக்குறள் | 4 |
| | திராவிட மொழிகள் | 9 |
| | மாமரம் | 13 |
| | எழுத்து | 16 |
| 2. | சிறுபஞ்சமூலம் | 36 |
| | பாஞ்சாலி சபதம் | 38 |
| | இக்காலக் கவிதைகள் | 43 |
| | கண்ணதாசன் கவியின்பம் | 48 |
| | சொல் : பகாப்பதம், பகுபதம் | 52 |
| | ஆகுபெயர் : எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் | 56 |
| | பொருள்கோள் : ஆற்றுநீர்ப்பொருள்கோள், மொழிமாற்றுப்பொருள்கோள், நிரல்நிறைப்பொருள்கோள் | 58 |
| 3. | ஒய்வும் பயனும்! | 73 |
| | திருவிளையாடற் புராணம் | 76 |
| | கடற்பயணம் | 83 |
| | கெலன் கெல்லர் | 88 |
| | யாப்பு :செய்யுள் உறுப்புகள் ( எழுத்து, அசை, சீர்) | 92 |
| | அணி:இல்பொருள் உவமையணி, வேற்றுப்பொருள் வைப்பணி | 96 |


### மனப்பாடப் பகுதி

| இயல் | செய்யுள் | அடிகள் |
| --- | --- | --- |
| 1. | வாழ்த்து | 4 |
| | திருக்குறள் (1, 4, 5, 6, 8 ) | 10 |
| 2. | சிறுபஞ்சமூலம் | 4 |
| | பாஞ்சாலி சபதம் ( 2 ) | 8 |
| 3. | ஒய்வும் பயனும்! | 4 |
| | திருவிளையாடற் புராணம் (4, 10 ) | 8 |
| | மனப்பாடஅடிகள் மொத்தம் | 38 |

(பாடநூலுள் * இவ் உடுக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப் பகுதி)

# CONTENTS

## ENGLISH (109 - 162)


| Unit | Topic | Page No. |
|---|---|---|
| 1. | Buds to Blossoms [Prose] | 112 |
| * | Laugh and be Merry [Poem] | 123 |
| | A Man Who Had No Eyes [Supplementary Lesson] | 125 |
| 2. | Gaia Tells Her Tale [Prose] | 128 |
| | Earth [Poem] | 139 |
| | Amrita Devi – The Guardian Angel of Woods [Supplementary Lesson] | 141 |
| 3. | The Will to Win [Prose] | 145 |
| | Don't Quit [Poem] | 156 |
| | A Race in the Space [Supplementary Lesson] | 157 |


* Memoriter

தமிழ்

# தமிழ்

## ஒன்பதாம் வகுப்பு

### முதல் பருவம்

# வாழ்த்து

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே. *

– கம்பர்

பொருள் : உலக உயிர்கள் அனைத்தையும் படைத்தும் காத்தும் அழித்தும் அளவற்ற திருவிளையாடல்களை இடைவிடாது புரிபவர் இறைவர். அவர் நமக்கெல்லாம் தலைவர். அத்தகைய இறைவரையே நாம் அடைக்கலமாகப் பற்றுவோம்.

சொற்பொருள் : உளவாக்கல் – உண்டாக்குதல் (படைத்தல்); நிலைபெறுத்தல் – காத்தல்; நீக்கல் – அழித்தல்; நீங்கலா – இடைவிடாது; அலகிலா– அளவற்ற; அன்னவர் – அத்தகைய இறைவர்; தலைவர் – இறைவர்; சரண் – அடைக்கலம்.

இலக்கணக்குறிப்பு : யாவையும் – உம் – முற்றும்மை; ஆக்கல், நீக்கல், விளையாட்டு – தொழிற்பெயர்கள்; அலகிலா விளையாட்டு – ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம் : உடையார் = உடை + ய் + ஆர். உடை – பகுதி; ய் – சந்தி; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

ஆசிரியர் குறிப்பு : கம்பர் நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூரில் பிறந்தார். இவர் கம்பராமாயணம், ஏர் எழுபது, சிலை எழுபது, சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். இவர், குலோத்துங்கச் சோழனின் அவைப்புலவராக விளங்கினார்; திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றார். இவர், கவிச்சக்கரவர்த்தி எனவும் கல்வியில் பெரியர் கம்பர் எனவும் போற்றப்படுகிறார். இவரின் காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு எனக் கூறுவர்.



நூற்குறிப்பு : வடமொழியில் வான்மீகி முனிவர் எழுதிய இராமாயணத்தைத் தழுவித் தமிழில் கம்பர் எழுதியதே கம்பராமாயணம். கம்பர், இந்நூலுக்கு இராமாவதாரம் என்றே பெயரிட்டார். இது பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணியகாண்டம், கிட்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் என ஆறு காண்டங்களை உடையது. கம்பராமாயணப் பாலகாண்டத்திலுள்ள முதற்பாடல் வாழ்த்துப் பாடலாக இடம்பெற்றுள்ளது.

* மனப்பாடப் பகுதி.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. பிரித்தெழுதுக.**

1. தாமுள = ____________
2. விளையாட்டுடையார் = ____________
3. அலகிலா = ____________

**2. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| உளவாக்கல் | – | அழித்தல் |
| நிலைபெறுத்தல் | – | இறைவர் |
| நீக்கல் | – | காத்தல் |
| தலைவர் | – | படைத்தல் |

**3. கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தைக்கொண்டு நிரப்புக.**

1. இறைவர் அ __ கிலா விளையாட்டுடையவர். (ல / ள / ழ)
2. அ __ னவர்க்குச் சர __ நாங்களே. (ண் / ந் / ன்)

**4. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. கல்வியில் பெரியர் என அழைக்கப் பெறுபவர் ____________.
2. கம்பராமாயணம் ____________ காண்டங்களை உடையது.
3. கம்பர் பிறந்த ஊர் ____________.

### ஆ) குறுவினாக்கள்

1. இறைவரின் முத்தொழில்கள் யாவை?
2. இறைவர் எத்தகையவர் ?
3. கம்பர் எவ்வாறு புகழப்படுகிறார் ?
4. கம்பர் இயற்றிய நூல்கள் யாவை ?
5. கம்பரை ஆதரித்த வள்ளல் யார் ?
6. வாழ்த்துப் பாடலில் இடம்பெற்றுள்ள எண்ணும்மையை எடுத்தெழுதுக.
7. வாழ்த்துப் பாடலில் இறைவனைச் சுட்டும் பதிலிப் பெயரை எழுதுக.
8. வாழ்த்துப் பாடலில் இடம்பெற்றுள்ள ஏகாரச் சொற்களை எழுதுக.

### இ) சிறுவினாக்கள்

1. கம்பர் – குறிப்பு எழுதுக.
2. இறைவரின் இயல்புகளாகக் கம்பர் கூறுவன யாவை ?

தமிழ்

# திருக்குறள்

## பொறையுடைமை

(பிறர் செய்யும் துன்பங்களைப் பொறுத்தல்)

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத், தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. *

பொருள் : நிலமானது, தன்னைத் தோண்டுபவரையும் தாங்குவதுபோல, நம்மை இழிவுபடுத்துவோரையும் நாம் பொறுத்துக்கொள்வதே சிறந்த பண்பு.

சொற்பொருள் : அகழ்வாரை – தோண்டுபவரை; இகழ்வார் – இழிவுபடுத்துவோர்; தலை – சிறந்த பண்பு.

இலக்கணக்குறிப்பு : பொறுத்தல் – தொழிற்பெயர்; அகழ்வார், இகழ்வார் – வினையாலணையும் பெயர்கள்.

பகுபத உறுப்பிலக்கணம் : அகழ்வார் = அகழ் + வ் + ஆர். அகழ் – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

அணி : உவமையணி.

2. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

பொருள் : பிறர் செய்யும் துன்பத்தை ஒருவர் பொறுத்துக்கொள்ளுதல் சிறந்தது; அதனைவிடச் சிறந்தது அத்துன்பத்தை மறந்துவிடுதல்.

சொற்பொருள் : பொறுத்தல் – பொறுத்துக்கொள்ளுதல்; இறப்பினை – பிறர் செய்த துன்பத்தை.

இலக்கணக்குறிப்பு : மறத்தல், பொறுத்தல் – தொழிற்பெயர்கள்; நன்று – குறிப்பு வினைமுற்று.

பகுபத உறுப்பிலக்கணம் : மறத்தல் = மற + த் + தல். மற – பகுதி; த் – சந்தி; தல் – தொழிற்பெயர் விகுதி.

3. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

பொருள் : விருந்தினரை வரவேற்க இயலாது தவிர்க்கும் நிலை, வறுமையுள் கொடிய வறுமையாகும். அதுபோல, அறிவற்றார் செய்யும் தீங்குகளைப் பொறுத்துக்கொள்ளுதல் வலிமையுள் சிறந்த வலிமையாகும்.

சொற்பொருள் : இன்மை – வறுமை; ஒரால் – தவிர்த்தல்; மடவார்–அறிவற்றார்.

இலக்கணக்குறிப்பு : விருந்து – பண்பாகு பெயர்; ஒரால், பொறை – தொழிற்பெயர்கள்.

அணி : எடுத்துக்காட்டு உவமையணி.

4. நிறையுடைமை நீங்காமை வேண்டின், பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். *

பொருள் : நற்குணங்கள் நம்மைவிட்டு நீங்காதிருக்கவேண்டுமானால், பொறுமையை நாம் போற்றிக் கடைப்பிடித்தல் வேண்டும்.

சொற்பொருள் : நிறை – சால்பு.

இலக்கணக்குறிப்பு : நீங்காமை – எதிர்மறைத் தொழிற்பெயர்; போற்றி – வினையெச்சம்.

(இந்நாலு குறட்பாவும் பொறுமையின் சிறப்பினைக் கூறுகின்றன.)

5. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே, வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. *

பொருள் : பிறர் செய்யும் தீங்கைப் பொறுத்துக்கொள்ளாமல் தண்டிப்பவரைச் சான்றோர் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்; ஆனால், பொறுத்துக் கொள்பவரைப் பொன்போல் மதித்து மனத்துள் வைத்துக்கொள்வர்.

சொற்பொருள் : ஒறுத்தாரை – தண்டித்தவரை; ஒன்றாக – ஒரு பொருட்டாக; பொதிந்து வைப்பர் – (மனத்துள்) வைத்துக்கொள்வர்.

இலக்கணக்குறிப்பு : ஒறுத்தார் – வினையாலணையும் பெயர்; பொதிந்து – வினையெச்சம்.
பகுபத உறுப்பிலக்கணம் : வைப்பர் = வை + ப் + ப் + அர். வை – பகுதி; ப் – சந்தி; ப் – எதிர்கால இடைநிலை; அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

6. ஒறுத்தார்க் கொருநாளை இன்பம், பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். *

பொருள் : பிறர் செய்யும் தீமையைப் பொறுத்துக்கொள்ளாது தண்டித்தவர்க்கு ஒரு நாள் மட்டுமே இன்பம் கிட்டும்; அதனைப் பொறுத்துக்கொண்டவரின் புகழ், உலகம் உள்ளவரை நிலைத்து நிற்கும்.

சொற்பொருள் : பொன்றும் துணையும் – உலகம் உள்ளவரை.

இலக்கணக்குறிப்பு : ஒறுத்தார், பொறுத்தார் – வினையாலணையும் பெயர்கள்.

பகுபத உறுப்பிலக்கணம் : ஒறுத்தார் = ஒறு + த் + த் + ஆர். ஒறு – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

7. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்(து)
அறனல்ல செய்யாமை நன்று.

பொருள் : செய்யத்தகாத துன்பச் செயல்களைப் பிறர் தனக்குச் செய்தாலும், தான் அத்துன்பத்துக்கு வருந்தி, அறத்துக்கு மாறான செயல்களை அவருக்குச் செய்யாதிருத்தல் நல்லது.

தமிழ்

சொற்பொருள் : திறனல்ல – செய்யத்தகாத; நோநொந்து – துன்பத்துக்கு வருந்தி.

இலக்கணக்குறிப்பு : தற்பிறர் – ஏழாம் வேற்றுமைத் தொகை; செய்யினும் – இழிவுச் சிறப்பும்மை; நொந்து – வினையெச்சம்; அறன், திறன் – ஈற்றுப்போலிகள்.

8. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். *

பொருள் : செருக்கினால் தீமை செய்தாரையும் தத்தம் பொறுமையினால் வெற்றி கொள்ளல் வேண்டும்.

சொற்பொருள்: மிகுதியான் – மனச்செருக்கால்; மிக்கவை – தீமை; தகுதியான் – பொறுமையால்.

இலக்கணக்குறிப்பு: செய்தாரை – வினையாலணையும் பெயர்; விடல் – அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று.

( இந்நாலு குறட்பாவும் பிறர் செய்த தீங்கினைப்
பொறுத்துக்கொள்ளுதல்பற்றிக் கூறுகின்றன. )

9. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

பொருள் : வரம்புகடந்து பேசுவோரின் தீய சொற்களையும் பொறுத்துக்கொள்பவரே பற்றற்ற துறவியரினும் மேலானவர்.

சொற்பொருள்: துறந்தார் – பற்றினை விட்டவர்; இறந்தார் – வரம்பு கடந்தவர்; இன்னா – தீய; நோற்கிற்பவர் – பொறுப்பவர்.

இலக்கணக்குறிப்பு : இறந்தார், துறந்தார், நோற்கிற்பவர் – வினையாலணையும்பெயர்கள்; இன்னாச்சொல் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம் : இறந்தார் = இற + த் ( ந் ) + த் + ஆர். இற – பகுதி; த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்த கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

10. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

பொருள் : உண்ணாநோன்பு மேற்கொள்ளும் பெரியவர்களைவிடத் தம்மை இகழ்வோரின் தீயசொற்களைப் பொறுத்துக்கொள்பவரே மேலானவர் ஆவார்.

சொற்பொருள் : நோற்பார் – நோன்பு மேற்கொள்பவர்; இன்னாச்சொல் – தீய சொல்.

இலக்கணக்குறிப்பு : உண்ணாது – வினையெச்சம்.

( இவ்விரு குறட்பாவும் பிறரின் இழிச்சொற்களைப்
பொறுத்துக்கொள்ளுதல் பற்றிக் கூறுகின்றன.)



ஆசிரியர்குறிப்பு: திருவள்ளுவர், திருக்குறளில் அனைத்து நாட்டினரும் இனத்தினரும் தமக்கே உரியதெனக் கொண்டாடும் வகையில் பொதுமைக் கருத்துகளைப் படைத்தவர்.

நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர் என்னும் சிறப்புப் பெயர்களும் இவருக்கு உண்டு. இவரின் காலம் கி.மு.31ஆம் ஆண்டு என அறிஞர் கூறுவர்.

நூற்குறிப்பு: திரு + குறள் = திருக்குறள். திரு – செல்வம், சிறப்பு, அழகு, மேன்மை, தெய்வத் தன்மை எனப் பல பொருள் கொண்ட ஒருசொல். குறள் – குறுகிய அடி உடையது. ஏழுசீர்களைக் கொண்ட ஈரடி வெண்பாக்களால் ஆனது, திருக்குறள்.

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது; அறம் 38 அதிகாரங்களாகவும், பொருள் 70 அதிகாரங்களாகவும், இன்பம் 25 அதிகாரங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது.

இது, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலைப் போற்றிப் பாராட்டிய பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவமாலை.

திருக்குறளுக்கு அந்நாளிலேயே பதின்மர் உரை எழுதியுள்ளனர். அவ்வுரைகளுள், பரிமேலழகர் உரையே சிறந்தது என்பர் தமிழ்ச் சான்றோர்.

இன்றும் பலர் திருக்குறளுக்கு உரை எழுதி வருகின்றனர்.

**திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மர் :**

| | |
|---|---|
| 1. தருமர் | 2. மணக்குடவர் |
| 3. தாமத்தர் | 4. நச்சர் |
| 5. பரிதி | 6. பரிமேலழகர் |
| 7. திருமலையர் | 8. மல்லர் |
| 9. பரிப்பெருமாள் | 10. காளிங்கர் |

இங்கிலாந்து நாட்டு மகாராணியார் விக்டோரியா, காலையில் கண்விழித்ததும் முதலில் படித்த நூல் திருக்குறள்.



## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தைக்கொண்டு நிரப்புக.
   1. இகழ்வார்ப் பொறுத்தல் த ___ (லை/ளை)
   2. ஒ ___ த்தார்க்கு ஒ ___ நாளை இன்பம் (ரு/று)
2. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அறம் | – | எழுபது |
| பொருள் | – | இருபத்தைந்து |
| இன்பம் | – | முப்பத்தெட்டு |

3. எதுகைச்சொற்களை எடுத்தெழுதி அடிக்கோடிடுக.
   1. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
      தகுதியான் வென்று விடல்.
   2. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
      இகழ்வார்ப் பொறுத்தல் தலை.
4. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்துக.

   இறப்பினை என்றும் பொறுத்தல் அதனினும்
   நன்று மறத்தல் அதனை.
5. பொருள் வேறுபாடு அறிக.
   1. பொறுத்தல் / பொருத்தல் ________________ , ________________ .
   2. இறத்தல் / இரத்தல் ________________ , ________________ .
   3. நிறை / நிரை ________________ , ________________ .
   4. வண்மை / வன்மை ________________ , ________________ .
6. இருபொருள் தருக.
   1. நிறை ________________ , ________________ .
   2. தலை ________________ , ________________ .

### ஆ) குறுவினாக்கள்

1. தலை சிறந்த பண்பு எது ?
2. பொறுத்தாரைப் போற்றுதல் எங்ஙனம் ?
3. போற்றிக் காக்கவேண்டியது எது ?
4. துறவியரினும் மேலானவர் யார் ?

### இ) சிறுவினாக்கள்

1. திருக்குறள் – நூற்குறிப்பு எழுதுக.
2. பொறையுடைமையின் சிறப்புகள் யாவை ?
3. பிறர் செய்த தீங்கை எங்ஙனம் பொறுத்தல் வேண்டும் ?
4. பிறர் கூறுகின்ற தீயசொற்களைப் பொறுத்துக்கொள்பவர் எத்தகு சிறப்புக்குரியவர் ஆவர் ?

### ஈ) நெடுவினா

'பொறையுடைமை' அதிகாரத்தில் வள்ளுவர் வழங்கும் வளமார்ந்த கருத்துகளைத் தொகுக்க.

# திராவிட மொழிகள்

உலகம் தோன்றிய நாள்முதல் இன்றுவரை வியத்தகு படைப்புகளும் கண்டுபிடிப்புகளும் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. ஆயினும், கண்ணால் காணமுடியாத, நிலையான வடிவத்தைத் தரவியலாத காற்றினால் ஏற்படும் ஓசையை ஒலியாக்கி, அதற்கு வரிவடிவம் தந்து, மொழியாக நிலைபெறச் செய்த மனிதனின் செயலுக்கு இணையான படைப்போ கண்டுபிடிப்போ இந்நாள்வரை தோன்றவில்லை என்பதே உண்மை.

## மொழியும் மொழிக்குடும்பமும்

தம் எண்ணங்களையும் கருத்துகளையும் பிறருக்கு அறிவிக்கும் கருவியாக விளங்குவது, மொழி. உலகில் பல்வேறு மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. அவற்றுள், தனக்கெனத் தனிச்சிறப்பும் பல மொழிகள் தோன்றிவளர அடிப்படையாகவும் உள்ள மொழியே மூலமொழி. அதிலிருந்து தோன்றி வளர்ந்த மொழிகள் கிளைமொழிகள். அவற்றின் பொதுத்தன்மையின் அடிப்படையில், அவற்றை ஒரே மொழிக்குடும்பத்தில் அடக்குவர், மொழியியல் அறிஞர்.

## இந்தியமொழிக் குடும்பங்கள்

இந்தியாவில் பேசப்படும் மொழிகள் அனைத்தையும், இந்தோ–ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ– ஆசிய மொழிகள், சீன – திபெத்திய மொழிகள் என மொழியியல் அறிஞர் நான்கு மொழிக்குடும்பங்களுள் அடக்குவர். நம் நாட்டில் ஆயிரத்து முந்நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளும், அதன் கிளைமொழிகளும் பேசப்படுகின்றன. ஆதலால், இந்திய நாட்டை, 'மொழிகளின்காட்சிச்சாலை' (Museum of Languages) எனக் குறிப்பிட்டுள்ளார் மொழியியல் பேராசிரியர் ச.அகத்தியலிங்கம்.

## திராவிடமொழிக் குடும்பங்கள்

இன்று இருபத்து மூன்றனுக்கும் மேற்பட்ட திராவிடமொழிகள் உள்ளன. இம்மொழிகளைத் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூவகையாகப் பிரிப்பர். இவற்றுள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கும் திராவிடப் பெருமொழிகள் எனப்படும்.

## திராவிடம்

உலக நாடுகளின் பழைமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று என்பது மொகஞ்சதாரோ – அரப்பா அகழ்வாய்வுக்குப் பிறகு நிறுவப்பட்டுள்ளது. கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னரே பரந்து விரிந்திருந்த இந்திய நாகரிகம் உலகநாகரிகங்கள் அனைத்துக்கும் தாயாகவும் வழிகாட்டியாகவும் விளங்கி

இருக்கிறது. இவ்வாறு, இந்தியா முழுவதும் பரந்து விரிந்திருந்த அப்பழம்பெரும் நாகரிகத்தையே திராவிடநாகரிகம் என அறிஞர் கருதுகின்றனர்.

| தென்திராவிட மொழிகள் | நடுத்திராவிட மொழிகள் | வடதிராவிட மொழிகள் |
|---|---|---|
| தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு தோடா, கோத்தா, கொரகா, இருளா. | தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பெங்கோ, முண்டா. | குரூக், மால்தோ, பிராகுய். |

திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழியாகும். திராவிடம் என்னும் சொல் திராவிடநாடு என்னும் பொருளைத் தருவது. திராவிட மொழிகள், திராவிட இனம், திராவிட நாகரிகம் என்னும் சொற்றொடர்களுள் திராவிடம் என்னும் சொல் பெயரடையாக வந்துள்ளது எனக் கால்டுவெல், தமது திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் குறிப்பிட்டு உள்ளார். குமரிலபட்டர் திராவிடம் என்னும் சொல்லை முதன்முதலில் உருவாக்கினார். கால்டுவெல் அதனைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தார்.

மொழியியல் அறிஞர், தொடக்கக் காலத்தில் தமிழையும் அதன் கிளைமொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய தென்னிந்திய மொழிகளையும், தமிளியன் (Tamilian) அல்லது தமுலிக் (Tamulic) என்று வழங்கினர். அவற்றுள் தமிழ், மிகுந்த சிறப்பும் பழைமையும் வாய்ந்தது. எனினும், பல திராவிட மொழிகளுள் தமிழையும் ஒன்றாகக் கொண்டனர். ஆகவே, இவ்வின மொழிகள் அனைத்தையும் இணைத்துத் திராவிட என்னும் சொல்லைத் தாம் கையாண்டதாகக் கால்டுவெல் கூறியுள்ளார்.

### திராவிட மொழிகளுள் தமிழுக்குரிய இடம்

திராவிட என்னும் சொல்லே தமிழ் என்னும் சொல்லிலிருந்து உருவானது. தமிழ் > திரமிள > திரவிட > திராவிட என உருவாயிற்று எனக் கூறுகிறார் மொழியியல் அறிஞர் ஈராஸ் பாதிரியார். திராவிட மொழி என்றாலே தமிழ்மொழியையே குறிக்கும். திராவிட மொழிகளுள் மிகவும் தொன்மையான, பண்பட்ட மொழி தமிழே.

சிறுபஞ்சமூல நூலின் 21ஆவது ஓலைச்சுவடி



யுனெஸ்கோ நிறுவனம், அழிந்து வரும் பண்டைய தமிழ் ஓலைச்சுவடிகளைப் புதுப்பித்துப் பாதுகாக்க, பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.




இலெமூரியாக் கண்டம் : கடல்கோளால் கொள்ளப்பட்ட பழந்தமிழ்க் குமரிக்கண்டம்.



திராவிடமொழிகளுள் மூலத் திராவிடமொழியின் வடிவத்தையும் மொழிக்கூறுகளையும் வேர்களையும் பெருமளவில் கொண்டுள்ள மொழி, தமிழே. இத்தகைய தொன்மைச் சிறப்பும் தலைமைச் சிறப்புமே தமிழை இன்று உயர்தனிச் செம்மொழியாய் உயர்ந்து நிற்கச் செய்துள்ளது.

## தொன்மைச் சிறப்பு

கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் தமிழ்மொழி தோற்றம் பெற்றிருத்தல் வேண்டும் என ஒரு பிரிவினரும், மத்தியத்தரைக்கடல் பகுதியிலிருந்து திராவிட இனமும் அவர்தம் மொழியும் இந்தியாவுக்கு வந்திருத்தல் வேண்டும் என மற்றொரு பிரிவினரும் கருதுகின்றனர். ஆரியர் வருகைக்கு முன்னரே தமிழ்மொழி வழங்கி வருவதாக வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். தமிழ்மொழியில் இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் மிகப் பழைமையான நூல் தொல்காப்பியம். இந்நூல் ஓர் இலக்கண நூலாகத் திகழ்வதனால், இந்நூலுக்கு முன்பே பல இலக்கிய நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவு.

## தலைமைச் சிறப்பு

திராவிட மொழிகள் அனைத்துக்கும் மூலமான மொழியை, முன்னைத் திராவிடமொழி, மூலத் திராவிடமொழி, தொன்மைத் திராவிடமொழி எனப் பல்வேறு சொற்களால் குறிப்பர். அம்மூலமொழியே தமிழ்மொழி. ஏனைய திராவிட மொழிகள் தமிழிலிருந்து தோன்றி வளர்ந்தவை. எண்பது விழுக்காடு அளவுக்குத் திராவிட மொழிக்கூறுகளைக் கொண்டுள்ள ஒரே திராவிடமொழி, தமிழ். இத்தகு தலைமைச் சிறப்புக்குரிய மொழி, நம் தமிழ்மொழி.

## செவ்வியல் சிறப்பு

தொன்மை, தனித்தன்மை, மொழிகளின் தாய், சொல்வளம், இலக்கிய இலக்கண வளம், சிந்தனைவளம், கலைவளம், பண்பாட்டுவளம் இவற்றுடன் பன்னாட்டு மொழியாக

விளங்கும் தன்மையைப் பெற்ற மொழியே செவ்வியல்மொழி எனப்படும். இவையே செம்மொழிக்கான (Classical Language) கூறுகளாகவும் கருதப்படுகின்றன. மேற்கண்டவற்றை அளவுகோல்களாகக்கொண்டு நோக்கும்போது, செவ்வியல்மொழியாக ஒளிர்வது நமது தாய்மொழியாம் தமிழே.

தமிழின் சிறப்பை நிலைக்கச் செய்வதும் மேலும் வளரச் செய்வதும் தமிழராகிய நமது கடமையாகும். இதனை உணர்ந்து தமிழின் சீரிளமையைக் காக்க, என்றும் பாடுபடுவோம்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. மொழிகள் பல தோன்றி வளர அடிப்படையான மொழியை ________ என்பர்.
2. இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை எனக் குறிப்பிட்டவர் ________.
3. ஒரு மூலமொழியிலிருந்து தோன்றி வளரும்மொழியை ________ என்பர்.
4. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர்________.
5. தமிழ்மொழியிலுள்ள மிகப் பழைமையான நூல் ________.

**2. விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. இந்திய நாட்டை மொழிகளின் காட்சிச்சாலை என அகத்தியலிங்கம் குறிப்பிடுகிறார்.
2. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியன திராவிடப் பெருமொழிகள்.

### ஆ) குறுவினாக்கள்

1. மொழிக்குடும்பம் என்றால் என்ன ?
2. இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை என வழங்குவதேன் ?
3. திராவிடப் பெருமொழிகள் யாவை ?
4. தமிழ் என்னும் சொல் குறித்து ஈராஸ் பாதிரியார் கூறுவது யாது ?
5. செம்மொழித் தகுதிக்கான அளவுகோல்களுள் எவையேனும் நான்கனை எழுதுக.

### இ) சிறுவினாக்கள்

1. இந்திய மொழிக் குடும்பங்கள் குறித்து விளக்குக.
2. திராவிடம் என்னும் சொல்பற்றிக் கால்டுவெல் கூறுவன யாவை ?
3. திராவிட மொழிகளுள் தமிழ்மொழி பெறுமிடம் யாது ?

### ஈ) நெடுவினாக்கள்

1. தமிழின் சிறப்புகளைத் ‘திராவிட மொழிகள்’பாடத்தின்வழி விளக்குக.
2. திராவிட மொழிக்குடும்பம்பற்றி எழுதுக.

தமிழ்

# மாமரம்



"நீங்கள் கேள்விப்பட்டது சரியன்று. நான் எந்த மரத்தையும் கும்பிடுகிறவன் அல்லேன். ஆனால், இந்தத் தேன்மாமரத்தின்மீது எனக்கு நெருக்கமான சிநேகிதம். என் மனைவி அஸ்மாவுக்கும் அப்படித்தான். மகத்தான பெரிய மனிதர் ஒருவரின் அடையாளம்தான் இந்த மாமரம். நான் விளக்கமாகச் சொல்கிறேன்" என்று ஆரம்பித்தார் என் பக்கத்து வீட்டுக்காரரான ரஷீத்.

நாங்கள் எல்லாரும் அவருடைய வீட்டிற்கு முன்னால், வளர்ந்து கனி கொடுத்துக் கொண்டிருக்கும் மாமரத்தடியில் கூடியிருந்தோம்.

மரம் நிறைய மாங்காய்கள் கொத்துக்கொத்தாகக் காய்த்திருந்தன. மாமரத்தடியில் விசாலமான இடத்தில் வெள்ளை மணல் பரப்பப்பட்டிருந்தது. அதனைச் சுற்றிலும் வட்டமாக இரண்டு வரிசை செங்கல் பதிக்கப்பட்டு, சிமெண்ட் பூசப்பட்டு, நடுவே ரோஜாச்செடிகள் வளர்க்கப்பட்டிருந்தன. பல நிறங்களில் ரோஜாப்பூக்கள் பூத்துக் குலுங்கின.

ரஷீத் – அஸ்மா இருவருமே பள்ளி ஆசிரியர்கள். அவர்களுக்கு ஒரு மகன் உண்டு. ரஷீதின் மனைவி, மாம்பழங்களை அழகாக நறுக்கிப் பதினெட்டு வயதுள்ள தன் மகனிடம் ஒரு தட்டில் வைத்துக் கொடுத்தனுப்பினாள்.

நாங்கள் அதனைச் சாப்பிடத் தொடங்கினோம்.

"மாம்பழம் எப்படியிருந்தது?"

"தேன்தாங்க"

"இந்தப் பழத்தெ நாம் சாப்பிடற சந்தர்ப்பம் கெடச்சதை நெனச்சா ஆச்சரியமா இருக்கு".

"இதனை யாரு நட்டது?"

"இந்த இடத்தில் நட்டது, அஸ்மாவும் நானும் சேர்ந்துதான். ஆனா, இந்த மாமரத்தைப் பத்தி வேறு ஒரு கதை இருக்கு. ரொம்பப் பேருகிட்ட நான் அந்தக் கதையெ சொல்லியாச்சு. கேட்டவங்க, கதையெல்லாம் மறந்து போய், இந்த மரத்தைக் கும்பிட ஆரம்பிச்சிட்டாங்க. இந்த மரத்திலெ அப்பிடி யொன்னும் சக்தியில்லெ. ஆனா, ஒரு மகத்தான சம்பவத்தோட நினைவு இதில இருக்கு.

என் தம்பி அந்தக் காலத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டரா இருந்தான். இங்கிருந்து எழுபத்தஞ்சு மைல் தூரத்தில் இருக்கிற ஓர் ஊர்ல நான் ஒரு தடவெ தம்பியெ பார்க்கப் போயிருந்தேன். கொஞ்சநாள் அங்க தங்கியிருந்தேன். அஃது ஒன்றும் பெரிய ஊர் இல்லை. இருந்தாலும் சுத்திப் பார்க்கலாமே அப்படீன்னு ஒரு நாள் தெரு வழியா போயிட்டிருந்தேன்.

தமிழ்

நல்ல வெயில் காலம். சூடா காத்தடிச்சிட்டிருந்தது. தண்ணிக் கஷ்டம் வேற. நான் அப்படியே போயிட்டிருந்தப்போ வழியோரத்தில, ஒரு மரத்தடியில், வயசான ஒருத்தர் சுருண்டு கெடக்கிறது கண்ணில் பட்டுச்சு. தாடியும் தலமுடியும் நீளமா இருந்திச்சு. எம்பது வயது இருக்கலாம்னு தோணிச்சு. சாகப்போகிற நெலமெ. என்னைப் பாத்த உடனே அல்ஹம் துலில்லா, மகனே, தண்ணீ!'' அப்படின்னு சொன்னாரு.

“நான் உடனே பக்கத்திலிருந்த ஒரு வீட்டுக்கு ஓடினேன். வீட்டுத் திண்ணையில் ஓர் இளம்பெண் பேப்பர் படிச்சிகிட்டிருந்தா. விஷயத்தைச் சொல்லி, தண்ணி கேட்டேன். அவள் உள்ளே போய் ஒரு பாத்திரத்தில தண்ணி கொண்டு வந்தா.

நான் அத வாங்கிட்டு புறப்பட்டப்போ அவளும் என் பின்னால வந்தா. பெரியவர் விழுந்துகிடக்கிற எடத்துக்குப்போயி அவரைத் தண்ணி குடிக்கவச்சேன். கொஞ்சமா குடிச்சிட்டு அவரு மெதுவா எந்திரிச்சு உக்காந்தாரு. அப்புறம், ஓர் ஆச்சரியமான காரியம் செஞ்சாரு. என் கையில் இருந்த தண்ணிப் பாத்திரத்த வாங்கிட்டு மெல்ல நடந்து ஓர் ஓரத்துக்குப் போனாரு. அங்கே ஒரு சின்ன மாஞ்செடி மொளச்சிருந்தது. யாரோ மாம்பழம் தின்னுட்டுப்போனவங்க தூக்கி எறிஞ்ச மாங்கொட்டெ பூமியில் விழுந்து தானா மொளச்ச செடி அது. தண்ணியில்லாமெ வாடிப்போயிருந்துச்சு. வேரெல்லாம் மேலெ தெரிஞ்சது.

அந்தப் பெரியவர் நாங்க குடுத்த பாத்திரத்திலிருந்த தண்ணியில பாதிய அந்த மாஞ்செடிக்கு ஊத்தினாரு! அப்புறம் மெல்ல நடந்து வந்து மரத்தடியில உக்காந்து பிஸ்மில்லா சொல்லி மிச்சத் தண்ணியெக் குடிச்சாரு.

கடவுள வாழ்த்திட்டு, எங்ககிட்ட அவரு பேசினாரு.'' “தம்பீ, எம்பேரு யூசுப் சித்திக். எம்பது வயசு. சொந்த பந்தம் யாருமில்லெ. இப்பிடியெ பக்கீராயி ஊர் சுத்திக்கிட்டிருந்தேன். நான் இப்ப சாகப்போறேன். உங்க ரெண்டு பேரோட பேரு என்ன ?'' அப்பிடீன்னு கேட்டாரு.

“நான் சொன்னேன். ‘எம் பேரூ ரஷீத்’ பள்ளி ஆசிரியர். அந்தப் பொண்ணு சொன்னா: ‘எம் பேரு அஸ்மா’ நானும் பள்ளிக்கூடத்தில் டீச்சராத்தான் வேல பாக்கறேன்!

உங்களை அல்லா காப்பாத்துவாருன்னு சொல்லிவிட்டு, அவர் அப்படியே தரையில சாஞ்சுட்டாரு. கொஞ்ச நேரத்தில் அவர் உயிர் போயிடுச்சு. எங்க கண் முன்னால, அந்த யூசுப் சித்திக் ஏறந்திட்டாரு.



நான் உடனே போயி, என் தம்பிகிட்டெ விஷயத்தைச் சொன்னேன். அவன் ஒரு 'வேன்' அனுப்ப, உடலெ பள்ளிவாசலுக்குக் கொண்டுபோயி, குளிப்பாட்டி, புதுத்துணியெல்லாம் உடுத்தி, அடக்கம் பண்ணினோம். பெரியவரோட பையில ஆறு ரூபாய் இருந்துச்சு. நானும் அஸ்மாவும் ஆளுக்கு அஞ்சு ரூபா போட்டு மிட்டாய் வாங்கிப் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கெல்லாம் குடுத்தோம். பின்னாடி நான் அஸ்மாவெ கல்யாணம் பண்ணிகிட்டேன். அந்த மாஞ்செடிக்கு அஸ்மா தொடர்ந்து தண்ணீர் ஊத்திக்கிட்டே வந்தா. நான் இங்க எடம் வாங்கி வீடு கட்டி முடிச்சப்போ, அந்த மாஞ்செடியெ மண்ணோட தோண்டி எடுத்து, ஒரு சாக்குப் பையில கட்டி, இங்க கொண்டு வந்தோம். ரெண்டு மூணு நாளு, அது அஸ்மாவோட அறையிலதான் ஒருமூலையில் பத்திரமாக இருந்திச்சு.

அப்புறம் இந்த இடத்தில குழிதோண்டி நல்ல மண்ணும், காஞ்ச சாணியும் போட்டு நட்டு தண்ணி ஊத்தினோம். இது வளர்ந்தப்போ நாங்க ரொம்ப சந்தோஷப்பட்டோம். அப்பப்போ எலும்புத்தூளும், பச்சில உரமும் போட்டு வளர்த்தோம். அது இப்போ இப்பிடிப் பெரிய மரமா ஆயிட்டது'' என்று கதையை முடித்தார் அவர்.

சாகற சமயத்திலயும், வாய்பேச முடியா ஒரு மாஞ்செடி சாகாம இருக்க, தண்ணி ஊத்தின அந்தப் பெரியவர் ஒரு மகான்தான். ரொம்ப அதிசயமான சம்பவம்.

" நான் இதெ மறக்கவே மாட்டேன்'' என்று சொல்லிவிட்டு, அவரிடம் விடைபெற்று நகர்ந்தேன்.

அப்போது, அவர் என்னை அழைத்தார்; நின்று திரும்பிப் பார்த்தேன்.

ரஷீதின் மகன், சில மாம்பழங்கள் அடங்கிய ஒரு பொட்டலம் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து, "உங்க சம்சாரத்துக்கும், குழந்தைகளுக்கும் குடுக்கச் சொன்னாரு அப்பா'' என்றான்; வாங்கிக் கொண்டேன்.

"தம்பி படிக்கிறயா ?''

"ஆமாங்க, காலேஜில்''

"உம் பேரென்னப்பா ?''

"யூசுப் சித்திக்''

"என்ன சொன்னே ?''

"யூசுப் சித்திக்''.

நன்றி : புவியரசு, இரவின் அறுவடை.

## மாதிரி வினாக்கள்

### நெடுவினாக்கள்

1. ரஷீத்துக்கு மாங்கன்று எவ்வாறு கிடைத்தது ?
2. ரஷீத் தனக்குக் கிடைத்த மாங்கன்றை எவ்வாறு பாதுகாத்து வளர்த்தார் ?

தமிழ்

# எழுத்து

மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துவது மொழி. ஒருவர், தம் கருத்தை வெளிப்படுத்தவும், அதனைக் கேட்போர் புரிந்துகொள்ளவும் கருவியாக அமைவதும் மொழியே.

அம்மொழியைப் பிழையின்றிப் பேசவும் கேட்கவும் படிக்கவும் எழுதவும் துணைசெய்வது இலக்கணம் ஆகும்.

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் எனத் தமிழிலக்கணம் ஐவகைப்படும்.

### எழுத்துகளின் வகை

முதலெழுத்து, சார்பெழுத்து என எழுத்துகள் இருவகைப்படும்.

### முதலெழுத்துகள்

அ முதல் ஔ வரை உள்ள உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், க் முதல் ன் வரை உள்ள மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகளும் முதலெழுத்துகளாகும். இவை சார்பெழுத்துகள் தோன்றுவதற்கு முதற்காரணமாய் இருப்பதனால் முதலெழுத்துகள் எனப்பட்டன.

### சார்பெழுத்துகள்

முதலெழுத்துகளைச் சார்ந்து இயங்கும் எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படும். இவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனப் பத்து வகைப்படும். இவற்றுள் உயிரளபெடை, ஒற்றளபெடை குறித்துக் காண்போம்.

## அளபெடை

ஆசிரியர் : இனிய குழந்தைகளே! வணக்கம்.

செந்தில்வடிவு! தெருவில் சிலர் பொருள்களைக் கூவி விற்றுக்கொண்டே செல்கிறார்கள். அவர்கள் என்னென்ன பொருள்களை விற்கிறார்கள் எனச் சொல்.

செந்தில்வடிவு : பூ, பழம், கீரை, மோர் என இப்படிப் பலபொருள்களை விற்கிறார்கள், ஐயா.

ஆசிரியர் : மகிழ்ச்சி, நீ அவற்றையெல்லாம் கவனித்திருக்கிறாய்! சரி. பூ, பழம் இவற்றை அவர்கள் எவ்வாறு கூவி விற்கிறார்கள்? வெற்றி! நீ சொல்.

வெற்றி : பூவோஒ பூவு, பழமோஒ பழம், கீரையோஒ கீரை, மோரோஒ மோரு.

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | சரியாகச் சொன்னாய்! பூ, பழம் இப்படிச் சொல்லி விற்றால் வாங்குகிறவர்கள் காதுகளில் சரியாக விழாது. நீட்டிச் சொல்லும்போதுதான் அவர்கள் என்ன விற்கிறார்கள் என்பது தெளிவாகப் புரியும், இல்லையா ? |
| மாணவர் | : | ஆமாங்க, ஐயா. |
| ஆசிரியர் | : | இதேபோலத்தான் புலவர்களும் தாம் இயற்றும் செய்யுளில் ஓசை குறையும்போது, அதனை நிறைவுசெய்ய அளபெடையைப் பயன் படுத்துகிறார்கள். |
| வெற்றி | : | இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள், ஐயா! |
| ஆசிரியர் | : | சொல்கிறேன். செய்யுளில் ஓசை குறையும்போது, ஒரு சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கும் நெட்டெழுத்துகள் தமக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிக்கும். அவ்வாறு நீண்டு ஒலிப்பதனை அளபெடை என்கிறோம்.<br>அளபு = மாத்திரை. எடை = எடுத்தல் என்பது பொருள்.<br>எழுத்தினது மாத்திரை அளவில் நீட்டி ஒலித்தல். |
| செந்தில்வடிவு | : | அளபெடை எத்தனை வகைப்படும், ஐயா ? |
| ஆசிரியர் | : | இருவகைப்படும். முதலாவது உயிரளபெடை, இரண்டாவது ஒற்றளபெடை. |
| வெற்றி | : | உயிரளபெடை என்றால் என்ன, ஐயா ? |
| ஆசிரியர் | : | செய்யுளில் ஓசை குறையும்போது, அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர்நெடில் எழுத்துகள் ஏழும் அளபெடுக்கும். இஃது, உயிரளபெடை எனப்படும். அவ்வாறு அளபெடுக்கும்போது, அவற்றுக்கு இனமான குறில் எழுத்துகள் குறியீடாக அதன்பக்கத்தில் வரும். ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனஎழுத்தாகவரும். இவ்வுயிரளபெடை மூவகைப்படும். |
| வெற்றி | : | என்னென்ன வகைகள், ஐயா ? |
| ஆசிரியர் | : | செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை. செய்யுளில் இசையை நிறைக்க வரும் அளபெடையைச் செய்யுளிசை அளபெடை என்பர். ஓசை குறையாவிட்டாலும் இனிய ஓசைக்காக அளபெடுத்தலை இன்னிசை அளபெடை என்பர். இவ்விரண்டும் அல்லாமல் பெயர்ச்சொல் அளபெடுத்து, வினையெச்சப் பொருளில் வரும் அளபெடை, சொல்லிசை அளபெடையாகும். |
| செந்தில்வடிவு | : | சான்றுகளோடு விளக்கிச் சொல்லுங்கள், ஐயா. |
| ஆசிரியர் | : | செய்யுளில் ஓசை குறையும் இடத்தில், அந்த ஓசையை நிறைவுசெய்ய சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நின்ற உயிர்நெடில் எழுத்துகள் ஏழும், உரிய மாத்திரையிலிருந்து மிக்கு ஒலிக்கும். இதனையே |

தமிழ்

தமிழ்

செய்யுளிசை அளபெடை எனக் கூறுவர்.

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு. – குறள், 809

இக்குறளைப் படித்துப் பாருங்கள். கெடா என்பது கெடாஅ என இறுதியிலும், விடார் என்பது விடாஅர் என இடையிலும் அளபெடுத்து வந்துள்ளது. எனவே, இது செய்யுளிசை அளபெடை ஆகும். இதற்கு இசைநிறை அளபெடை என்னும் வேறுபெயரும் உண்டு.

இன்னிசை அளபெடை

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. – குறள், 15

கெடுப்பதும், எடுப்பதும் என ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசை தருவதற்காக து என்னும் குறில் தூ என நெடிலாக மாறி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

சொல்லிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் பெயர்ச்சொல் வினையெச்சப் பொருள் தரும் பொருட்டு அளபெடுப்பது சொல்லிசை அளபெடையாகும்.

குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.– குறள், 544

இக்குறட்பாவில் தழீஇ என்னும் சொல் அளபெடுத்து வந்துள்ளது.

தழீ – தழுவுதல் என்னும் தொழிற்பெயர்ச் சொல், தழீஇ (தழுவி) என வினையெச்சச் சொல்லாகப் பொருள் தருவதற்கு அளபெடுத்ததனால் இது சொல்லிசை அளபெடை ஆயிற்று.

கண்ணன் : ஒற்றளபெடை என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : செய்யுளில் ஓசை குறைந்தால் மெய்யெழுத்துகளும் அளபெடுக்கும். இஃது ஒற்றளபெடை எனப்படும்.

எங்ங்கி றைவனுள னென்பாய்.

வெஃஃகுவார்க் கில்லை வீடு.

இத்தொடர்களில் உள்ள ங் மற்றும் ஃ ஆகிய எழுத்துகள் இருமுறை வந்துள்ளன. இவ்வாறு ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்து மெய்யும், ஃ ஒன்றும் ஆகப் பதினோர் எழுத்துகளும் ஒரு குறிலை அடுத்தும் இருகுறில்களை அடுத்தும் செய்யுளில் இனிய ஓசை வேண்டி அளபெடுக்கும். இவ்வாறு அளபெடுப்பதற்கு ஒற்றளபெடை என்பது பெயர்.

நினைவிற் கொள்க.

1. செய்யுளிசை அளபெடை (இசைநிறை அளபெடை) – செய்யுளின் ஓசையை நிறைவு செய்ய ஈரசைகொண்ட சீர்களாக மட்டும் வரும். (எ.கா.) உழாஅர், படாஅர்.
2. இன்னிசை அளபெடை – இனிய இசைக்காகக் குறில் நெடிலாக அளபெடுத்து, மூவசைச் சீர்களாக மட்டும் வரும். (எ.கா.) கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்.
3. சொல்லிசை அளபெடை – பெயர்ச்சொல் அளபெடுத்து, வினையெச்சப் பொருளில் வரும். இ என்னும் எழுத்தில் முடிவு பெற்றிருக்கும். (எ.கா.) நசைஇ, நிறீஇ.
4. ஒற்றளபெடை – வல்லினத்து க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும், இடையினத்தில் ர், ழ் என்னும் இரண்டும் ஆக இந்த எட்டு மெய்யெழுத்துகள் தவிரப் பிற மெய்யெழுத்துகள் அளபெடுக்கும்.

| எழுத்துவகை | | மாத்திரை |
|---|---|---|
| உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில் | – | ஒன்று |
| உயிர்நெடில், உயிர்மெய்நெடில் | – | இரண்டு |
| மெய், ஆய்தம் | – | அரை |
| உயிரளபெடை | – | மூன்று |
| ஒற்றளபெடை | – | ஒன்று |

பயிற்சி : பொருந்தாத சொல்லை வட்டமிடுக.

1. பெறாஅ, கொடுப்பதூஉம், தழீஇ, அண்ணன்.
2. வாழ்ழ்க்கை, சங்ங்கு, நெஞ்ஞ்சு, கண்ண்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் – இத்தொடரில் ____________ அளபெடை இடம்பெற்றுள்ளது.

   அ) இன்னிசை ஆ) செய்யுளிசை இ) சொல்லிசை

2. உடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு – இக்குறட்பாத் தொடரில் ____________ அளபெடை வந்துள்ளது.

   அ) சொல்லிசை ஆ) இசைநிறை இ) இன்னிசை

3. கீழ்க்காண்பனவற்றுள் சொல்லிசை அளபெடை ____________.

   அ) எச்சம் பெறாஅ விடின் ஆ) வரனசைஇ இன்னும் உள்ளேன்.
   இ) உண்பதூஉம்

2. பொருத்துக.

தமிழ்

| | | |
|---|---|---|
| ஒற்றளபெடை | – | குடிதழீஇ |
| செய்யுளிசை அளபெடை | – | அரங்ங்கம் |
| இன்னிசை அளபெடை | – | உழாஅர் |
| சொல்லிசை அளபெடை | – | உடுப்பதூஉம் |

3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அளபெடை என்னும் சொல்லுக்கு __________ என்பது பொருள்.
2. அளபெடை _______ வகைப்படும்.
3. செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் குறில் ________ ஆகி அளபெடுப்பது _______ அளபெடை.

ஆ) குறுவினாக்கள்

1. உயிரளபெடையைச் சான்று தந்து விளக்குக.
2. உயிரளபெடையின் வகைகள் யாவை?
3. ஒற்றளபெடை என்றால் என்ன?
4. இன்னிசையளபெடையைச் சான்றுடன் விளக்குக.

செயல்திட்டம்

திருக்குறளின் அறத்துப்பாலில் அளபெடை இடம்பெற்றுள்ள குறட்பாக்களைத் தொகுக்க. அவற்றை அளபெடைகளின் அடிப்படையில் வகைப்படுத்துக.

## எழுத்துகளின் பிறப்பு

எழுத்துகள் பிறப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பவை ஒலியணுக்கள்.

மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலிஎழுத்து. – நன்னூல், 58

உயிருள்ள உடம்பினுள்ளே எழுகின்ற காற்று மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகியவற்றைப் பொருந்தி உதடு, நாக்கு, பல், மேல்வாய் ( அண்ணம் ) ஆகிய இவ்வுறுப்புகளின் முயற்சியால் வெவ்வேறு ஒலிகளாகப் பிறக்கின்றன.

### இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு

எழுத்துகளின் பிறப்பை இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு என இருவகையாகப் பிரிக்கலாம். எழுத்துகள் தோன்றுகின்ற மார்பு முதலானவற்றை இடப்பிறப்பு எனவும், உதடு முதலான உறுப்புகளின் தொழில் வேறுபாட்டினால் ஒலிப்பதனை முயற்சிப் பிறப்பு எனவும் கூறுவர்.

உயிரெழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் முதலெழுத்துகள் எனப்படும். மெய்யெழுத்துகளை ஒலிக்கும்போது வேறுபட்ட மூன்று ஒலிகளை நாம் கேட்கலாம். அவை வல்லின ஒலி, மெல்லின ஒலி, இடையின ஒலி என்பன. அவ்வொலிகள் வேறுபடுவதற்குக் காரணம், அவை பிறக்கும் இடங்கள் வேறுபடுவனவே.

எழுத்துகளின் பிறப்பை நன்னூலார் கூறியதனைப்போலவே மொழியியல் அறிஞர் ஒலி

எழுத்துகளின் பிறப்பு
(ஒலி உறுப்புகள்)

- இடப்பிறப்பு (காற்றறைகள்)
  - மார்பு
  - கழுத்து
  - தலை
  - மூக்கு
- முயற்சிப்பிறப்பு (ஒலிப்பு முனைகள்)
  - இதழ்
  - நா
  - பல்
  - அண்ணம்

## ஒலிப்புப் பயிற்சி



நூலுள் அடக்குவர்.

ஒலி எழக் காரணமான காற்று நிலைபெறும் இடங்களைக் காற்றறைகள் எனவும், ஒலி எழுவதற்குத் துணை செய்யும் உறுப்புகளை ஒலிப்புமுனைகள் எனவும் கூறுவர்.

### முதலெழுத்துகளின் இடப்பிறப்பு

- ❖ பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், இடையின எழுத்துகள் ஆறும் கழுத்திலிருந்து பிறக்கின்றன.
- ❖ மெல்லின எழுத்துகள் ஆறும் மூக்கிலிருந்து பிறக்கின்றன.
- ❖ வல்லின எழுத்துகள் ஆறும் மார்பிலிருந்து பிறக்கின்றன.

ஆவி இடைமை இடமிடறு ஆகும்
மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை. – நன்னூல், 75

(ஆவி – உயிரெழுத்து; இடைமை – இடையினம்; மிடறு – கழுத்து; மென்மை – மெல்லினம்; உரம் – மார்பு.)

### முதலெழுத்துகளின் முயற்சிப் பிறப்பு

அ) உயிர் – பன்னிரண்டு

❖ அ, ஆ ஆகிய இவ்விரண்டு உயிர்களும் வாயைத் திறந்து ஒலிப்பதனால் பிறக்கின்றன.

அவற்றுள்,
முயற்சியுள் அஆ அங்காப் புடைய. – நன்னூல், 76

(அங்காப்பு – வாயைத் திறத்தல்)

❖ இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்து எழுத்தும் வாயைத் திறப்பதனோடு மேல்வாய்ப் பல்லை நாவிளிம்பு தொடுவதனால் தோன்றுகின்றன.

இஈ எஏ ஐஅங் காப்போ(டு)
அண்பல் முதல்நா விளிம்புற வருமே. – நன்னூல், 77

❖ உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்து எழுத்தும் உதடுகளைக் குவித்து ஒலிப்பதனால் தோன்றுகின்றன.

உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே. – நன்னூல், 78

ஆ) மெய் – பதினெட்டு

❖ க், ங் – இவ்விரு மெய்களும் நாவினது முதற்பகுதி அண்ணத்தைத் தொடுவதனால் தோன்றுகின்றன.

❖ ச், ஞ் – இவ்விரு மெய்களும் இடைநா (நடு நா), நடு அண்ணத்தைத் தொடுவதனால் தோன்றுகின்றன.

❖ ட், ண் – இவை நாவினது நுனி, அண்ணத்தின் நுனியைத் தொடுவதனால் தோன்றுகின்றன.

கஙவும் சஞவும் டணவும் முதலிடை

நுனிநா அண்ணம் உறமுறை வருமே. – நன்னூல், 79

- ( நா – நாக்கு; அண்ணம் – மேல்வாய்ப் பகுதி; க, ங, ச, ஞ, ட, ண என்னும் உயிர்மெய்கள் – க், ங், ச், ஞ், ட், ண் என்னும் மெய்களைக் குறிக்கும். பின்வரும் நூற்பாக்களில் உள்ளவற்றையும் இவ்வாறே கொள்க. )
- த், ந் – மேல்வாய்ப் பல்லின் அடியை, நாக்கின் நுனி பொருந்துவதனால் இவ்வெழுத்துகள் தோன்றுகின்றன.

  அண்பல் அடிநா முடியுறத் தநவரும். – நன்னூல், 80
- ப், ம் – மேல் உதடும் கீழ்உதடும் பொருந்த இவை தோன்றும்.

  மீகீழ் இதழுறப் பம்மப் பிறக்கும். – நன்னூல், 81
- ய் – இது நாக்கின் அடிப்பகுதி, மேல்வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதனால் தோன்றுகிறது.
- அடிநா அடியணம் உறயத் தோன்றும். – நன்னூல், 82
- ர், ழ் – இவை மேல்வாயை நாக்கின் நுனி தடவுவதனால் பிறக்கின்றன.
- அண்ணம் நுனிநா வருட ரழவரும். – நன்னூல், 83
- ல் – இது மேல்வாய்ப் பல்லின் அடியை, நாவின் ஓரங்கள் தடித்து நெருங்குவதனால் பிறக்கிறது.
- ள் – இது மேல்வாயை நாவின் ஓரங்கள் தடித்துத் தடவுவதனால் பிறக்கிறது.

  அண்பல் முதலும் அண்ணமும் முறையின்
  நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
  லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும். – நன்னூல், 84
- வ் – இது மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்துவதனால் பிறக்கின்றது.

  மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே. – நன்னூல், 85
- ற், ன் – இவை மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதனால் பிறக்கின்றன.

  அண்ணம் நுனிநா நனியுறின் றனவாகும். – நன்னூல், 86

### சார்பெழுத்துகளின் இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு

ஆய்தமாகிய சார்பெழுத்து, தலையை இடமாகக்கொண்டு பிறக்கிறது. அதன் முயற்சிப் பிறப்பு வாயைத் திறந்து ஒலித்தலே ஆகும். பிற சார்பெழுத்துகள் யாவும், தத்தம் முதலெழுத்துகள் தோன்றுதற்குரிய இடத்தையும், அவை பிறத்தற்குரிய முயற்சியையும் தமக்கு உரியனவாகக் கொண்டு ஒலிக்கின்றன.

ஆய்தக்கு இடம்தலை அங்கா முயற்சி
சார்பெழுத் தேனவும் தம்முதல் அனைய. – நன்னூல், 87

பயிற்சி: உதடுகள் ஒட்டா எழுத்துகள் கொண்ட சொற்களை வட்டமிடுக.

கம்பம், நான்கு, வேம்பு, தாவரம், உலக்கை, பார்வை

தமிழ்

தமிழ்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. முதல் எழுத்துகளின் எண்ணிக்கை ____________ ஆகும்.
   அ) 12 ஆ) 18 இ) 30
2. கழுத்தினின்று பிறப்பது ____________.
   அ) வல்லினம் ஆ) மெல்லினம் இ) இடையினம்
3. வல்லின எழுத்துகளின் இடப்பிறப்பு ____________.
   அ) மார்பு ஆ) கழுத்து இ) மூக்கு
4. உதடுகள் இரண்டும் பொருந்துவதனால் பிறக்கும் எழுத்துகள் ____________.
   அ) ப், ம் ஆ) ய், ர் இ) க், ங்

### ஆ) குறுவினாக்கள்

1. முதலெழுத்துகள் என்பன யாவை ?
2. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
3. எழுத்துகள் எவ்வாறு பிறக்கின்றன ?
4. முதலெழுத்துகள் பிறக்கும் இடங்களை எழுதுக.

## வகுப்பறைத்திறன்கள்

(அடிப்படைத்திறன்களில் பயிற்சி பெறுவதற்காக வகுப்பறைத்திறன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்பாற்றல், கலந்துரையாடல் முதலியனவும் மொழித்திறன் பயிற்சிகளில் பாடப்பகுதியைச் சார்ந்த, சாராத மொழிப்பயன்பாட்டுக் கூறுகளும் உள்ளன. தமிழெண்களை அறிவோம், வாழ்க்கைத்திறன், மதிப்புக்கல்வி, பண்பு, தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம் ஆகிய பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன.)

### எழுதுதல் திறன்

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக. (மாதிரி)

மருத்துவத்தைப் பொறியியலைத் தமிழில் கற்று
    மக்கள்நலம் காப்பாற்ற விரும்பு கின்ற
கருத்துடைய மாணவர்கள் தோன்ற வேண்டும்
    கடும்உழைப்பால் தமிழர்புகழ் ஓங்க வேண்டும்
வருங்காலத் தமிழரெலாம் அறிவால் இந்த
    வையத்தை வியப்படையச் செய்ய வேண்டும்
இருண்டிருக்கும் நிலைமாறத் தமிழில் கற்போம்
    என்றென்றும் தலைநிமிர்ந்து வாழ்வோம்! வெல்வோம்!

வினாக்கள்

1. இப்பாடலுக்குப் பொருத்தமான தலைப்பைத் தருக.
2. தமிழர் புகழ் எதனால் ஓங்க வேண்டும்?
3. எத்தகைய மாணவர்கள் தோன்றுதல் வேண்டும்?
4. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பெயர்ச்சொற்களைப் பட்டியலிடுக.
5. இப்பாடலிலுள்ள வினையெச்சச் சொற்களை எடுத்தெழுதுக.
6. இப்பாடலில் இரண்டாம் வேற்றுமையுருபு இடம்பெற்றுள்ளது. அதனைக் கண்டறிந்து எழுதுக.

விடைகள்

1. தாய்மொழிவழிக் கல்வி.
2. தமிழர் புகழ், அவர்தம் கடும் உழைப்பால் ஓங்குதல் வேண்டும்.
3. மருத்துவம், பொறியியல் முதலிய தொழிற்கல்விகளைத் தாய்மொழியான தமிழில் கற்று மக்கள்நலம் காக்க விரும்பும் மாணவர்கள் தோன்றல் வேண்டும்.
4. மருத்துவம், பொறியியல், தமிழ், மக்கள், மாணவர்கள், தமிழர், வையம் – பெயர்ச்சொற்கள்.
5. காப்பாற்ற, தோன்ற, ஓங்க, செய்ய, வியப்படைய, நிமிர்ந்து – வினையெச்சங்கள்.
6. இரண்டாம் வேற்றுமை உருபு ஐ. மருத்துவத்தை, பொறியியலை, வையத்தை.

பயிற்சி

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பாரதியார் உலககவி! அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்!
ஒருருக் கொருநாட்டுக் குரிய தான
ஓட்டைச்சாண் நினைப்புடையர் அல்லர்; மற்றும்
வீரர்அவர்! மக்களிலே மேல்கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும் என்போர்!
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க் கின்ற
செம்மைநலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்.

– பாரதிதாசன்

வினாக்கள்

1. பாரதியார் எத்தகையவர் எனப் பாரதிதாசன் கூறுகிறார்?
2. பாரதியார் எத்தகைய நினைப்புடையவர் அல்லர்?
3. மக்களிடையே நிலவும் பாகுபாடு குறித்துப் பாரதியார் கூறுவன யாவை?
4. பாடலில் இடம்பெற்றுள்ள பெயரெச்சங்களை எடுத்தெழுதுக.
5. பாடலுக்கேற்ற பொருத்தமான தலைப்பைத் தருக.

## மொழித்திறன் பயிற்சி

மயங்கொலிச் சொற்கள் – வேறுபாடு அறிந்து பொருள் எழுதுக.

(எ.கா.) ர, ற — அரை – பாதி — அறை – கட்டடப் பகுதி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ர, ற | உரை – | உறை – | | | |
| | கரை – | கறை – | | | |
| | கூரிய – | கூறிய – | | | |
| | கூரை – | கூறை – | | | |
| | பரவை – | பறவை – | | | |
| | இரங்கு – | இறங்கு – | | | |
| | எரிதல் – | எறிதல் – | | | |
| | இரை – | இறை – | | | |
| ண, ன | மணம் – | மனம் – | | | |
| | பணி – | பனி – | | | |
| | ஆணி – | ஆனி – | | | |
| ல, ழ, ள | அலை – | அழை – | அளை – | | |
| | இலை – | இழை – | இளை – | | |
| | உலை – | உழை – | உளை – | | |
| | கலை – | கழை – | களை – | | |
| | அலகு – | அழகு – | அளகு – | | |
| | வால் – | வாழ் – | வாள் – | | |
| | தால் – | தாழ் – | தாள் – | | |
| | ஆல் – | ஆழ் – | ஆள் – | | |

தமிழெண்களை அறிந்து கொள்வோம்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ௧ | 11 | ௧௧ | 21 | ௨௧ | 31 | ௩௧ | 41 | ௪௧ |
| 2 | ௨ | 12 | ௧௨ | 22 | ௨௨ | 32 | ௩௨ | 42 | ௪௨ |
| 3 | ௩ | 13 | ௧௩ | 23 | ௨௩ | 33 | ௩௩ | 43 | ௪௩ |
| 4 | ௪ | 14 | ௧௪ | 24 | ௨௪ | 34 | ௩௪ | 44 | ௪௪ |
| 5 | ௫ | 15 | ௧௫ | 25 | ௨௫ | 35 | ௩௫ | 45 | ௪௫ |
| 6 | ௬ | 16 | ௧௬ | 26 | ௨௬ | 36 | ௩௬ | 46 | ௪௬ |
| 7 | ௭ | 17 | ௧௭ | 27 | ௨௭ | 37 | ௩௭ | 47 | ௪௭ |
| 8 | ௮ | 18 | ௧௮ | 28 | ௨௮ | 38 | ௩௮ | 48 | ௪௮ |
| 9 | ௯ | 19 | ௧௯ | 29 | ௨௯ | 39 | ௩௯ | 49 | ௪௯ |
| 10 | ௧௦ | 20 | ௨௦ | 30 | ௩௦ | 40 | ௪௦ | 50 | ௫௦ |

பயிற்சி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | க | 11 | | 21 | | 31 | | 41 | |
| 2 | | 12 | | 22 | | 32 | | 42 | |
| 3 | | 13 | | 23 | | 33 | | 43 | |
| 4 | | 14 | | 24 | | 34 | | 44 | |
| 5 | | 15 | | 25 | | 35 | | 45 | |
| 6 | | 16 | | 26 | | 36 | | 46 | |
| 7 | | 17 | | 27 | | 37 | | 47 | |
| 8 | | 18 | | 28 | | 38 | | 48 | |
| 9 | | 19 | | 29 | | 39 | | 49 | |
| 10 | | 20 | | 30 | | 40 | | 50 | |

விடுபட்ட இடத்தில் தமிழெண்களை எழுதுக.

1. க, ______, ______, ______, ரு, ______, ______, அ, ______, ______.
2. கக, கஉ, ______, ______, ______, கரு, ______, ______, ______, உO.

கட்டுரைப் பயிற்சி

நான் விரும்பும் நூல் (திருக்குறள்)

குறிப்புச்சட்டகம்

முன்னுரை – பொருளுரை ( நூலின் அமைப்பு, நூல் கூறும் கருத்துகள், பயன்கள், நான் இந்நூலை விரும்புவதற்கான காரணம்) – நிறைவுரை.

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

இனியன், தன் வீட்டு வாயிலில் விளையாடிக்கொண்டிருந்தான். அவ்வழியே ஓய்வுபெற்ற அரசு அலுவலரும் தமிழ்ப் பற்றாளருமான தமிழவேள் வருகிறார். இனியனிடம், 'தம்பி, அப்பா இருக்கிறாரா ?' என வினவியபடியே வீட்டிற்குள் நுழைந்தார்.

அவரை வரவேற்ற இனியனின் தந்தை நம்பி, "வாங்க, வாங்க. இனியா..., சேர் எடுத்து வா, ஃபேன் சுவிட்சைப் போடு என்றார்.

தன் மனைவியை நோக்கி, கமலா... பிரிஜ்ஜிலிருந்து ஐஸ்வாட்டர் எடு" எனப் பரபரப்பாகக் கூறினார். நாற்காலியில் உட்கார்ந்தார், தமிழவேள்.

ஐயா டீ, கூல் ட்ரிங்ஸ் என்ன குடிக்கிறீர்கள் ? எனக் கேட்டார்.

தமிழவேள் பொறுமையுடன், "நம்பி! நல்ல தமிழ்ச்சொற்களை விடுத்து, ஏன் பிறமொழிச்சொற்களை வலிந்து பேசுகிறீர்கள் ?".

தமிழ்

சேர் என்பதனை நாற்காலி எனவும், ஃபேனை மின்விசிறி எனவும் கூறலாமல்லவா ?" என்றார். நம்பி, வெட்கத்துடன் தலைகுனிந்தார்.

தமிழ்ச்சொல்லறிவோம் !

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுவிட்ச் | – | சொடுக்கி | பிரிஜ் | – | குளிரூட்டும்பெட்டி |
| ஐஸ்வாட்டர் | – | குளிர்நீர் | டீ | – | தேநீர் |
| கூல் ட்ரிங்ஸ் | – | குளிர்சாறுகள் | வாஷிங்மெஷின் | – | வெளுக்கை இயந்திரம் |
| கிரைண்டர் | – | மின்அரைவை | டெலிபோன் | – | தொலைபேசி |

## வாழ்க்கைத்திறன்

### தன்னையறிதல்

பள்ளியில் முதல் பாடவேளை முடிந்து அடுத்த பாடவேளை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பள்ளியை ஆய்வுசெய்யும்பொருட்டுப் பள்ளித்துணை ஆய்வாளர் முன்னறிவிப்பின்றிப் பள்ளிக்கு வருகை புரிந்தார். தலைமையாசிரியரையும் அழைத்துக்கொண்டு முதலில் ஒரு வகுப்புக்குள் நுழைந்தார். ஆசிரியரும் மாணவர்களும் அவருக்கு வணக்கம் கூறினார்கள். ஆய்வாளர், ஆசிரியர் நடத்திக்கொண்டிருந்த பாடத்திலிருந்து மாணவர்களிடம் வினாக்களைக் கேட்டார்.

மாணவர்கள் விடை தெரியாததனால் அமைதியாக இருந்தார்கள். மூன்றாம் வரிசையில் இருந்த சுடரொளி எழுந்து விடைகூறத் தொடங்கினாள். தான் கேட்ட அனைத்து வினாக்களுக்கும் உரிய விடையைக் கூறிய சுடரொளியைப் பாராட்டிய ஆய்வாளர், அடுத்த வகுப்புக்குச் சென்றார். சுடரொளி விடை கூறியதனைக் கேட்ட அனைவரும் வியந்தனர். காரணம், வகுப்பிலேயே அவள்தான் பேசாமடந்தை. "வகுப்பில் நான் எதனைக் கேட்டாலும் பேசாமல் இருப்பாய். புதியவரான ஆய்வாளரிடம் தயக்கமின்றி உன்னால் எவ்வாறு பேசமுடிந்தது ?" என ஆசிரியர் கேட்டார்.

"எனக்கு விடைதெரிந்தாலும் தவறாக இருக்குமோ என்னும் ஐயத்தினால் விடைகூறத் தயங்குவேன். இன்று யாருமே விடைகூறாததனால், ஆய்வாளர் நம் பள்ளியைப்பற்றித் தவறாக எண்ணிவிடுவாரே என்பதனால், துணிந்து கூறிவிட்டேன்" என்றாள், சுடரொளி.

"நானும் இந்நாள்வரை உனக்கு விடைதெரியாததனால்தான் பேசாமல் இருக்கிறாய்" என நினைத்தேன். உன்னையே நீயும் அறிந்துகொள்ளாமல் இருந்திருக்கிறாய். உன்னால் முடியும் என அறிந்து செயல்படு" என ஆசிரியர் ஊக்கப்படுத்தினார்.

1. உங்களுக்கு இதுபோன்ற நிகழ்வு எப்பொழுதாவது நிகழ்ந்திருக்கிறதா ?
2. உங்களிடமுள்ள திறனும் திறனின்மையும் என்னென்ன ?

உன்னையே நீ அறிவாய் – சாக்ரடீஸ்

மதிப்புக்கல்வி

கடமை

நீதிபதி பம்மல் சம்பந்தனாரின் துணைவியார் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தியைக் கேட்டதனால், அவர் நீதிமன்றத்திற்கு அன்று வரமாட்டார் என்று பலரும் நினைத்தனர்.

ஆனால் பம்மல் சம்பந்தனார், தமது துணைவிக்குச் செய்யவேண்டிய அனைத்துக் காரியங்களையும் செய்துவிட்டுச் சரியாக 11.00 மணிக்கு நீதிமன்றம் வந்தார். அவரைப் பார்த்ததும், அனைவரும் வியப்படைந்தனர்.

“இன்றுகூடவா நீங்கள் வரவேண்டும்?’’ என்று மற்றொரு நீதிபதி கேட்டார்.

அதற்கு, “என் வருத்தம் என்னோடுதான் இருத்தல் வேண்டும். இன்று பார்க்கவேண்டிய வழக்கைத் தள்ளிவைத்துவிட்டு மற்றவர்களுக்குத் துன்பத்தைத் தரக் கூடாது,’’ என்று கூறினார்.

இழப்பிலும் கடமை உணர்வுடன் வாழ்ந்தார், பம்மல் சம்பந்தனார்.

மொழியாக்கம் செய்க.

Air pollution is high in the urban and industrial centers. It threatens the life of the people and animals. The gases from industrial centers go higher than oxygen in the air and make it polluted. Pollution affects plants, animals and human beings. It causes diseases like asthma and cancer. Children are easily affected.

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. Bend the tree while it is young.
   ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?
2. As is the mother, so is her daughter.
   தாயைப்போலப் பிள்ளை; நூலைப்போலச் சேலை.
3. A friend in need is a friend indeed.
   உயிர்காப்பான் தோழன்.
4. A man of courage never wants weapons.
   வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
5. Blood is thicker than water.
   தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.

தமிழ்

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
| --- | --- |

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.

அறிஞர் அண்ணாவின் சிறுவயதில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. ஒருநாள் இவரின் பெற்றோர் வெளியில் சென்றிருக்க, வீட்டில் பாட்டி மட்டுமே இருந்தார். அப்போது அவர், தம் நண்பர் சிலரை அழைத்துக்கொண்டு, வீட்டின் பின்புறம் சென்றார். அங்கு அனைவரும் சேர்ந்து 'அரிச்சந்திரா' நாடகம் நடத்தத் திட்டமிட்டனர்.

அறிஞர் அண்ணா, அரிச்சந்திரன் வேடம் புனைந்து நடிக்கத் தொடங்கினார். வீட்டின் பின்புறத்திலிருந்து ஏதோ பேரொலியைக் கேட்ட அவர்தம் பாட்டி, என்னவென்று அறிய அங்கு விரைந்து சென்றார். அவரைக் கண்டதும் அண்ணாவின் நண்பர் சிட்டாகப் பறந்துவிட்டனர்; அதனால், நாடகம் இடையிலேயே நின்றது. அண்ணா மட்டும் பாட்டியிடம் தனியாக மாட்டிக் கொண்டார்.

அவர் அண்ணாவிடம், 'இங்கு என்ன நடந்தது? கூச்சல் ஏன் ஏற்பட்டது?' என வினவினார். 'ஒன்றுமில்லை' எனக் கூறி, பாட்டியிடமிருந்து அண்ணா தப்பித்துக் கொண்டிருக்கலாம்.

நண்பர் யாரும் அவருடன் இல்லாததனால் அண்ணா கூறுவதனைப் பாட்டியும் நம்பியிருக்கலாம்; ஆனால், 'அரிச்சந்திரன் வேடம் போட்டவராயிற்றே, பாட்டியிடம் எப்படிப் பொய் கூறுவார்?' அதனால், அண்ணா உண்மையைக் கூறிவிட்டார். 'படிக்கிற பையனுக்கு நாடகம் என்னடா வேண்டியிருக்கு?' எனக் கூறி, அண்ணாவின் முதுகில் அடித்தார், பாட்டி.

அன்று நாடகம் போட்டதற்காக அடி வாங்கிய அறிஞர் அண்ணாதான் பிற்காலத்தில் ஆசிரியர் கல்கி அவர்களால் 'தமிழ் நாடகக்கலைக்கு ஒரு பெர்னாட்ஷா' எனப் பாராட்டப்பட்டார். ( அயர்லாந்து நாட்டைச் சார்ந்த ஜார்ஜ் பெர்னாட்ஷா புகழ்பெற்ற எழுத்தாளரும் சிறந்த நாடக ஆசிரியரும் ஆவார். )

### வினாக்கள்

1. அறிஞர் அண்ணா, தம் நண்பருடன் வீட்டின் பின்புறம் ஏன் சென்றார்?
2. நாடகத்தில் அறிஞர் அண்ணா புனைந்த வேடம் என்ன?
3. நாடகம் இடையில் நிற்கக் காரணம் யாது?
4. அறிஞர் அண்ணா, பாட்டியிடம் உண்மையை மறைக்காதது, ஏன்?
5. இவ்வுரைப்பத்திக்கு ஏற்புடைய தலைப்பைத் தருக.

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

கீழ்க்காணும் பாடலைப் படித்து, அதன்பொருள்குறித்து ஐந்து மணித்துளி பேசுக.

### நிலமகளே வெல்வாள்!

நமக்கென்றே இருப்பவளை வாழ்நாள் எல்லாம்
நலிவுறுத்தி வருகின்றோம்; தலை யிடத்துச்
சுமக்கவென மரம்வைத்தோம்; மனைகள் கட்டத்
தூண்வைத்தோம்; கல்வைத்தோம்; காலும் வைத்தோம்;
எமக்கென்ன என்றவள்மேல் உமிழு கின்றோம்;
இரும்பெடுத்தே அவளுடலை அகழு கின்றோம்;
சுமக்கின்றாள்; பொறுக்கின்றாள்; பொறுமை சாலி!
தொழிலாளி போலிருக்கும் திறமை சாலி!

கடல்சுமந்தாள்; மலைசுமந்தாள்; கான்சு மந்தாள்;
கால்நடைகள் பலசுமந்தாள்; மாந்தர் என்ற
உடல்சுமந்தாள்; வயல்சுமந்தாள்; நதிசு மந்தாள்;
ஊர்சுமந்தாள்; நகர்சுமந்தாள்; செடிசு மந்தாள்;
குடல்சுமந்து பெற்றெடுத்த அன்னை இல்லாக்
குலப்பிள்ளை போலாகி நின்றாள்; அந்தோ!
மிடல்சுமந்த அவள்உறுத்துச் சினந்து நின்றால்
மேலாளர் வாழ்வெங்கே? அவளே வெல்வாள்!

– முடியரசன், மனிதனைத் தேடுகின்றேன்

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் நிகழ்வை வாய்க்குள் படிக்க.

வறுமையில் வாடிய புலவரொருவர், திருவேங்கடநாதர் என்னும் வள்ளலைப்பற்றிக் கேள்விப்பட்டு அவரைத் தேடிச் சென்றார். வள்ளல், புலவரை வரவேற்று மகிழ்ந்தார். அவர், புலவரிடம் வினாக்கள் சிலவற்றைக் கேட்டார். வள்ளல் கேட்ட எந்த வினாவுக்கும் விடையளிக்காத புலவர், இறுதியாகத் திருவேங்கடநாதா எனக் கூறினார். புலவர் அவ்வாறு கூறியவுடன், வள்ளல் மிகவும் மகிழ்ந்து புலவருக்குப் பொன்னும் பொருளும் வாரி வழங்கினார். வள்ளல் கேட்ட வினாக்கள்தான் என்ன? அவர் பொன்னும் பொருளும் வாரி வழங்கியது, ஏன்?

| | |
|---|---|
| புலவரே, உம்மிடம் இல்லாதது என்ன? | திரு (செல்வம்) |
| உங்கள் உள்ளம் எப்படி உள்ளது? | வேம் (வேகின்றது) |
| உணவுக்கு என்ன செய்கிறீர்கள்? | கடம் (கடன்பட்டுத்தான்) |
| சுவையற்றது எது? | நா (என் நாக்கு) |
| கொடு என்பதன் வேறு சொல் என்ன? | தா |

| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களை அகரவரிசையில் எழுதுக.

கைவேலை, சக்கரம், கெஞ்சினான், குங்குமம், காட்சிக்கூடம், கம்பராமாயணம், சேவடி, சித்திரைத்திங்கள், சொல்லேருழவர், செந்தமிழ்

க – ________ , ________ , ________ , ________ , ________

ச – ________ , ________ , ________ , ________ , ________

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.

திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழி. திராவிடம் என்னும் சொல் திராவிட நாடு என்னும் பொருளைத் தருவது. திராவிட மொழிகள், திராவிட இனம், திராவிட நாகரிகம் முதலிய சொற்றொடர்களில் திராவிடம் என்னும் சொல் பெயரடையாக வந்துள்ளது எனக் கால்டுவெல், தமது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவரே திராவிடம் என்னும் சொல்லைப் பயன்பாட்டுக்குக்கொண்டு வந்தார்.

| குறிப்புகளைக்கொண்டு உரைப்பத்தியமைத்தல் | செயல்பாடு – 6 |
|---|---|

கீழ்க்காணும் குறிப்புகளைக்கொண்டு, உரைப்பத்தியமைத்து எழுதுக. பத்திக்கு ஏற்புடைய தலைப்பைத் தருக.



கம்பர்

பிறப்பு – நாகப்பட்டினம் மாவட்டம் – மயிலாடுதுறை – தேரழுந்தூர் – பணி – குலோத்துங்கச் சோழனின் அவைப் புலவர் – சிறப்பு – கவிச்சக்ரவர்த்தி, கல்வியில் பெரியவர் கம்பர் – இயற்றிய நூல்கள் – ஏர் எழுபது, சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம், கம்பராமாயணம் – ஆதரித்தவர் – திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் – காலம் – கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________

| பாடலில் இடம்பெற்றுள்ள நயங்களை எழுதுதல் | செயல்பாடு – 7 |
|---|---|

கீழ்க்காணும் குறட்பாக்களில் இடம்பெற்றுள்ள நயங்களை அட்டவணைப்படுத்துக.

| வ. எண் | குறள் | மோனை | எதுகை | அணி |
|---|---|---|---|---|
| 1. | அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை. | | அகழ்வாரைத் இகழ்வார்ப் | உவமையணி |
| 2. | இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை. | | | |
| 3. | ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. | | | |
| 4. | திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்(து) அறனல்ல செய்யாமை நன்று. | | | |
| 5. | மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம் தகுதியான் வென்று விடல். | | | |

| எழுதுதல் | செயல்பாடு – 8 |
|---|---|

உரையாடலில் உள்ள கணினிப் பயன்பாட்டுச் சொற்களைக் கண்டறிந்து அவற்றுக்கான தமிழ்ச்சொற்களை எழுதுக.

அன்பு : வா கதிர். . . ஏதோ உதவி வேண்டும் என்றாயே ?

கதிர் : ஆமாம், அன்பு. உன் கம்பியூட்டரில் ‘இண்டர்நெட்’ வசதி உள்ளதா ?

அன்பு : ஓ. . . இருக்கிறதே. ஏன், உன் ‘கம்பியூட்டர்’ என்ன ஆனது ?

கதிர் : என்னுடைய ‘மௌஸ்’ கீழே விழுந்து உடைந்துவிட்டது; அதனால், எனக்குத் தேவையான புதுக்கவிதைகளை விரைவாக ‘டவுன்லோட்’ செய்ய முடியவில்லை.

அன்பு : புதுக்கவிதைகளா ? நான் அவற்றை என் ‘பைலில்’ வைத்துள்ளேன், பார்க்கிறாயா ?

கதிர் : அப்படியா, காட்டு.

அன்பு : இந்தக் கவிதைகள் போதுமா, இன்னும் வேண்டுமா ?

கதிர் : இப்போதைக்கு இவை போதும். ‘காபி’ பண்ணித் தருகிறாயா ?

அன்பு : ‘சிடி’யிலா ?

கதிர் : இல்லை, அன்பு. ‘பென் டிரைவி’ல்.

அன்பு : சரி, கொடு.

கதிர் : மிக்க நன்றி, அன்பு.

தமிழ்

| வ. எண் | கணினிப் பயன்பாட்டுச் சொற்கள் | தமிழ்ச் சொற்கள் | வ. எண் | கணினிப் பயன்பாட்டுச் சொற்கள் | தமிழ்ச் சொற்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | கம்பியூட்டர் | கணினி | 5. | | |
| 2. | | | 6. | | |
| 3. | | | 7. | | |
| 4. | | | 8. | | |

| வகைப்படுத்துதல் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் பாடலடிகளில் இடம்பெற்றுள்ள அளபெடைகளைக் கண்டறிந்து வகைப்படுத்தி எழுதுக.

1. ‘இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்கு’
2. ‘எஃஃகு கிலங்கிய கையரா யின்னுயிர்’
3. ‘உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்’
4. ‘அழாஅல் தோழி அழுங்குவர் செலவே’
5. ‘உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்’

| உயிரளபெடை | | | ஒற்றளபெடை | |
|---|---|---|---|---|
| செய்யுளிசை | இன்னிசை | சொல்லிசை | ஒற்று அளபெடுத்தல் | ஆய்தம் அளபெடுத்தல் |
| | விழைவதூஉம் | | | |

| விடுகதைக்கு விடைகாணல் | செயல்பாடு – 10 |
|---|---|

விடுகதைகளுக்கான விடையை எழுதுக.

1. ஆற்றைக் கடக்கும்; அக்கரைக்குப் போகாது;
   தண்ணீரைக் கலக்காது; தானும் நனையாது. அஃது என்ன?

   ______________________

2. ஆயிரம்பேர் அணிவகுப்பர்;
   ஆனாலும் தூசி கிளம்பாது. அவர் யாவர்?

   ______________________

3. கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டுவீடு;
ஓட்டுவீட்டைப் பிரித்தால் வெள்ளை மாளிகை;
வெள்ளை மாளிகை உள்ளே குளம். அஃது என்ன ?

______________________

4. முன்னும் பின்னும் போவான்; ஆனால், ஒற்றைக் காலில் நிற்பான் அவன் யார் ?

______________________

| படைப்பாற்றல் | செயல்பாடு – 11 |
|---|---|

சிறுகதையொன்றின் தொடக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதனைக்கொண்டு, உங்கள் கற்பனைக்கேற்பக் கதையைத் தொடர்ந்து எழுதுக. கதைக்கு ஏற்புடைய தலைப்பைத் தருக.

பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்த கயல்விழி, தன் தந்தையைப் பார்த்ததும் ஆவலுடன் பேசத் தொடங்கினாள்.

'அப்பா, எங்கள் பள்ளியில் இன்று நடைபெற்ற பேச்சுப்போட்டியில் ........

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

**1. வினாக்களுக்கு உரிய விடையைத் தேர்ந்தெடுக்க.** 2 × 1 = 2

அ. திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மருள் ஒருவர் ______________ .

1. இளம்பூரணர் 2. நச்சர்
3. பேராசிரியர் 4. ந. மு. வேங்கடசாமி

ஆ. தென்திராவிட மொழிகளுள் ஒன்று ______________ .

1. தெலுங்கு 2. மால்தோ
3. தமிழ் 4. உருது

**2. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 3 × 1 = 3

அ. மிகப் பழைமையான தமிழ் இலக்கண நூல் __________ .

ஆ. குலோத்துங்கச் சோழனின் அவைப்புலவர் __________ .

இ. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை __________ .

**3. பாடலடிகளில் உள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.** 5 × 1 = 5

உலகம் யாவையும் தாமுல வாக்கலும்
நிலைபெ ருத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரன் நாங்களே.

## சிறுபஞ்சமூலம்

கண்வனப்புக் கண்ணோட்டம், கால்வனப்புச் செல்லாமை,
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல், – பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல், கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டான்நன் றென்றல் வனப்பு. *

– காரியாசான்

பொருள் : கண்ணுக்கு அழகு இரக்கம் கொள்ளல்; காலுக்கு அழகு பிறரிடம் இரந்து செல்லாமை; ஆராய்ச்சிக்கு அழகு தமது முடிவைத் துணிந்துரைத்தல்; இசைக்கு அழகு அதனைக் கேட்போர் நன்றெனப் புகழ்தல்; அரசனுக்கு அழகு, குடிமக்களை வருத்தாமல் காப்பவன் என்று, பிறர் அவனைப் புகழ்ந்து உரைத்தல்.

சொற்பொருள் : கண்ணோட்டம் – இரக்கம் கொள்ளுதல்; எண்வனப்பு – ஆராய்ச்சிக்கு அழகு; வனப்பு – அழகு; கிளர்வேந்தன் – புகழுக்கு உரிய அரசன்; வாட்டான் – வருத்த மாட்டான்.

இலக்கணக்குறிப்பு : கண்ணோட்டம், செல்லாமை, உரைத்தல், என்றல் – தொழிற்பெயர்கள்; கேட்டார், வாட்டான் – வினையாலணையும் பெயர்கள்.

பகுபத உறுப்பிலக்கணம் : கேட்டார் = கேள் (ட்) + ட் + ஆர். கேள் – பகுதி; ள் – ட் ஆனது விகாரம்; ட் – இறந்தகால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.
அணி : சொற்பொருள் பின்வருநிலையணி.

ஆசிரியர் குறிப்பு : காரியாசான், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர் எனச் சிறப்புப்பாயிரம் கூறுகிறது. இவர், சமண சமயத்தைச் சார்ந்தவர். இவரும் கணிமேதாவியாரும் ஒருசாலை மாணாக்கராவர். பெரும்பான்மை பொது அறக்கருத்துகளும் சிறுபான்மை சமண அறக்கருத்துகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

நூற்குறிப்பு : சிறுபஞ்சமூலம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் காரியாசான். இந்நூலில், கடவுள் வாழ்த்துடன் தொண்ணூற்றேழு வெண்பாக்கள் உள்ளன. கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து மூலிகையின் வேர்களும் உடல்நோயைத் தீர்ப்பன. அதுபோல, இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள ஐந்து கருத்தும் மக்கள் மனநோயைப் போக்குவன. ஆகையால், இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தைக்கொண்டு நிரப்புக.

   1. கண்ணுக்கு அழகு க ___ ணோட்டம். (ன்/ண்)
   2. எ ___ வனப்பு இத்துணையாம் எ ___ றுரைத்தல். (ன்/ண்)

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

   1. பண்ணுக்கு அழகு __________ நன்றென்றல்.
   2. பிறரிடம் இரந்து செல்லாமை ______________ அழகு.

3. விடைக்கேற்ற வினா அமைக்க.

   1. காலுக்கு அழகு பிறரிடம் இரந்து செல்லாமை.
   2. சிறுபஞ்சமூலத்தை இயற்றியவர் காரியாசான்.

### ஆ) குறுவினாக்கள்

1. சிறுபஞ்சமூலம் – குறிப்பு எழுதுக.
2. காரியாசான் – சிறுகுறிப்பு எழுதுக.

### இ) சிறுவினா

சிறுபஞ்சமூலம் கூறும் வனப்புகளைத் தொகுத்தெழுதுக.

### அறிந்துகொள்க.

**பின்வருநிலையணி**

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ பொருளோ பின்னர்ப் பலவிடத்தும்வரின் அது பின்வருநிலையணி ஆகும். இது, சொல்பின்வருநிலையணி, பொருள்பின்வருநிலையணி, சொற்பொருள் பின்வருநிலையணி, உவமைப் பின்வருநிலையணி என நால்வகைப்படும்.

**சொற்பொருள் பின்வருநிலையணி**

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் அதன் பொருளும் பின்னர்ப் பலவிடத்தும்வரின் அது, சொற்பொருள் பின்வருநிலையணியாம்.

'கண்வனப்புக் கண்ணோட்டம். . .' என்னும் சிறுபஞ்சமூலப் பாடலில் சொற்பொருள் பின்வருநிலையணி பயின்று வந்துள்ளது. இப்பாடலில் 'வனப்பு' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து 'அழகு' என்னும் பொருளைத் தருகின்றது.

# பாஞ்சாலி சபதம்

– பாரதியார்

## முன்கதைச் சுருக்கம்

இந்திர மாநகரை ஆண்டுவந்த பாண்டவர், மண்டபம் ஒன்றனைக் கட்டி, அதில் வேள்வி நடத்தினர். அவ்வேள்வியில் கலந்துகொண்ட பேரரசர்களும் சிற்றரசர்களும் அன்பளிப்புகள் வழங்கியதனைக் கண்டு பொறாமைகொண்டான் அத்தினாபுர மன்னன் துரியோதனன். மேலும் துரியோதனன், பாஞ்சாலியின் நகைப்புக்கும் ஆளானதனால், பாண்டவர் வாழ்வை எப்படியாவது அழிக்கவேண்டும் என எண்ணினான். அதற்காகத் துரியோதனன், தன் மாமன் சகுனியின் உதவியை நாடினான். சகுனி, “நாமும் ஒரு மண்டபம் அமைத்து, அதனைக் காண்பதற்குப் பாண்டவரை அழைப்போம்; தருமனைச் சூதாடச் செய்து, நாம் நினைத்ததனை முடிப்போம்” என்றான். இத்திட்டத்துக்குத் துரியோதனனின் தந்தை திருதராட்டிரன் முதலில் ஒப்புக்கொள்ளவில்லை; பின்னர், விதியின் வலிமையை எண்ணி ஒப்புக்கொண்டான். திட்டத்தின்படி, திருதராட்டிரன் வினைஞர்களை அழைத்து அழகிய மண்டபம் ஒன்றனை அமைக்கச் செய்தான். அம்மண்டபத்தைக் காண, பாண்டவரை அழைத்து வருமாறு தம்பி விதுரனைத் தூதுவிட்டான். விதுரனைத் தூதுவிடல், தூது சென்ற விதுரன் பாண்டவரின் நாட்டுவளங் கண்டு மகிழ்தல், பாண்டவர் விதுரனை எதிர்கொண்டு வரவேற்றல் ஆகிய நிகழ்வுகள் இப்பாடப் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

### விதுரனைத் தூதுவிடல்

1. தம்பி விதுரனை மன்னன் அழைத்தான்
 தக்க பரிசுகள் கொண்டினி தேகி
எம்பியின் மக்க ளிருந்தர சாளும்
 இந்திர மாநகர் சார்ந்தவர் தம்பால்
“கொம்பினை யொத்த மடப்பிடி யோடும்
 கூடியிங் கெய்தி விருந்து களிக்க
நம்பி அழைத்தனன் கௌரவர் கோமான்
 நல்லதோர் நுந்தை” யெனவுரை செய்வாய்.

பொருள் : மன்னன் திருதராட்டிரன் தன்தம்பி விதுரனை அரண்மனைக்கு அழைத்தான். பாண்டுவின் மக்கள் ஆட்சிசெய்யும் இந்திர மாநகருக்குத் தக்க பரிசுகளுடன் சென்று, பாஞ்சாலியோடு பாண்டவரைத் தாம் விருந்துக்கு அழைத்த செய்தியை அவர்களிடம்கூறி, அழைத்து வருமாறு பணித்தான்.

சொற்பொருள்: எம்பி – என் தம்பி; மடப்பிடி–பாஞ்சாலி; களிக்க – மகிழ; கோமான் – அரசன் (திருதராட்டிரன்); நுந்தை – நும் தந்தை.

இலக்கணக்குறிப்பு: மாநகர் – உரிச்சொற்றொடர்; சார்ந்தவர் – வினையாலணையும் பெயர்; நுந்தை – நும் தந்தை என்பதன் மரூஉ.

2. அண்ணனிடம் விடைபெற்று விதுரன் சென்றான்
அடவிமலை யாறெல்லாம் கடந்து போகித்
திண்ணமுறு தடந்தோளும் உளமுங் கொண்டு
திருமலியப் பாண்டவர்தாம் அரசு செய்யும்
வண்ணமுயர் மணிநகரின் மருங்கு செல்வான்
வழியிடையே நாட்டினுறு வளங்கள் நோக்கி
எண்ணமுறல் ஆகித்தன் இதயத் துள்ளே
இனையபல மொழிகூறி யிரங்கு வானால். *

பொருள் : தன் தமையனாகிய திருதராட்டிரனிடம் விதுரன் விடைபெற்றான்; காடு, மலை, ஆறு ஆகியவற்றையெல்லாம் கடந்து, வலிமைமிக்க தோளும் மனவுறுதியும் கொண்ட பாண்டவர்கள் ஆட்சிபுரியும் வளமிக்க அழகிய நகரை நோக்கிச் சென்றான். செல்லும் வழியெல்லாம் நாட்டின் மிகுந்த வளங்களைக் கண்டு, தன் எண்ணத்தில் இருத்தி, உள்ளம் நெகிழ்ந்து, அந்நாட்டின் எதிர்காலம் கருதி இரக்கப்பட்டான்.

சொற்பொருள் : அடவி – காடு; தடந்தோள் – வலியதோள்; மணிநகர் – அழகிய நகரம்; மருங்கு – பக்கம்.

இலக்கணக்குறிப்பு : அடவிமலையாறு – உம்மைத்தொகை; கடந்து – வினையெச்சம்; தடந்தோள் – உரிச்சொற்றொடர்.

பகுபத உறுப்பிலக்கணம் : கடந்து = கட + த் (ந்) + த் + உ. கட – பகுதி; த் – சந்தி; த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி. செல்வான் = செல் + வ் + ஆன். செல் – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

3. நீலமுடி தரித்தபல மலைசேர் நாடு
நீரமுத மெனப்பாய்ந்து நிரம்பு நாடு
கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழுங்
குளிர்காவுஞ் சோலைகளுங் குலவு நாடு
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்கப்
பாலடையும் நறுநெய்யும் தேனும் உண்டு
பண்ணவர்போல் மக்களெலாம் பயிலு நாடு.

பொருள் : நீலநிற மேகங்கள் தவழ்கின்ற பல மலைகளைக் கொண்ட நாடு; அம்மலை களிலிருந்து வருகின்ற அருவி நீரானது அமுதமாகப் பாய்ந்து வளஞ் செய்கின்ற நாடு. அழகு மிக்க பயன்தரு மரங்கள் நிறைந்த குளிர்ந்த காடுகளும், பூக்கள் நிறைந்த

தமிழ்

சோலைகளும் கலந்திருக்கின்ற நாடு. உலகில் வாழ்கின்ற மக்களைப் பசியின்றிக் காப்பதற்கு ஏற்ற நன்செய், புன்செய்ப் பயிர்கள் செழித்து வளம்சேர்க்கின்ற நாடு. பாலாடை, நறுமண நெய், தேன் ஆகியவற்றை உண்டு தேவர்கள்போல் மக்கள் மகிழ்ந்திருக்கின்ற நாடு.

சொற்பொருள் : கோலமுறு – அழகுமிக்க; செறிந்து – அடர்ந்து; கா – காடு; குலவு – விளங்கும்; ஞாலம் – உலகம்; பண்ணவர் – தேவர்.

இலக்கணக்குறிப்பு : பாலடையும் நறுநெய்யும் தேனும் – எண்ணும்மை. நீலமுடி, நன்செய், புன்செய் – பண்புத்தொகைகள்; பாய்ந்து, செறிந்து – வினையெச்சங்கள்; ஞாலமெலாம், மக்களெலாம் – எல்லாம் என்பதன் தொகுத்தல் விகாரம்; காத்தல் – தொழிற்பெயர்.

4. பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கு நாடு
பெண்களெல்லாம் அரம்பையர்போல் ஒளிரு நாடு
வீரமொடு மெய்ஞ்ஞானந் தவங்கள் கல்வி
வேள்வியெனு மிவையெல்லாம் விளங்கு நாடு
சோரமுதற் புன்மையெதுந் தோன்றா நாடு
தொல்லுலகின் முடிமணிபோல் தோன்று நாடு
பாரதர்தந் நாட்டிலே நாச மெய்தப்
பாவியேன் துணைபுரியும் பான்மை யென்னே!

பொருள் : சிறப்புமிக்க அறச்செயல்களாலும் பெருமைமிகு தொழில் வளத்தாலும் சிறப்புற்ற நாடு; பெண்கள், தேவமகளிர்போல் ஒளிர்கின்ற நாடு; வீரம், மெய்யறிவு, தவம், கல்வி, வேள்வி ஆகிய இவையனைத்தும் நிறைந்த நாடு; நெறி பிறழ்ந்த செயல்கள் இந்நாட்டில் இல்லாத காரணத்தால் பழைமையான இவ்வுலக மக்களுக்கு மணிமுடிபோல் தோன்றுகின்ற நாடு; இத்தகைய பாண்டவர் நாடு அழியும் பாவச்செயலுக்குத் தானும் துணைபுரிய நேர்ந்ததனை எண்ணி விதுரன் வருந்தினான்.

சொற்பொருள் : அரம்பையர் – தேவமகளிர்; ஞானம் – அறிவு ; புன்மை – நெறி பிறழ்ந்தசெயல்கள்

இலக்கணக்குறிப்பு : தொல்லுலகு – பண்புத்தொகை.

5. விதுரன் வருஞ்செய்தி தாஞ்செவி யுற்றே
வீறுடை ஐவர் உளமகிழ் பூத்துச்
சதுரங்கச் சேனை யுடன்பல பரிசும்
தாளமும் மேளமும் தாம்கொண்டு சென்றே
எதிர்கொண் டழைத்து மணிமுடி தாழ்த்தி
ஏந்தல் விதுரன் பதமலர் போற்றி
மதுர மொழியிற் குசலங்கள் பேசி
மன்ன னொடுந்திரு மாளிகை சேர்ந்தார்.

பொருள் : விதுரன் வருகின்ற செய்தியைக் கேட்ட வலிமை மிக்க பாண்டவர் ஐவரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர்; நால்வகைப் படைகளுடன் பல பரிசுகளும் கொண்டு

மேளதாளத்துடன் விதுரனை எதிர்கொண்டு அழைத்து மணிமுடி தாழ்த்திச் சிறப்புக்குரிய அவர்தம் திருவடி மலர்களை வணங்கினர்; இனிய மொழியில் நலம் கேட்டனர். மன்னர்குலத் தோன்றலான விதுரனை அழைத்துக்கொண்டு தம் அரண்மனைக்குச் சென்றனர்.

சொற்பொருள் : வீறு – வலிமை; சதுரங்கச்சேனை – நால்வகைப் படை; மதுரமொழி – இனிய மொழி; குசலங்கள் பேசி – நலன் கேட்டு.

இலக்கணக் குறிப்பு : தாளமும் மேளமும் – எண்ணும்மை; பதமலர் – உருவகம்.



### ஆசிரியர் குறிப்பு

சுப்பிரமணிய பாரதியார், தற்போதைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் **11.12.1882**அன்று பிறந்தார். இவர்தம் பெற்றோர் சின்னசாமி – இலக்குமி அம்மையார் ஆவர். இவரின் துணைவியார் செல்லம்மாள்.

சிறந்த படைப்பாளரான பாரதியார் குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய நூல்களைப் படைத்தளித்தார். நாடு, மொழி, இறை, பெண்மை முதலிய பாடுபொருள்களில் எண்ணற்ற பாடல் இயற்றினார். ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலிய உரைநடை இலக்கியங்களையும் எழுதினார்.

இவர் **11. 09. 1921**அன்று மறைந்தார்.

### நூற்குறிப்பு

இப்பாடப்பகுதி, பாரதியாரின் முப்பெரும் படைப்புகளுள் ஒன்றாகிய பாஞ்சாலி சபதம் என்னும் காப்பியத்தின் சூழ்ச்சிச்சருக்கத்தில் இடம்பெற்றுள்ளது. அனைவரும் அறிந்த இதிகாசக் கதையை எளிய சொற்கள், எளிய நடை, எளிய சந்தம் ஆகியவற்றுடன் கூடிய பெண்ணுரிமைக் காப்பியமாகத் தமிழில் பாரதி வடித்துத் தந்ததே பாஞ்சாலி சபதம். இது, வியாசரின் பாரதத்தைத் தழுவி எழுதப் பெற்றது. பாஞ்சாலி சபதம் இரு பாகத்தைக் கொண்டது. இது சூழ்ச்சிச்சருக்கம், சூதாட்டச்சருக்கம், அடிமைச்சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபதச்சருக்கம் என ஐந்து சருக்கத்தையும் நானூற்றுப் பன்னிரண்டு பாடலையும் கொண்ட குறுங்காப்பியம்.

### சிறப்பு

பாரதியார் பாட்டுக்கொரு புலவன், நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா, தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி, தேசியக்கவி, மாக்கவி என்றெல்லாம் புகழப்பெற்றார்; சுதேசமித்திரன், இந்தியா முதலிய இதழ்களின் ஆசிரியராக இருந்தார்; இந்திய விடுதலைக்குப் பாடுபட்டார்.

தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவதில்லை. – பாரதிதாசன்

தமிழ்

தமிழ்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தைக்கொண்டு நிரப்புக.
   1. தட ___ தோளும் உளமு ___ கொண்டு ( ங்/ந் )
   2. பே ___ றமும் பெருந்தொழிலும் பி ___ ங்கு நாடு ( ற/ர )
   3. வீ ___ டை ஐவ ___ ளமகிழ் பூத்து ( ரு/று )
2. கோடிட்ட இடத்தை நிரப்புக.
   1. நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா எனப் பாராட்டப் பெற்றவர் ______________ ஆவார்.
   2. துரியோதனனின் தந்தை ______________ ஆவார்.
3. சொல்லைப் பொருளோடு பொருத்துக.

| | | |
|---|---|---|
| வனப்பு | – | இனிமை |
| பிடி | – | காடு |
| அடவி | – | அழகு |
| மருங்கு | – | பெண் யானை |
| வீறு | – | பக்கம் |
| மதுரம் | – | வலிமை |

4. இடஞ்சுட்டி விளக்குக.
   1. பாரதர்தந் நாட்டிலே நாச மெய்தப்<br>பாவியேன் துணைபுரியும் பான்மை யென்னே!
   2. மதுர மொழியிற் குசலங்கள் பேசி<br>மன்ன னொடுந்திரு மாளிகை சேர்ந்தார்.

### ஆ) குறுவினாக்கள்

1. பாஞ்சாலி சபதம் – குறிப்பு எழுதுக.
2. விதுரனை யாரிடம் யார் தூது அனுப்பினார் ?
3. விதுரன் எதற்காகத் தூது சென்றான் ?
4. விதுரன் எவற்றையெல்லாம் கடந்து தூது சென்றான் ?
5. விதுரன் எதனை நினைத்து வருந்தினான் ?

### இ) சிறுவினாக்கள்

1. மன்னன், விதுரனிடம் யாது கூறித் தூதனுப்பினான் ?
2. விதுரன் வழியில் கண்ட காட்சிகளைப்பற்றி எழுதுக.
3. விதுரனைப் பாண்டவர் எவ்வாறு வரவேற்றனர் ?

### ஈ) நெடுவினா

விதுரன் தூது சென்றதனைத் தொகுத்தெழுதுக.

# இக்காலக் கவிதைகள்

இருபதாம் நூற்றாண்டில் அறிவியலும் இலக்கியமும் விரைவாக வளர்ந்தன. காலம் பல கண்ட தமிழ்மொழியும் புத்தம் புதிய இலக்கியவகைகளை ஏற்றுத் துறைதோறும் துறைதோறும் நன்கு வளர்ந்து தழைத்துச் செழித்தது. தமிழ்மொழியில் செய்யுள், உரைநடை என்னும் இரு வடிவிலும் புதுவகை இலக்கியங்கள் மலர்ந்துள்ளன.

## கவிதைப் பொருள்

இருபதாம் நூற்றாண்டின் உரைநடைவளத்தைக் கருத்திற்கொண்டு நோக்கும்போது இக்காலத்தை உரைநடைக் காலம் எனலாம். எனினும், கவிதை வடிவமும் கவினுற வளர்ந்து வந்தது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகனார், நாமக்கல் இராமலிங்கனார் எனக் கவிஞர் பலர் தோன்றி, நாடு, மொழி, இனம், சமுதாயம், கலை எனப் பலவற்றைப் பாடினர்.

## மரபுக்கவிதை

பாரதியின் கவிதைகள் இருபதாம் நூற்றாண்டில் அரும்பிய மறுமலர்ச்சிக்கு வித்தாக அமைந்தன. மன்னர்களை மட்டுமே மகிழ்வித்து வந்த கவிதை மரபை மாற்றி, எளிய மக்களை நோக்கிக் கவிதைக் கருவியைத் திருப்பி அமைத்த பெருமை பாரதியைச் சாரும். மக்கள் மேம்பாட்டை அடியொற்றியே அவர்தம் கவிதைகள் அமைந்தன. இந்திய ஒருமைப்பாட்டின் உயர்வினை விளக்கும் அவர்தம் கவிதை அடிகள் வருமாறு:

முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள் – இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்.

தமிழ் வளர்ச்சிக்கு வழிசொல்லும் மற்றொரு கவிதை:

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.


பாரதியார்

தமிழ், தமிழர், தமிழுணர்வு, சமுதாய மறுமலர்ச்சி, பெண்விடுதலை, திராவிட இயக்கச் சிந்தனை, பொதுவுடைமை முதலியனவற்றைப் பாரதிதாசன் கவிதைகள் வெளிப்படுத்தின.

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே

எனத் தமிழர் எழுச்சிபெற விழையும் பாரதிதாசன்,

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான
இடம்நோக்கி நடக்கின்ற திந்தவையம்
இல்லானும் அங்கில்லை பிறர்நலத்தை
எனதென்று தனியொருவன் சொல்லான் அங்கே


பாரதிதாசன்

எனப் பொதுவுடைமையை விரும்பி வரவேற்கிறார்.

கவிமணியின் கவிதைகள் கற்போரைக் களிப்பில் ஆழ்த்துவன; உணர்ச்சிகொள்ள வைப்பன. ‘கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழின் சொல்லை மணியாகத் தொடுத்தவனும் நீதானோ’ எனத் தாலாட்டுப் பாடிய இவர்,


சுரதா

மங்கை யராகப் பிறப்பதற்கே – நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா

எனப் பாடிப் பெண்ணின் பெருமையைப் பேசுகிறார்.

சாலைகளில் பலதொழில்கள் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்

எனத் தொழிலும் தமிழும் வளம்பெறுதல் வேண்டுமென விரும்புகிறார்.


நாமக்கல் இராமலிங்கனார்

விடுதலை இயக்கக் கவிஞர்களுள் ஒருவர் நாமக்கல் கவிஞர். இவர்தம் கவிதைகளில் காந்தியச் சிந்தனைகள் மிளிர்கின்றன. இவர், தமிழரின் சிறப்பையும் தமிழ்மொழியின் இனிமையையும் சேர்த்துப் பாடினார்.

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்.


முடியரசன்

சமுதாயத்தின்மீது அக்கறையுள்ள அவர், பின்வருமாறு பாடியுள்ளார்.

பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்
பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்.


கல்யாணசுந்தரம்


கண்ணதாசன்


ந. பிச்சமூர்த்தி


தமிழ்ஒளி


மீரா

வாழ்க்கை சிறக்க ஒவ்வொருவரும் ஒரு தொழிலையாவது கற்றுக்கொள்வது நல்லது என வலியுறுத்தும் நாமக்கல்லாரின் கவிதை வருமாறு :

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
    கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்.

புலவர் குழந்தை, முடியரசன் முதலியோர் கவிதைகளில் பகுத்தறிவு நோக்கும் முற்போக்குச் சிந்தனையும் தமிழுணர்வும் இலங்கக் காணலாம்.

ஆங்கிலமோ பிறமொழியோ பயின்றுவிட்டால்
    அன்னைமொழி பேசுதற்கு நாணுகின்ற
தீங்குடைய மனப்போக்கர் வாழும்நாட்டில்
    தென்படுமோ மொழியுணர்ச்சி?

இவ் அடிகள் முடியரசனின் தணியாத தண்டமிழ்க் காதலை வலியுறுத்தும்.

சுரதாவின் கவிதைகளில் புதிய உவமைகளைக் காணலாம். அதனால், அவர் உவமைக் கவிஞர் என்னும் சிறப்பைப் பெற்றார்.

வரலாற்றுச் செய்திகளும் இலக்கண விளக்கங்களும் இவர்தம் பாடல்களில் இடையிடையே கலந்து வருகின்றன; அவை எளிமையும் இனிமையும் ஒன்றுகலந்து பொருட்செறிவையும் புத்துணர்ச்சியையும் உண்டாக்குகின்றன.

முல்லைக்கோர் காடு போலும்
    முத்துக்கோர் கடலே போலும்
சொல்லுக்கோர் கீரன் போலும்
    தூதுக்கோர் தென்றல் போலும்
கல்விக்கோர் கம்பன் போலும்
    கவிதைக்கோர் பரணர் போலும்
வில்லுக்கோர் ஓரி போலும்
    விளங்கினார்; வென்றார்; நின்றார்.

இவ்வாறு சுரதா, மறைமலையடிகளாரை உவமைகளால் பாராட்டியுள்ளார். பாரதிதாசனைத் தொடர்ந்து, இயற்கையின் அழகை எழிலுறப் படம்பிடித்துக் காட்டுவதில் வாணிதாசன் சிறந்து விளங்குகின்றார்.

சுத்தானந்த பாரதியார், பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், கவிஞர் கண்ணதாசன், தமிழ்ஒளி என எண்ணற்றோர் மரபுக் கவிதைகள் புனைந்து தமிழன்னைக்கு மேலும் வளமும் வனப்பும் சேர்த்துள்ளனர்.

தமிழ்

### புதுக்கவிதை

மனிதகுல வளர்ச்சிக்கு ஏற்றவாறு சிந்தனை மாற்றங்களும் சமூக மாற்றங்களும் நிகழ்தல் இயல்பு. இச்சிந்தனை மாற்றத்தின் விளைவே புதுக்கவிதையின் தோற்றம். அமெரிக்கக்கவிஞர் வால்ட்விட்மனின் சாயலில் பாரதியார் வசன கவிதை எழுதினார். பாரதிதாசனின் உரைநடைகள் அனைத்தும் கவிதைநடை கொண்டவை.

யாப்பு நெறிகளை மீறவேண்டும் என இவ்விரு கவிஞரும் ஒருபோதும் எண்ணியதில்லை. யாப்பினை ஒரு தடையாகவும் இவர்கள் நினைத்ததில்லை. ஆனால், மேலை நாட்டு இலக்கியத் தொடர்பும், சமுதாயச் சூழ்நிலையும் தமிழில் புதியதொரு வடிவம் தோன்றக் காரணமாயின.

புதிய ஆங்கிலக் கவிதைகளைப் படித்த தமிழர்தம் சிந்தனையில் புதுக்கவிதைகள் மலர்ந்து மணம் பரப்பின. மரபுக்கவிதைகள் பாடிவந்த பலரையும் இந்தப் புதுக்கவிதை வகை ஈர்த்தது.

ந. பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப.இராசகோபாலன், க.நா.சுப்பிரமணியன் முதலியோர் தொடக்கத்தில் மணிக்கொடி என்னும் இதழில் புதுக்கவிதை எழுதினர்.

பின்னர் எஸ்.வைத்தீஸ்வரன், தருமு சிவராமு, மணி, சி.சு.செல்லப்பா முதலியோர் எழுத்து என்னும் இதழில் புதுக்கவிதைகளைப் படைத்தனர்.

இதற்கடுத்த நிலையில் நா.காமராசன், மீரா (மீ.இராசேந்திரன்), சிற்பி பாலசுப்பிர மணியன், வாலி, இன்குலாப், மு.மேத்தா, வைரமுத்து, அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன் முதலிய கவிஞரும், புதுக்கவிதை பாடுவதில் ஈடுபட்டுப் பெருவெற்றி பெற்றனர். கோவை வானம்பாடிக் குழுவினர் புதுக்கவிதையைப் பரவலாக்கப் பாடுபட்டனர்.

புவியரசு, கங்கைகொண்டான், சிற்பி, தமிழ்நாடன், அக்கினிப்புத்திரன், சக்திக்கனல், இரவீந்திரன், ஞானி, பா. செயப்பிரகாசம், பிரபஞ்சன், பாலா, கோ.ராஜாராம் என வளரும் பெரும்பட்டியலைக் கொண்டது வானம்பாடி இயக்கம். இவர்களின் வருகைக்குப் பின்னர், சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் ஓர் இலக்கிய வகையாகப் புதுக்கவிதை சிறப்புற்றது. இவர்களின் வழிநின்று, இன்று எண்ணற்றோர் புதுக்கவிதைகளைப் படைத்து வருகின்றனர். புதுக்கவிதை வளர்ச்சியில் வல்லிக்கண்ணன் பங்கு போற்றத்தக்கது.

ஏழையின் குடிசையில்
அடுப்பும் விளக்கும் தவிர
எல்லாமே எரிகின்றன.

இக்கவிதை புதுக்கவிதையின் எளிய வடிவத்தைக் காட்டுகிறது.

தமிழிலக்கிய உலகில் மரபுக்கவிதையின் பெரும்பகுதியான இடத்தை இன்று புதுக்கவிதை பற்றிக்கொண்டிருக்கிறது. இன்றைய கவிஞர்கள் மேனாட்டாரைப் பின்பற்றிப் புதுப்புது வடிவங்களில் கவிதைகளை எழுதிவருகிறார்கள்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. காந்தியக் கவிஞர் எனப் போற்றப்படுபவர் ____________.
2. உவமைக்கவிஞர் ____________ ஆவார்.
3. புதுக்கவிதை வளர்ச்சியில் ____________ பங்கு போற்றத்தக்கது.

**2. வேற்றுமை உருபைச் சேர்த்தெழுதுக.**

1. வானம்பாடி இயக்கம் புதுக்கவிதை வளர்ச்சி _____ த்துணைபுரிந்தது. (ஐ/ஆல்/கு)
2. மணிக்கொடி என்னும் இதழ் _____ புதுக்கவிதைகளைப் படைத்தனர். (ஐ/இல்/கு)

**3. விடைக்கேற்ற வினா அமைக்க.**

1. பாரதிதாசன் மூடநம்பிக்கைகளைச் சாடினார்.
2. இருபதாம் நூற்றாண்டை உரைநடைக்காலம் என்று வழங்குகின்றோம்.

**4. சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

1. எளிய மக்களை நோக்கி கவிதை கருவியை திருப்பி அமைத்த பெருமை பாரதியை சாரும்.
2. பாரதிதாசனை தொடர்ந்து வாணிதாசன் இயற்கை அழகை படம்பிடித்து காட்டுகிறார்.

### ஆ) குறுவினாக்கள்

1. இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சிபற்றி எழுதுக.
2. உரைநடைக் காலம் எது? ஏன்?
3. கவிமணியின் கவியின்பத்துக்குச் சான்று தருக.
4. சுரதா "உவமைக்கவிஞர்" எனப் பாராட்டப்படுவதேன்?

### இ) சிறுவினாக்கள்

1. புதுக்கவிதையை வளர்த்த இதழ்கள் யாவை?
2. சமுதாய மேம்பாட்டுக்கு நாமக்கல்லார் கூறும் அறிவுரை யாது?
3. பாரதிதாசனின் கவிதைப் போக்கினைப்பற்றி எழுதுக.

### ஈ) நெடுவினாக்கள்

1. இக்கால மரபுக்கவிஞர் எவரேனும் நால்வரின் கவித்திறத்தை விளக்குக.
2. புதுக்கவிதை தோன்றி வளர்ந்தமுறைபற்றி எழுதுக.

| உச்சிமலையிலே ஊறும் அருவிகள்<br>ஒரே வழியில் கலக்குது<br>ஒற்றுமை யில்லா மனிதகுலம்<br>உயர்வு தாழ்வு வளர்க்குது.<br>– பட்டுக்கோட்டைக்கல்யாணசுந்தரம் | நீங்களும் புதுக்கவிதை எழுதலாமே!<br>________________<br>________________<br>________________<br>________________ |
|---|---|

தமிழ்



# கண்ணதாசன் கவியின்பம்

உலகுக்கு உயிர்ப்பாற்றலை வழங்கும் ஞாயிறு ஒருபோதும் மறைவதில்லை. அதனைப் போன்றே இலக்கிய வளம்கொழிக்கும் மொழிகளிலும், உயிர்த்துடிப்புள்ள கவிஞர்கள் இடையறாது தோன்றுகிறார்கள். அவர்கள், அம்மொழிகளின் விழிகளுக்கு ஒளியூட்டி வருகிறார்கள். அவர்கள் வாழும் காலச் சூழலுக்கேற்பத் தத்தம் கவிதைகளைப் படைத்துக் காலத்தைவென்று நிலைத்து நிற்கின்றார்கள். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களின் வரிசையில் தனக்கென்று தனி முத்திரையைப் பதித்தவர் கவியரசு கண்ணதாசன். எளிய சொற்களைக் கொண்டு உள்ளத்தை மகிழ்விக்கும் பாடல்களை இயற்றிய பெருமை கண்ணதாசனுக்கு உண்டு.

### தமிழுணர்வு

செந்தமிழ்ச் சொல்லெடுத்து
இசை தொடுப்பேன் – வண்ணச்
சந்தத்திலே கவிதைச் சரம்தொடுப்பேன்

எனத் தமிழ்க்கவிதை எழுதத் தொடங்கித் தமிழ்த்தாயின்மீது கொண்ட பற்றினால்,

கதிர்வெடித்துப் பிழம்புவிழக்
கடல்கொதித்துச் சூடேற்ற
முதுமைமிகு நிலப்பரப்பில்
முதற்பரப்பு தோன்றிவிட
நதிவருமுன் மணல்வருமுன்
நலம்வளர்த்த தமிழணங்கே!

என நெக்குருகித் தமிழ்த்தாயின் பழைமையைப் பறைசாற்றுகிறார்.

## வாழ்வியல் சிந்தனை

வாழ்க்கையும் வாழ்க்கையைப் பற்றிய சிந்தனைகளுமே கவிதைக்குரிய பொருள்களாம். இன்பமும் துன்பமும் நிறைந்தவைதாம் வாழ்க்கை; இரண்டனையும் ஏற்கும் மனவுறுதி பெறுவதே அமைதியான வாழ்வுக்கு வழி.

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எதுவென் றாலும்
வாடி நின்றால் ஓடுவ தில்லை
எதையும் தாங்கும் இதயம் இருந்தால்
இறுதி வரைக்கும் அமைதி இருக்கும்.

இப்பாடலிலுள்ள நம்பிக்கை நமக்கு உரம், அறிவுக்கு வழித்தடம் என்று அழுத்தமாகப் பதிவு செய்கிறார்.

## பசுமைமாறா நினைவு

பள்ளி, கல்லூரிக் கல்வியை முடித்துச் செல்லும் காலத்தில், மாணவர்களுக்காக நடத்தப்பெறும் விடைபெறு விழாவில் கலந்துகொள்வோர் அனைவரையும் நெகிழவைக்கும் பாடலைக் கண்ணதாசன் இயற்றியுள்ளார்.

பசுமை நிறைந்த நினைவுகளே!
பாடித் திரிந்த பறவைகளே!
பழகிக் களித்த தோழர்களே!
பறந்து செல்கின்றோம் – நாம்
பறந்து செல்கின்றோம்
... ... ...
எந்த ஊரில் எந்த நாட்டில் என்று காண்போமோ?

## குழந்தை

குறுகுறு நடந்து சிறுகை நீட்டி மழலை மொழிபேசும் குழந்தையே ஒரு கவிதை. அக்குழந்தையை உவமிக்கும் கண்ணதாசனின் அழகான பாடலைப் பாடி மகிழலாம்.

முத்தான முத்தல்லவோ மிதந்து வந்த முத்தல்லவோ
கட்டான மலரல்லவோ கடவுள்தந்த பொருளல்லவோ
சின்னஞ்சிறு சிறகுகொண்ட சிங்காரச் சிட்டல்லவோ
செம்மாதுளை பிளந்து சிரித்துவரும் சிரிப்பல்லவோ
மாவடு கண்ணல்லவோ மைனாவின் மொழியல்லவோ

## பொதுவுடைமை

சுரண்டல், வறுமை ஆகியன நீங்கவும், சமத்துவம் ஓங்கவும் பொதுமை உணர்வே ஏற்றது என்பதனைக் கண்ணதாசன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்

தமிழ்

எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் – இங்கு
இல்லாமை இல்லாத நிலைவேண்டும்
வல்லான் பொருள்குவிக்கும் தனியுடைமை – நீங்கி
வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை.

கவிதைகளில் சொல்லப்படும் கருத்துகளைக் காட்டிலும், அக்கருத்துகளை வெளிப்படுத்த கவிஞன் கையாளும் முறைகளும் இன்றியமையாதன. கவிதை நடை என்பது, கவிதையின் பொருளிலும் அதனை வெளிப்படுத்தும் மொழியிலும் அமைந்துள்ளது.

ஓசைநயம்

உழவர் பெருமக்களின் இல்லத்தே எழுகின்ற பல்வேறு ஓசைகள் இயைபுத்தொடையும் இசைநயமும் ஒத்து ஒலிக்கின்றன.

காளை மணியோசை; களத்துமணி நெல்லோசை
வாழை இலையோசை; வஞ்சியர்கை வளையோசை
தாழை மடலோசை; தாயர்தயிர் மத்தோசை
கோழிக் குரலோசை; குழவியர்வாய்த் தேனோசை.

ஓசை என்னும் சொல்லைப் பலமுறை பயன்படுத்திப் பொருள்நயமும் ஓசை இனிமையும் பொருந்துமாறு கவிஞர் பாடியுள்ளார்.

சொல்லாட்சி

கவிதைக்கு மூலப்பொருள் சொற்கள். இனிய தமிழ்ச்சொற்களாகிய மணிகள், கவிஞர்களால் கையாளப்படும்பொழுது அவை பட்டை தீட்டப்பெற்று ஒளிவீசுகின்றன. இத்தகைய சொல்லாட்சிகளைக் கண்ணதாசனின் கவிதைகளில் காணலாம்.

உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால்
உலகம் உன்னிடம் மயங்கும் – நிலை
உயரும்போது பணிவு கொண்டால்
உயிர்கள் உன்னை வணங்கும்.

கண்ணதாசன் – படைப்புகளும் சிறப்புகளும்

முத்தையா என்ற இயற்பெயர் கொண்ட கண்ணதாசன், சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 24.06.1927 அன்று பிறந்தார்.

பெற்றோர் சாத்தப்பன் – விசாலாட்சி ஆவர். கண்ணதாசன் கவிதைகள் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அவர்தம் திரைப்படப் பாடல்கள் நூல் வடிவம்பெற்றுள்ளன.

ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, கல்லக்குடி மாகாவியம், இயேசுகாவியம் முதலியன அவர் படைத்த நெடுங்கவிதை நூல்கள்.

இராசதண்டனை என்பது, கம்பர் – அம்பிகாபதி வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, அவர் படைத்த இனிய நாடகம்.

ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி, வேலங்குடித் திருவிழா முதலிய பல புதினங்களையும் கண்ணதாசன் படைத்திருக்கிறார். அவர் எழுதிய இருபதுக்கும் மேற்பட்ட புதினங்களில் சேரமான் காதலி சிறந்த வரலாற்றுப் புதினமாகும். அதற்குச் சாகித்திய அகாதமியின் பரிசு கிடைத்துள்ளது.

கண்ணதாசன் தென்றல், முல்லை, கண்ணதாசன், தமிழ் மலர் முதலிய இதழ்கள் தொடங்கி, அவற்றுக்கு ஆசிரியராக இருந்து சிறந்த இதழ்ப்பணி ஆற்றியுள்ளார்.

கவிதையிலும் உரைநடையிலும் சொற்பொழிவிலும் திரைப்படத் துறையிலும் தமக்கென ஒரு புதிய வழியினை வகுத்துக்கொண்டு தலைநிமிர்ந்து நின்றவர் கண்ணதாசன். அவர், தம் கவிதைகளால் என்றென்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

> நான் நிரந்தரமானவன் அழிவதில்லை
> எந்தநிலையிலும் எனக்கு மரணமில்லை.
>
> – கண்ணதாசன்

## மாதிரி வினாக்கள்

### நெடுவினாக்கள்

1. கண்ணதாசன் தமிழுணர்வை எங்ஙனம் வெளிப்படுத்துகிறார் ?
2. கண்ணதாசனின் வாழ்வியல் சிந்தனையை விளக்குக.

**கேட்டு மகிழ்க.**

கவிஞர் கண்ணதாசனின் சொல்லாட்சிச் சிறப்பை வெளிப்படுத்தும் தேன், காய் என்னும் இயைபுச் சொற்கள் அமைந்த பாடல்களைக் கேட்டு மகிழ்க.

நடுவண் அரசின் நிறுவனமான சாகித்திய அகாதமி ஆண்டுதோறும் இந்திய மொழிகளில் உள்ள சிறந்த இலக்கியங்களைத் தெரிவுசெய்து விருது வழங்கிவருகிறது.

உனக்குத் தெரிந்த இதழ்களின் பெயர்களை எழுதுக.

1. ____________________  5. ____________________
2. ____________________  6. ____________________
3. ____________________  7. ____________________
4. ____________________  8. ____________________

தமிழ்

# சொல்
## (பகாப்பதம், பகுபதம்)

ஓர் எழுத்தானது தனித்தேனும், ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்தேனும் ஒரு பொருளை உணர்த்துமானால், அது சொல் எனப்படும்.

பதம், மொழி, கிளவி என்பன சொல் என்பதன் வேறு பெயர்கள். பதம் என்பது பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படும்.

### பகாப்பதம்

பிரித்தால் பொருள் தராத சொல் பகாப்பதம் எனப்படும். பெயர், வினை, இடை, உரி ஆகியவற்றின் அடிப்படையில் பகாப்பதம் நாலுவகைப்படும்.

1. பெயர்ப் பகாப்பதம் – மரம், நாய், நீர்
2. வினைப் பகாப்பதம் – உண், காண், எடு
3. இடைப் பகாப்பதம் – தில், மன், பிற
4. உரிப் பகாப்பதம் – சால, நனி, கடி, உறு

( இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பகாப்பதங்களாகவே இருக்கும். )

### பகுபதம்

பகுதி, விகுதி, இடைநிலை எனப் பிரிக்கப்படும் பதம் பகுபதம் எனப்படும். (பகுபதம் – பிரிக்கவியலும் பதம்).

பகுபதம் பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இருவகைப்படும்.

பெயர்ப்பகுபதம் : பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறன் அடியாகத் தோன்றுவது பெயர்ப்பகுபதம்.

(எ.கா.)

1. பொன்னன் = பொன் + ன் + அன் ( ன் – இரட்டித்தது )
   பொன் என்னும் பொருட்பெயர் அடியாகப் பிறந்தது.
2. ஊரன் = ஊர் + அன்
   ஊர் என்னும் இடப்பெயர் அடியாகப் பிறந்தது.
3. ஆதிரையான் = ஆதிரை + ய் +ஆன் ( ய் – உடம்படுமெய் )
   ஆதிரை என்னும் காலப்பெயர் அடியாகப் பிறந்தது.
4. கண்ணன் = கண் + ண் + அன் ( ண் – இரட்டித்தது )
   கண் என்னும் சினைப்பெயர் அடியாகப் பிறந்தது.

5. கரியன் = கருமை + அன்

கருமை என்னும் பண்புப்பெயர் அடியாகப் பிறந்தது.

6. நடிகன் = நடி + க் +அன் ( க் – பெயர் இடைநிலை )

நடித்தல் என்னும் தொழிற்பெயர் அடியாகப் பிறந்தது.

வினைப்பகுபதம் : பகுதி, விகுதி, இடைநிலை முதலியனவாகப் பகுக்கப்படும் வினைமுற்று, வினைப்பகுபதம் எனப்படும்.

செய்தான் = செய் + த் + ஆன்

செய்தான் என்னும் வினைமுற்றில் செய் என்னும் பகுதி தொழிலையும், த் என்னும் இடைநிலை இறந்தகாலத்தையும், ஆன் என்னும் விகுதி ஆண்பாலையும் குறிக்கின்றன.

### பகுபத உறுப்புகள்

பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்னும் ஆறு உறுப்புகளும் பகுபத உறுப்புகள் ஆகும்.

1. பகுதி : பகுபதத்தில் முதலில் நின்று பொருள் தரும் முதனிலையைப் பகுதி என்பர். பகுதி பெரும்பாலும் ஏவல் வினையாக வரும்.

| | | |
|---|---|---|
| படித்தான் | – | படி என்பது பகுதி |
| ஓடினான் | – | ஓடு என்பது பகுதி |
| வந்தான் | – | வா என்பது பகுதி |

2. விகுதி : பகுபதத்தில் இறுதியில் நிற்பது விகுதி எனப்படும். இது திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| நடந்தான் | – | ஆன் | – | ஆண்பால் விகுதி |
| நடந்தாள் | – | ஆள் | – | பெண்பால் விகுதி |
| நடந்தனர் | – | அர் | – | பலர்பால் விகுதி |
| நடந்தது | – | து | – | ஒன்றன்பால் விகுதி |
| நடந்தன | – | அ | – | பலவின்பால் விகுதி |

3. இடைநிலை : பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வருவது இடைநிலை எனப்படும். இடைநிலை காலம் காட்டுவதனால் காலங்காட்டும் இடைநிலை எனவும் கூறுவர்.

அ) நிகழ்கால இடைநிலைகள்

கிறு, கின்று, ஆநின்று என்பன நிகழ்கால இடைநிலைகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| உண்கிறான் | – | கிறு | = | உண் + கிறு + ஆன் |
| உண்கின்றான் | – | கின்று | = | உண் + கின்று + ஆன் |
| உண்ணாநின்றான் | – | ஆநின்று | = | உண் + ஆநின்று + ஆன் |

தமிழ்

தமிழ்

### ஆ) இறந்தகால இடைநிலைகள்

த், ட், ற், இன் என்பன இறந்தகால இடைநிலைகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| பார்த்தான் | – | த் | = | பார் + த் + த் + ஆன் |
| உண்டான் | – | ட் | = | உண் + ட் + ஆன் |
| வென்றான் | – | ற் | = | வெல் (ன்) + ற் + ஆன் |
| பாடினான் | – | இன் | = | பாடு + இன் + ஆன் |

### இ) எதிர்கால இடைநிலைகள்

ப், வ் என்பன எதிர்கால இடைநிலைகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| உண்பான் | – | ப் | = | உண் + ப் + ஆன் |
| வருவான் | – | வ் | = | வா (வரு) + வ் + ஆன் |

### ஈ) எதிர்மறை இடைநிலைகள்

இல், அல், ஆ முதலியன எதிர்மறை இடைநிலைகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| உண்டிலன் | – | இல் | = | உண் + ட் + இல் + அன் |
| காணலன் | – | அல் | = | காண் + அல் + அன் |
| பாரான் | – | ஆ | = | பார் + ஆ + ஆன் |

### 4. சந்தி

பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வந்து சந்திக்க வைப்பது சந்தி.

இது, சிலவிடங்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையிலும் வரும்.

| | | |
|---|---|---|
| பார்க்கிறான் | = | பார் + க் + கிறு + ஆன் |
| படித்தான் | = | படி + த் + த் + ஆன் |

### 5. சாரியை

பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வருவது சாரியை எனப்படும். இஃது இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.

| | | |
|---|---|---|
| உண்டனன் | = | உண் + ட் + அன் + அன் |

அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம் முதலியன சாரியைகள்.

### 6. விகாரம்

பகுதி, இடைநிலை, விகுதி போன்றவை சேரும்போது இடையில் ஏற்படும் மாறுபாடு விகாரம் எனப்படும்.

வந்தான் என்னும் சொல்லில் உள்ள வா என்னும் பகுதி வ எனக் குறைந்து விகாரம் ஆயிற்று.

பயிற்சி

1. பின்வரும் சொற்களின் பகுதியை எடுத்தெழுதுக.

அ) கண்டான் ஆ) கேட்டான் இ) வந்தான் ஈ) எழுதினான்

2. தொடர்பில்லாத சொல்லை வட்டமிடுக.

அ) பார்த்தான், சொன்னான், பெற்றான், நடப்பான்.

ஆ) பாடுகிறாள், நடித்தார், நடிக்கின்றார், சிரிக்கின்றாள்.

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. கண்ணன் என்பது ________ பகுபதம் ஆகும்.
   அ) பொருட்பெயர் ஆ) பண்புப்பெயர் இ) சினைப்பெயர்
2. இடைச்சொற்கள் ________ பதம் ஆகும்.
   அ) பகு ஆ) பகா இ) விளி
3. மதுரையான் ________ பெயர்ப்பகுபதம் ஆகும்.
   அ) பொருள் ஆ) சினை இ) இடம்
4. பகுபதத்தில் குறைந்தளவு இருக்கவேண்டிய உறுப்புகள் ________ .
   அ) பகுதி, சந்தி ஆ) இடைநிலை, சாரியை இ) பகுதி, விகுதி
5. ஏவல் வினையாக அமைவது ________ ஆகும்.
   அ) பெயர்ப்பகுபதம் ஆ) வினைப்பகுபதம் இ) எதுவுமில்லை
6. 'இல்' என்னும் எதிர்மறை இடைநிலை அமைந்துள்ள வினைச்சொல்________
   அ) கேளான் ஆ) வாரான் இ) கண்டிலன்
7. செய்தான் – இச்சொல்லில் அமைந்துள்ள இடைநிலை________ .
   அ) இன் ஆ) த் இ) ட்

2. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) பொருட்பெயர்ப் பகுபதம் | – | சென்னையான் |
| இடப்பெயர்ப் பகுபதம் | – | மூக்கன் |
| காலப்பெயர்ப் பகுபதம் | – | பொன்னன் |
| சினைப்பெயர்ப் பகுபதம் | – | சித்திரையான் |

தமிழ்

# ஆகுபெயர்

## எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்

இந்தியா மிகப்பெரிய நாடு.

மட்டைப்பந்தில் இந்தியா வென்றது.

இவ்விரு தொடர்களிலும் அமைந்துள்ள இந்தியா என்னும் சொல்லை உற்றுநோக்குங்கள். முதல் தொடரில் உள்ள இந்தியா இடத்தைக் குறிக்கின்றது. இரண்டாம் தொடரில் உள்ள இந்தியா, இந்திய வீரர்களைக் குறிக்கின்றது. இவ்வாறு ஒரு பொருளின் பெயர், தனக்குரிய பொருளைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குப் பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

### ஆகுபெயர் வகைகள்

ஆகுபெயர் பதினாறு வகைப்படும். அவற்றுள் பொருளாகுபெயர் முதலான ஆறு ஆகுபெயரை எட்டாம் வகுப்பில் கற்றிருக்கிறீர்கள். பிற ஆகுபெயர்களை இங்குக் கற்கவிருக்கிறீர்கள். அளவைக் குறிக்கும் பெயர்களை அளவைப் பெயர்கள் என்பர். எண்ணல் அளவை, எடுத்தல் அளவை, முகத்தல் அளவை, நீட்டல் அளவை என அளவைப்பெயர்கள் நால்வகைப்படும்.

**1. எண்ணல் அளவை ஆகுபெயர் :** ஒன்று பெற்றால் ஒளி மயம்.

இத்தொடரில் ஒன்று என்னும் எண்ணுப்பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்குப் பெயராகி வந்தது. இஃது எண்ணல் அளவை ஆகுபெயர்.

**2. எடுத்தல் அளவை ஆகுபெயர் :** ஐந்து கிலோ என்ன விலை ?

இத்தொடரில் கிலோ என்னும் எடுத்தல் அளவைப் பெயர், அவ்வளவைக் குறிக்காமல், அவ்வளவுடைய பொருளுக்கு ( அரிசி, பருப்பு.... ) ஆகிவந்தது. எனவே, இஃது எடுத்தல் அளவை ஆகுபெயர்.

**3. முகத்தல் அளவை ஆகுபெயர் :** நாலுலிட்டர் தேவை.

இத்தொடரில் லிட்டர் என்னும் முகத்தல் அளவைப்பெயர், அவ்வளவைக் குறிக்கவில்லை. அவ்வளவுடைய நெய், எண்ணெய், பால் முதலியவற்றுள் ஒன்றுக்கு ஆகிவந்தது. எனவே, இது முகத்தல் அளவை ஆகுபெயர்.

**4. நீட்டல் அளவை ஆகுபெயர் :** மூன்று மீட்டர் கொடு.

இத்தொடரில், மூன்று மீட்டர் என்பது, அவ்வளவுடைய அளவுகோலைக் குறிக்காது, அதனால் நீட்டி அளக்கப்பெறும் துணிக்கு ஆகி வந்தது. எனவே, இது நீட்டல் அளவை ஆகுபெயர்.

குறிப்பு : “ஒன்றுகொடு, நாலுகிலோ தா, இரண்டு லிட்டர் தேவை, ஐந்து முழம் வேண்டும்”

என்பனபோல வரும் அளவுத்தொடர்கள் ஆகுபெயராம். ‘ஒரு மாம்பழம் கொடு, இரண்டு கிலோ நெய் வேண்டும்’ என்பன ஆகுபெயராகா.

பொருள்முதல் ஆறோடு அளவை சொல்தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே. – நன்னூல், 290

பயிற்சி : கீழ்க்காணும் தொடர்களிலுள்ள ஆகுபெயர்களை வட்டமிடுக.

அ) இரண்டு மீட்டர் போதுமா ?

ஆ) ஐந்து லிட்டர் என்ன விலை ?

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

‘நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி’ – இத்தொடர் ____________ ஆகும்.

அ) முகத்தலளவை ஆகுபெயர் இ) நீட்டலளவை ஆகுபெயர்

ஆ) எண்ணலளவை ஆகுபெயர்

**2. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

‘மூன்று மீட்டர் தா’ என்பது ____________ ஆகுபெயராகும்.

**3. பொருத்துக.**

1. முகத்தல் அளவை ஆகுபெயர் – தலைக்கு ஒரு பழம் கொடு.
2. எடுத்தல் அளவை ஆகுபெயர் – இரண்டு லிட்டர் தா.
3. எண்ணல் அளவை ஆகுபெயர் – ஆறு முழம் கொடு.
4. நீட்டல் அளவை ஆகுபெயர் – பத்துக் கிலோ கொடு.

### ஆ) குறுவினாக்கள்

1. ஆகுபெயர் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.
2. அளவைப் பெயர்கள் யாவை ?
3. நீட்டலளவை ஆகுபெயருக்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
4. முகத்தல் அளவை ஆகுபெயர் என்றால் என்ன ?

# பொருள்கோள்

ஆற்றுநீர்ப்பொருள்கோள், மொழிமாற்றுப்பொருள்கோள், நிரல்நிறைப்பொருள்கோள்

ஒரு செய்யுளில் உள்ள சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்வுக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொள்ளும் முறையைப் பொருள்கோள் (பொருள் கொள்ளும் முறை) என வழங்குவர்.

பொருள்கோள் எண்வகைப்படும்.

1. ஆற்றுநீர்ப்பொருள்கோள்
2. மொழிமாற்றுப்பொருள்கோள்
3. நிரல்நிறைப்பொருள்கோள்
4. விற்பூட்டுப்பொருள்கோள்
5. தாப்பிசைப்பொருள்கோள்
6. அளைமறிபாப்புப்பொருள்கோள்
7. கொண்டுகூட்டுப்பொருள்கோள்
8. அடிமறிமாற்றுப்பொருள்கோள்

### 1. ஆற்றுநீர்ப்பொருள்கோள்

இடையறாது செல்லும் ஆற்றுநீரைப்போலப் பாடலின் சொற்கள் முன்பின் மாறாது நேரே சென்று பொருள்கொள்வது ஆற்றுநீர்ப்பொருள்கோளாகும்.

(எ.கா.) பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். – குறள், 6

பொறிவாயில் ஐந்தவித்தான் – மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாகக்கொண்ட ஐவகை ஆசைகளையும்விட்ட இறைவனது; பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் – மெய்யான ஒழுக்க நெறியில் நின்றவர்; நீடு வாழ்வார் – வீட்டுலகில் என்றும் இன்புற்று வாழ்வர். இக்குறட்பாவில் பொறிவாயில் எனத் தொடங்கி, நீடுவாழ்வார் என்பது வரையிலுள்ள சொற்கள் முன்பின்னாக மாற்றம் பெறாமல் தொடர்ச்சியாக அமைந்து பொருள்கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. ஆதலின் இப்பாடல், ஆற்றுநீர்ப்பொருள்கோள் ஆயிற்று.

### 2. மொழிமாற்றுப்பொருள்கோள்

ஓரடியுள் உள்ள சொற்களை, அவைதரும் பொருளுக்கு ஏற்ப மாற்றிக் கூறுதல் மொழிமாற்றுப்பொருள்கோள் என வழங்கப்படும்.

(எ.கா.) சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

இப்பாடலை அப்படியே படித்தால் பொருள் தெளிவு இருக்காது. இதனைச் சுரை மிதப்ப, அம்மி ஆழ, யானைக்கு நிலை, முயற்கு (முயல்) நீத்து என அந்தந்த அடியிலுள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிப் பொருள்கொள்ளுதல் வேண்டும்.

### 3. நிரல்நிறைப்பொருள்கோள்

செய்யுளில் இருக்கின்ற சொற்களை முறைமாற்றாமல், வரிசையாக அமைத்துப் பொருள்கொள்வது நிரல்நிறைப்பொருள்கோள் ஆகும்.

(எ.கா.) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. – குறள், 45

இக்குறட்பாவில் அன்புக்குப் பண்பும், அறத்துக்குப் பயனும் நிரல்நிறையாக வந்து அமைந்துள்ளதனால், இப்பாடல் நிரல்நிறைப்பொருள்கோள் ஆயிற்று.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பொருள்கோள் ____________ வகைப்படும்.
2. பாடலின் சொற்கள் முறைமாற்றாமல், வரிசையாக அமைத்துப் பொருள்கொள்வது ____________ .
3. ‘சுரையாழ அம்மி மிதப்ப’ என்னும் செய்யுள் அடியில் ____________ பயின்று வந்துள்ளது.

### ஆ) குறுவினாக்கள்

1. பொருள்கோள் என்றால் என்ன ? அஃது எத்தனை வகைப்படும் ?
2. ஆற்றுநீர்ப்பொருள்கோளுக்குச் சான்றுதந்து விளக்குக.
3. மொழிமாற்றுப்பொருள்கோளுக்குச் சான்றுதந்து விளக்குக.
4. நிரல்நிறைப்பொருள்கோளுக்குச் சான்று தருக.

## வகுப்பறைத்திறன்கள்

### படைப்பாற்றல்

இயற்கை – இத்தலைப்பில் பாடல் ஒன்று எழுதுக.

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

### பேசுதல் திறன்

எனக்குப் பிடித்த கவிஞர் – என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளி பேசுக.

தமிழ்

தமிழ்

நயம் பாராட்டுதல்

பாடலைப் படித்து அதன் நயம் பாராட்டுக.

இருட்பகை இரவி இருளெனத் தம்மையும்
கருதிக் காய்வனோ என்றயிர்த்து இருசிறைக்
கையான் மார்பிற் புடைத்துக் கலங்கி
மெய்யாத் தம்பெயர் வியம்பி வாயசம்
பதறியெத் திசையிலும் சிதறியோ டுதலும்

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

பொருள் நயம்

இருளுக்குப் பகைவன் கதிரவன். அவன் தம்மையும் இருளென எண்ணிக் காய்ந்துவிடுவானோ எனக் காகங்கள் ஐயமுற்றுச் சிறகுகளைப் படபடவெனத் தம் மார்பில் படுமாறு அடித்துக்கொண்டு கா கா எனக் கரைந்தபடி திசையெங்கும் பறந்தோடின. (வாயசம் – காகம்; இரவி – சூரியன்; சிறை – இறக்கை)

அணி நயம்

காலைவேளையில் காகங்கள் இரைதேடப் பறந்துசெல்வது இயல்பான நிகழ்வு. கதிரவன் இருளுக்குப் பகைவன்; ஆதலால், தாமும் கரிய நிறத்துடன் இருப்பதனால் இருள் என எண்ணித் தம்மையும் காய்ந்துவிடுவானோ என ஐயமுற்றுப் பறந்தன எனக் கவிஞர், தம் கற்பனையை அதன்மேல் ஏற்றிக் கூறுகிறார். மேலும், காகங்கள் சிறகடிக்கும் இயல்பான செயலையும் மார்பில் அடித்துக்கொள்வதாகக் கூறுவதும் கவிஞரின் கற்பனையே. இவ்வாறு, இப்பாடலில் தற்குறிப்பேற்ற அணி சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது.

தொடை நயம் : மோனைத்தொடை

இருட்பகை இரவி இருளென
கருதிக் காய்வனோ, கையான்... கலங்கி

இவ்வடிகளில் சீர்களின் முதல் எழுத்து ஒன்றிச் சீர்மோனைத்தொடை அமைந்துள்ளது. அடிஎதுகைத்தொடை: இருட்–கருதி என இரண்டாமெழுத்து ஒன்றி அடிஎதுகையாகவும் பதறி–சிதறி எனச் சீரெதுகையாகவும் எதுகைத்தொடை அமைந்துள்ளது.

பயிற்சி : பாடலைப் படித்து அதன் நயம் பாராட்டுக.

வாரிக் களத்தடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும்
போரில் சிறந்து பொலிவாகும்–சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யானை யாம்.

– காளமேகப் புலவர்

## மொழித்திறன் பயிற்சி

அ) வேர்ச்சொற்களை வினைமுற்றாக்குக.

1. நான் நாளை சந்தைக்குப் ____ ( போ )
2. மாணவர்கள் பள்ளியில் கல்வி ____ ( கல் )
3. யானை சினங்கொண்டு ____ ( பிளிறு )
4. தேசிங்குராசா பாராசாரிக் குதிரையை ____ ( அடக்கு )
5. இந்தியஅணி நேற்றைய கால்பந்துப்போட்டியில் வெற்றி ____ ( பெறு )

ஆ) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைச் சொற்றொடருக்கேற்ப மாற்றுக.

1. அவர் ________ வந்தும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை. ( விரைவு )
2. மாணவர்களுக்குப் பரிசளிக்குமாறு ________ க்கேட்டுக்கொள்கிறேன். (தலைவர்)
3. குழந்தைகள் ________ மரியாதை தருதல் வேண்டும். ( பெற்றோர் )
4. அடுப்பு நன்றாக ________ விறகு காய்ந்திருத்தல் வேண்டும். ( எரி )
5. எதிலும் ________ க்கடைப்பிடித்தல் வேண்டும். ( எளிமை )

இ) பெயரெச்சத்தை வினைமுற்றாக மாற்றி எழுதுக.

(எ.கா.) வனப்பு மிக்க சோலை. சோலை வனப்பு மிக்கது.

1. துள்ளி ஓடிய புள்ளிமான். ________________
2. மிகவும் இனித்த பழம். ________________
3. பாடம் படித்த வைகறைச்செல்வி. ________________
4. நீதி தவறாத மன்னன். ________________
5. நேற்றுப் பெய்த மழை. ________________

ஈ) வினைமுற்றைப் பெயரெச்சமாக மாற்றுக.

(எ.கா.) நேற்று மதியழகன் வந்தான். நேற்று வந்த மதியழகன்.

1. எழிலன் படம் வரைந்தான். ________________
2. அப்பா சினம் கொண்டார். ________________
3. எழில் பாம்பைக் கண்டாள். ________________
4. குதிரை விரைவாக ஓடியது. ________________
5. குரங்குகள் தாவிக் குதித்தன. ________________

உ) மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக.

1. கிழக்கு திசைக்குப் பெயர் உதிக்கின்ற ஞாயிறு. ________________
2. பிறப்பிடம் துன்பத்துக்கும் சோம்பலே தீமைக்கும். ________________
3. பொன்செய்யும் மருந்து மனமே என்ற போதும். ________________

தமிழ்

## தமிழெண்களை அறிவோம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51 | ௫௧ | 61 | ௬௧ | 71 | ௭௧ | 81 | ௮௧ | 91 | ௯௧ |
| 52 | ௫௨ | 62 | ௬௨ | 72 | ௭௨ | 82 | ௮௨ | 92 | ௯௨ |
| 53 | ௫௩ | 63 | ௬௩ | 73 | ௭௩ | 83 | ௮௩ | 93 | ௯௩ |
| 54 | ௫௪ | 64 | ௬௪ | 74 | ௭௪ | 84 | ௮௪ | 94 | ௯௪ |
| 55 | ௫௫ | 65 | ௬௫ | 75 | ௭௫ | 85 | ௮௫ | 95 | ௯௫ |
| 56 | ௫௬ | 66 | ௬௬ | 76 | ௭௬ | 86 | ௮௬ | 96 | ௯௬ |
| 57 | ௫௭ | 67 | ௬௭ | 77 | ௭௭ | 87 | ௮௭ | 97 | ௯௭ |
| 58 | ௫௮ | 68 | ௬௮ | 78 | ௭௮ | 88 | ௮௮ | 98 | ௯௮ |
| 59 | ௫௯ | 69 | ௬௯ | 79 | ௭௯ | 89 | ௮௯ | 99 | ௯௯ |
| 60 | ௬௦ | 70 | ௭௦ | 80 | ௮௦ | 90 | ௯௦ | 100 | ௧௦௦ |

## பயிற்சி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51 | | 61 | | 71 | | 81 | | 91 | |
| 52 | | 62 | | 72 | | 82 | | 92 | |
| 53 | | 63 | | 73 | | 83 | | 93 | |
| 54 | | 64 | | 74 | | 84 | | 94 | |
| 55 | | 65 | | 75 | | 85 | | 95 | |
| 56 | | 66 | | 76 | | 86 | | 96 | |
| 57 | | 67 | | 77 | | 87 | | 97 | |
| 58 | | 68 | | 78 | | 88 | | 98 | |
| 59 | | 69 | | 79 | | 89 | | 99 | |
| 60 | | 70 | | 80 | | 90 | | 100 | |

## விடுபட்ட தமிழெண்களை நிரப்புக.

1. ௫௧, _____, ௫௩, _____, ௫௫, _____, ௫௭, _____, _____, _____.
2. ௯௧, ௯௨, _____, _____, _____, ௯௬, _____, _____, ௯௯, _____.

கட்டுரைப் பயிற்சி: காலத்தை வெல்லும் கணினி

கடிதம் எழுதுதல் பயிற்சி : மாதிரிக் கடிதம்

தெரு மின்விளக்குப் பழுது நீக்கவேண்டி மின்வாரியச் செயற்பொறியாளருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக.

அனுப்புநர்

இராச. தமிழ்ச்செல்வன்,
செயலர்,
கபிலர் நகர் மக்கள் மன்றம்,
கபிலர் நகர்,
மதுரை – 625 002.

பெறுநர்

செயற்பொறியாளர்,
தமிழ்நாடு மின்வாரியம்,
மதுரை – 625 002.

மதிப்புக்குரியீர்,

பொருள் : கபிலர் நகர்ப் பகுதியில் மின்விளக்குப் பழுது நீக்க வேண்டுதல் – சார்பாக.

-----*-----

கபிலர் நகர்ப் பகுதியில் கடந்த இரு மாதங்களாகத் தெருவிளக்குகள் எரியவில்லை. இரவு நேரத்தில் இப்பகுதி இருள்சூழ்ந்து காணப்படுகிறது. அதனைப் பயன்படுத்திச் சமூகத்துக்கு எதிரான குற்றங்கள் அவ்வப்போது நடைபெறுகின்றன. அதனால், இப்பகுதி மக்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர். எனவே, தெரு மின்விளக்குகளைப் பழுதுநீக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை, தங்கள் உண்மையுள்ள,

14. 04. 2013. இராச. தமிழ்ச்செல்வன்

ஊர்மக்கள் கையொப்பம்

1.

2.

3.

உறைமேல் முகவரி:

பெறுநர்

செயற்பொறியாளர்,
தமிழ்நாடு மின்வாரியம்,
மதுரை 625 002.

தமிழ்

குறிப்பு : ( கடிதம் எழுதும்போது எழுதுவோர் முகவரி, நாள், இடம், விளித்தல் முறை, கடிதப்பொருள் (அ) செய்தி, கையொப்பம், பெறுநர் முகவரி இவற்றைத் தவிராமல் எழுதுதல் வேண்டும்.)

பயிற்சி

1. குடிநீர்வசதி வேண்டிக் குடிநீர்வாரியச் செயற்பொறியாளருக்கு
2. சாலைவசதி வேண்டி மாநகராட்சி ஆணையருக்கு
3. நூலகம் அமைத்துத்தர மாவட்ட ஆட்சியருக்கு
4. சுற்றுச்சூழலைக் கெடுக்கும் தொழிற்சாலை வேண்டாவென மாவட்ட ஆட்சியருக்கு

## பண்பு

### பெற்றோரை மதித்தலும் உதவுதலும்

முகிலனும்எழிலனும்படித்துக்கொண்டிருந்தனர்.தாயார்குழலிசமைத்துக்கொண்டிருந்தார். அப்போது அழைப்புமணி ஒலித்தது.

"முகிலா! யார் வந்திருக்கிறார், பார்", என்றார் குழலி. "போம்மா, நான் படித்துக் கொண்டிருக்கிறேன்; என்னால் முடியாது" எனக் கூறிவிட்டுப் படிப்பதனைத் தொடர்ந்தான். இஃது அவனுக்குப் புதிதன்று.

அம்மாவோ அப்பாவோ எந்த வேலையைச் செய்யச் சொன்னாலும் அவனுடைய உடனடி பதில் என்னால் முடியாது என்பதுதான். அதற்காக ஏதோ ஒரு காரணம் சொல்லி, அவ்வேலையைத் தட்டிக்கழிப்பான்; ஏதாவது சொன்னால் எதிர்த்துப் பேசுவான்.

ஆனால், எழிலன் பெற்றோர்க்குத் தேவையான உதவிகள் செய்வான். முகிலனின் இயல்பை அறிந்த எழிலன் எழுந்துசென்று கதவைத் திறந்தான். அலுவலகத்திலிருந்து, அப்பா வந்திருந்தார். "அம்மா! அப்பா வந்துவிட்டார்" என உரக்கக் கூறிவிட்டு அறைக்குள் சென்றான்.

1. முகிலனின் பழக்கம் முறையானதுதானா? காரணம் கூறுக.
2. பெற்றோரை எதிர்த்துப் பேசும் பழக்கம் உள்ளவன் முகிலன் – இவனைப்பற்றி நும் கருத்தை எழுதுக.
3. நீ, உன் பெற்றோரிடம் எவ்விதம் நடந்துகொள்கிறாய்?
4. உன் பெற்றோருக்கு நீ செய்யும் உதவிகள் எவை?
5. எழிலன் படித்துக்கொண்டிருப்பதனை விட்டுவிட்டுக் கதவைத் திறந்தது முறைதானா?

## வாழ்க்கைத்திறன்

### முடிவெடுத்தல் திறன்

ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் வெற்றிச்செல்வன் விளையாட்டிலும் சிறந்து விளங்கினான். அவனுக்குத் தேர்வு நெருங்கிக்கொண்டிருக்கிறது.

ஒருநாள் உடற்கல்வி ஆசிரியர் அவனை அழைத்து, "மகிழ்ச்சியான செய்தி வெற்றிச்செல்வா! அடுத்தவாரம் பள்ளி மாணவர்களுக்கு இடையே புதுதில்லியில் தேசிய அளவிலான கைப்பந்துப் போட்டி நடைபெறவுள்ளது.

தமிழகத்தின் சார்பாக நம் பள்ளியிலிருந்து நீ தேர்வுசெய்யப்பட்டிருக்கிறாய். அதற்கு நீ புதுதில்லிக்குச் செல்லவேண்டும். உன் பெற்றோரிடம் கூறிவிடு" என்றார்.

அவன் பெற்றோர், "அதெல்லாம் ஒன்றும் வேண்டா; படிப்பதுதான் முக்கியம். ஏதோ பள்ளியில் விளையாடுகிறாய், போனால் போகட்டும் என்றிருந்தால், தில்லிக்குப் போகிறானாம். அவ்வளவு தொலைவு உன்னைத் தனியாக அனுப்பமுடியாது. எங்களாலும் துணைக்கு வரவியலாது எனத் திட்டவட்டமாகக் கூறிவிட்டனர்.

ஆசிரியர் இவ்வாய்ப்புக் கிடைத்தற்கரியது என்கிறார்.

பெற்றோர் வேண்டவே வேண்டா என்கின்றனர்.

வெற்றிச்செல்வனின் எதிர்காலம் சிறக்க, நீங்கள் நண்பர்களுடன் கலந்துரையாடி நல்லதொரு முடிவெடுங்கள்.

## மதிப்புக்கல்வி

### காலந்தவிராமை

அமெரிக்காவின் குடியரசுத்தலைவராக இருந்த வாஷிங்டன் எப்போதும் காலம் கருதிச் செயல்படுவார்.

நேரத்தை வீணாக்குவது அவருக்குப் பிடிக்காது.

எந்த ஒரு விழாவாக இருந்தாலும், குறித்த நேரத்துக்கு முன்பே சென்று விடுவார்.

வழக்கம்போல ஒருநாள் நாடாளுமன்றத்துக்கு வந்தார். ஆனால், அவருடைய தனிச்செயலாளர் இன்னும் வரவில்லை.

சில நிமிடங்களுக்குப் பிறகு பரபரப்புடன் வந்த செயலாளர், "ஐயா என்னை மன்னிக்க வேண்டும். என்னுடைய கடிகாரம் மெதுவாக ஓடுவதனால், வருவதற்குச் சிறிது நேரமாகி விட்டது" என்றார்.

வாஷிங்டன் தம்செயலாளரைப் பார்த்து, "ஒன்று உங்கள் கடிகாரத்தை மாற்றிவிடுங்கள் அல்லது நான் உங்களை மாற்ற வேண்டியிருக்கும்," என்றார்.

தமிழ்

மொழியாக்கம் செய்க.

Asoka was one of the best kings in the world's history. He hated war. His reign was a reign of peace. He became a Buddhist and sent out missionaries all over India. His aim was to get 'Darma' into the hearts of all his people.

இணையான தமிழ்ப்பழமொழியை அறிக.

1. Crying child will get milk.
   அழுத பிள்ளை பால் குடிக்கும்.
2. Make hay while the sun shines.
   காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
3. The childhood shows the man.
   விளையும் பயிர் முளையிலேயே தெரியும்.
4. All is well that ends well.
   முதற்கோணல் முற்றிலும் கோணல்.
5. A Good marksman may miss.
   ஆனைக்கும் அடி சறுக்கும்.

அறிந்துகொள்க.

முதலான, முதலிய, ஆகிய – இச்சொற்களின் பயன்பாடு

ஒரு தொகுப்பில் உள்ளவற்றைச் சுட்டும்போது முதன்மையானதனை மட்டும் சுட்டி, அதனோடு தொடர்புடைய பிறவற்றைச் சுட்டாதபோது 'முதலான' (அது தொடங்கி) என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

ஒரு தொகுப்பில் உள்ளவற்றில் அனைத்தையும் சுட்டாது, அதனோடு தொடர்புடைய சிலவற்றையோ பலவற்றையோ மட்டும் சுட்டும்போது 'முதலிய' என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

ஒரு தொகுப்பில் உள்ளவற்றில் அதனோடு தொடர்புடைய அனைத்தையும் முழுமையாகச் சுட்டும்போது 'ஆகிய' என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(எ.கா.)

1. நாம் ஒழுக்கத்தில் சிறந்து விளங்க திருக்குறள் முதலான அறநூல்களைக் கற்றல் வேண்டும்.
2. நாம் பண்பாட்டில் சிறந்து விளங்க நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலிய எட்டுத்தொகை நூல்களைக் கற்றல் வேண்டும்.
3. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழைப் போற்றி வளர்த்தல் வேண்டும்.

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
|---|---|

கீழுள்ள உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு வினாக்களுக்கு விடையளிக்க.

பதினான்கு வயது சிறுவன், ஏரிக்கரையில் உள்ள வேப்பமரத்தின் நிழலில் உட்கார்ந்து, நீரில் மீன்குஞ்சு துள்ளிக்குதித்து நீந்திச் செல்வதனையும், அது நீருக்குள் தலைகீழாகச் சென்று மறைவதனையும் காண்கிறான். இக்காட்சியைக் கண்டு உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளைச் சிறுவன் கவிதையாக எழுதுகிறான்.

"ஓடிப்போ ஓடிப்போ கெண்டைச் குஞ்சே – கரை
ஓரத்தில் மேயாதே கெண்டைக் குஞ்சே
தூண்டில் காரன் வரும் நேரமாச்சு – ரொம்பத்
துள்ளிக் குதிக்காதே கெண்டைக் குஞ்சே".

இதுவே அச்சிறுவனின் முதற்கவிதை. அச்சிறுவன்தான் இன்றைய தலைமுறையின் 'மக்கள் கவிஞர்' எனப் போற்றப்படும் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் ஆவார்.

பாவேந்தர் பாரதிதாசனிடம் முறையாகப் பாடம் கேட்ட இவர், பாடல் இயற்றும் ஆற்றலைப் படிப்படியாக வளர்த்துக் கொண்டார். 1954ஆம் ஆண்டில் 'படித்த பெண்' என்னும் திரைப்படத்துக்கு முதன்முறையாகப் பாடல் எழுதினார்.

இவர் பாடிய,

"தேனாறு பாயுது செங்கதிரும் சாயுது
ஆனாலும் மக்கள் வயிறு காயுது"

என்னும் பாடல் வரிகளைக் கேட்ட தோழர் ஜீவானந்தம், 'நீ மீண்டும் தோன்றிய பாரதியடா' எனக் கல்யாணசுந்தரத்தைப் பாராட்டினார்.

வினாக்கள் :

1. கல்யாணசுந்தரம் எந்த வயதில் தன் முதற்கவிதையை இயற்றினார்?
2. கல்யாணசுந்தரத்துக்கு வழங்கப்படும் அடைமொழி என்ன?
3. கல்யாணசுந்தரம் யாரிடம் பாடம் கேட்டார்?
4. கல்யாணசுந்தரத்தைத் தோழர் ஜீவானந்தம் எவ்வாறு பாராட்டினார்?
5. கல்யாணசுந்தரத்தின் சொந்த ஊர் எது?

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

கவிஞர் கண்ணதாசனுடன் நேர்காணல் நிகழ்த்துவது போன்ற உரையாடல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதனை வகுப்பில் பேசுக.

மாணவர்: ஐயா. . . வணக்கம். தங்களை நேரில் கண்டு உரையாடுவதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

கண்ணதாசன்: வணக்கம், தம்பி. எனக்கும் உங்களைப் போன்ற மாணவர்களுடன் பேசுவது என்றால் மகிழ்ச்சிதான். அப்படிப் பேசும்போது எனக்கும் என் பள்ளிக்காலம் நினைவுக்கு வந்துவிடுகிறது.

தமிழ்

மாணவர்: அப்படியா!. . . தங்கள் பள்ளி வாழ்க்கையைப்பற்றிக் கூறுங்கள்.

கண்ணதாசன்: எங்கள் ஊரின் ஒரு சந்திலே ஏட்டுப்பள்ளிக்கூடம் ஒன்று இருந்தது. நாலுவயதில் அப்பள்ளியில்தான் என் தொடக்கக்கல்வி தொடங்கியது. அடுத்து, ஆங்கிலப் பள்ளிக்கூடம் ஒன்றில் படித்தேன். அங்குப் பள்ளிக் கட்டணம் மூன்று ரூபாய். அந்தப்பணத்தைக் கட்டமுடியாமல் பலமுறை வெளியேஅனுப்பப்பட்டேன்; இருப்பினும், ஏழாம்வகுப்புவரை அப்பள்ளியில் படித்தேன்.

மாணவர்: பிறகு. . .

கண்ணதாசன்: பிறகு, அமராவதிப் புதூர் குருகுலத்தில் உள்ள ஓர் உண்டி உறைவிடப்பள்ளியில், ஏழாம் வகுப்புவரை படித்த என்னை, ஐந்தாம் வகுப்பில்தான் சேர்த்துக் கொண்டார்கள். அப்பள்ளியில் என் படிப்புத் தொடர்ந்தது.

மாணவர்: ஐயா!. . . தங்களுக்குப் பாடல் எழுதும் ஆர்வம் எப்போது தோன்றியது என்பதுபற்றிக் கூறுங்கள்.

கண்ணதாசன்: எழுதுவதற்கு முன்னால், வானொலி கேட்பதிலும் நூல்களைப் படிப்பதிலும்தான் எனக்கு ஆர்வம் மிகுதி. வானொலியில் பாடல்களைக் கேட்டுக்கேட்டே, அவற்றைப் பாடவும் நான் கற்றுக்கொண்டேன்; இராகங்களையும் தெரிந்துகொண்டேன்.

மாணவர்: தங்களுக்கு நூல்களைப் படிக்கும் ஆர்வம் மிகுதி எனக் கூறினீர்களே, அதனைப்பற்றி.....

கண்ணதாசன்: ஆமாம், தம்பி! பத்துப் பன்னிரண்டு வயதில் நாவல் படிப்பதில் எனக்குக் கொள்ளை ஆசை. சரத்பாபுவின் கதைகளையும் பங்கிம்பாபுவின் கதைகளையும் விரும்பிப் படிப்பேன்.

மாணவர்: எந்த வயதில் பாடல் எழுதினீர்கள்?

கண்ணதாசன்: பன்னிரண்டு வயதிலேயே எனக்குள் எழுதும் ஆற்றல் இருப்பதனை உணர்ந்தேன்.

மாணவர்: தாங்கள் அந்த வயதில் எழுதிய பாடலும் எழுதிய இடமும் நினைவில் உள்ளதா?

கண்ணதாசன்: எங்கள் ஊர் ஊருணிக்கரையில் உட்கார்ந்துதான் பாடல் எழுதுவேன்.

“வீணா கானம் விடியுமுன் கேட்டது
கர்ணா மிர்தம் காதுக்கு இனிமை
தூக்கம் கலைந்தது துள்ளி எழுந்தேன்
படுக்கையில் இருந்தே பருகினேன் அமுதம்”

இந்த நாலுவரிதான் நினைவில் உள்ளது, தம்பி.

மாணவர்: தமிழ்க்கவிதை உலகில் மாபெரும் மன்னர் நீங்கள்! தங்களைப்போல் எங்களுக்கும் பாடல் எழுத ஆவல். வழிகாட்டுவீர்களா?

கண்ணதாசன்: தம்பி. . . இன்று நம்மிடையே நூல்களைப் படிக்கும் பழக்கம் குறைந்துகொண்டே வருகிறது. நேரத்தை வீணாக்காமல் உங்களால் முடிந்தவரை நல்ல நல்ல நூல்களைப் படியுங்கள். வெற்றி பெறுவதற்கான முதற்படி அதுதான்; அடுத்து, உங்களைச் சுற்றி நிகழ்வதனையும் உற்றுநோக்குங்கள்; பிறர் படும்

துன்பமும் துயரமும் உங்களுக்குநேர்ந்ததாக உணருங்கள்; எழுதுங்கள். உங்கள் பெயர் தமிழிலக்கிய வரலாற்றில் இடம்பெறும்.

மாணவர்: எனக்கென நேரம் ஒதுக்கி மனம் திறந்து பேசினீர்கள். மிக்க நன்றி, ஐயா!

கண்ணதாசன்: மிக்க மகிழ்ச்சி.

| படித்தல் திறன் – வாய்விட்டுப் படித்தல் | செயல்பாடு – 3 |
|---|---|

இவ்வுலகம் இனியது; இதிலுள்ள வான் இனிமையுடைத்து;
காற்றும் இனிது. தீ இனிது. நிலம் இனிது.

ஞாயிறு நன்று. திங்களும் நன்று. வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.
மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.

கடல் இனிது. மலை இனிது. காடு நன்று. ஆறுகள் இனியன.
உலோகமும் மரமும் செடியும் கொடியும் மலரும் காயும் கனியும் இனியன.

மனிதர் மிகவும் இனியர். ஆண் நன்று. பெண் இனிது. குழந்தை இன்பம்.
இளமை இனிது. முதுமை நன்று. உயிர் நன்று.

உடல் நன்று. புலன்கள் மிகவும் இனியன. உயிர் சுவையுடையது.
மனம் தேன். அறிவு தேன். உணர்வு அமுதம். உணர்வே அமுதம். உணர்வு தெய்வம்.

மனம் தெய்வம். சித்தம் தெய்வம். உயிர் தெய்வம்.
காடு, மலை, அருவி, ஆறு, கடல், நிலம், நீர், காற்று, தீ, வான், ஞாயிறு, திங்கள்,
வானத்துச் சுடர்கள் – எல்லாம் தெய்வங்கள்.

– பாரதியார், வசனகவிதை

| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களை அகரவரிசையில் எழுதுக.

தெப்பம், பைந்தமிழ், திருவிழா, புதுமனை, தையல், பொதுவுடைமை, போராட்டம், தூய்மை, பாராட்டு, துணிவு.

த – ________ , ________ , ________ , ________ , ________

ப – ________ , ________ , ________ , ________ , ________

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.

உலகுக்கு உயிர்ப்பாற்றலை வழங்கும் ஞாயிறு ஒருபோதும் மறைவதில்லை. அதனைப் போன்றே இலக்கிய வளம்கொழிக்கும் மொழிகளிலும், உயிர்த்துடிப்புள்ள கவிஞர்கள் இடையறாது தோன்றுகிறார்கள். அவர்கள், அம்மொழிகளின் விழிகளுக்கு ஒளியூட்டி வருகிறார்கள். அவர்கள் வாழும் காலச் சூழலுக்கேற்பத் தத்தம் கவிதைகளைப் படைத்துக் காலத்தைவென்று நிலைத்து நிற்கின்றார்கள்.

| தேர்ந்தெடுத்து எழுதுதல் | செயல்பாடு – 6 |
|---|---|

பாடலுக்குரிய தலைப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

( வருத்தம், எழுத்துகள், கடிகாரம், மாசு )

| | |
|---|---|
| அ. பலருக்கு ஓய்வு நேரம்<br>காட்டுகிறது<br>தான் ஓய்வெடுக்காமல். | இ. கழிவு தின்னும்<br>மீன்கள் செத்து மிதந்தன<br>கடலில் கழிவுநீர். |
| ஆ. காகிதத் தொட்டிலில்<br>தூங்கும் குழந்தைகள். | ஈ. பூ. . . . . .<br>மலர மலர வாடிப் போனது<br>பூக்காரி முகம். |

| மொழித்திறன் பயிற்சி | செயல்பாடு – 7 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியில் கோடிட்ட இடங்களில் உரிய கூட்டப்பெயர்களை எழுதி நிரப்புக.

(எ.கா.) மரங்கள் அடர்ந்த **சோலையில்** மயில் அகவ குயில் கூவியது.

பள்ளி விடுமுறையில் தன் அத்தை வீட்டுக்கு வந்த எழிலி, வயல்வெளியைச் சுற்றிப் பார்க்கச் சென்றாள். அங்கு ஆட்டு ________ கண்டாள். வயலின் ஒருபுறத்தில் நெல் ________ காணப்பட்டது. அதனைப் பார்த்துக்கொண்டே சென்ற எழிலி அருகில் இருந்த, தென்னந் ________ க்குள் நுழைந்தாள். மரத்தில் தேங்காய் ________ யாகத் தொங்குவதனைக் கண்டாள். வானில் பறவைக் ________ பறந்து செல்வதனைக் கண்ட எழிலி மிகவும் மகிழ்ந்தாள். அங்கு மரநிழலில் உட்கார்ந்திருந்த ஒரு சிறுமி மலர்களையெல்லாம் கோத்து ________ யாக்குவதனைக் கண்டாள்.

(தோப்பு, கூட்டம், மாலை, மந்தை, குவியல், குலைகுலை)

| கண்டறிதல் | செயல்பாடு – 8 |
|---|---|

கட்டங்களில் மறைந்துள்ள இக்காலக்கவிஞர்களின் பெயர்களை வட்டமிடுக.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பா | அ | ப் | து | ல் | ர | கு | மா | ன் |
| ர | னி | ஞா | ப் | லா | கு | ன் | இ | பு |
| தி | ர | பா | க | பா | டா | கா | ம் | மு |
| தா | ர | சு | ப் | ண் | ரி | மீ | ரா | டி |
| ச | ம | ணி | கொ | ம் | ண | ஆ | ஜா | ய |
| ன் | ட் | கை | மு | மே | த் | தா | ரா | ர |
| டு | ங் | து | த் | மு | ர | வை | ச | ச |
| க | லி | வா | த | மி | ழ | ன் | ப | ன் |

| பிழை நீக்கி எழுதுதல் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் தொடரில் வண்ண எழுத்துகளிலுள்ள சொற்கள் பிழையாக உள்ளன. அதனைத் திருத்தி எழுதுக.

(எ.கா.) அனைவரும் சிறப்பு வகுப்புக்குத் தவறாமல் வருகை புரிதல் வேண்டும்.

திருத்தம் : அனைவரும் சிறப்பு வகுப்புக்குத் தவிராமல் வருகை புரிதல் வேண்டும்.

1. மு. வரதராசனார் தாய்மொழிமீது மிகுந்த அக்கரை கொண்டவர்.
2. களைப்புத் தீர இங்குச் சிறிது நேரம் இளைப்பாரிச் செல்வோமா ?
3. இந்த வினாவுக்கு உரிய விடையை நினைவுகூற முடியுமா ?
4. கல்விக்கு எள்ளை இல்லை.
5. குமணவள்ளல், புலவர் பெருஞ்சித்திரனாரின் வறியநிலையைக் கண்டு மனம் இறங்கினார்.

| அறிந்து கொள்வோம் | செயல்பாடு – 10 |
|---|---|

நாலு வேதம் ஆம் நவைஇல் ஆர்கலி
வேலி அன்னவன் மலையின்மேல் உளான்
சூலிதன் அருள் துறையின் முற்றினான்
வாலி என்று உளான் வரம்பில் ஆற்றலான்.

– கம்பர், கம்பராமாயணம்.

மேற்கண்ட பாடலில் இடம்பெற்றுள்ள நாலு வேதம் என்னும் சொல்லில் உள்ள நாலு என்பது நான்கு என்னும் எண்ணுப்பெயரின் விகாரமாகும். இவைமட்டுமன்றி நாலுமுகத்தான், நாலு திசை, நாலு புரவி, நாலு வாசல், நாலு கலை, நாலு நாள், நாலுபேரை, நாலு தெரு, நாலு வகுப்பு எனத் திருமூலர், இளங்கோவடிகள், கம்பர், ஔவையார், பட்டினத்தார், பாரதியார், பாரதிதாசன் முதலியோர் பாடல்களில் நாலு என்னும் சொல்லே எடுத்தாளப்பட்டுள்ளதனைக் காணலாம். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதிய கால்டுவெல், நான்கு என்பதன் அடிப்படையே நாலு எனக் குறித்துள்ளார்.

பயிற்சி

அ) கீழ்க்காணும் சொற்றொடர்களில் நாலு என்னும் சொல் அடைமொழியாக வரும்படி எழுதுக.

(எ.கா.) கடைக்குச் சென்ற வளர்மதி, நாலுகிலோ அரிசி வேண்டுமெனக் கேட்டாள்.

1. திருமங்கையாழ்வார் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என ________ கவியிலும் சிறந்து விளங்கினார்.
2. நான்கு மறை என்பதனைக் கம்பர் ________ வேதம் எனக் குறிப்பிடுகின்றார்.
3. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என ________ திசை உள்ளன.
4. வேலைக்குச் செல்வதற்கு விரும்பாத மகனைப் பார்த்து, அவன் தாய் ________ காசு உழைத்துப் பெற்றால்தான் அனைவரும் உன்னை மதிப்பர் எனக் கூறினாள்.
5. யானை ________ கால் விலங்குகளுள் ஒன்று.

ஆ) பாடநூலுள் நாலு என்னும் சொல் எங்கெங்கு இடம்பெற்றுள்ளது எனக் கண்டறிந்து எழுதுக.

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

அ) பொருந்தாத இணையைக் கண்டறிக. 1 × 1 = 1

1. சிறுபஞ்சமூலம் – காரியாசான்
2. ஞானரதம் – பாரதியார்
3. எழுத்து – சி. சு. செல்லப்பா
4. குயில்பாட்டு – கண்ணதாசன்

ஆ) பொருத்துக. 5 × 1 = 5

1. "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே" – கவிமணி
2. "சபைகளிலே தமிழெழுந்து முழங்கவேண்டும்" – நாமக்கல் கவிஞர்
3. "பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்" – பாரதியார்
4. "எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்" – பாரதிதாசன்
5. "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல்வேண்டும்" – கண்ணதாசன்

இ) தொடர்களில் உள்ள ஆகுபெயர்களின் வகைகளைக் கண்டறிக. 4 × 1 = 4

1. ஐந்துக்கும் பத்துக்கும் வேலை செய்ய ஆள் இல்லை.
2. உண்பது நாழி; உடுப்பவை இரண்டு.
3. எட்டு முழம் வாங்கி வா.
4. கிலோ என்ன விலை ?

## ஒய்வும் பயனும்!

ஒய்வாக இருக்கையில் தம்பி – நீ
    ஓவியம் வரைந்து பழகு!
தூய்மையோ டமைதி சேரும்! – நன்கு
    தோன்றிடும் உள்ள அழகு!

பாக்களும் இயற்றிப் பழகு – நல்ல
    பாடலைப் பாடி மகிழ்வாய்!
தாக்குறும் துன்பம் யாவும் – இசைத்
    தமிழினில் மாய்ந்து போகும்!

* அறிவியல் ஆய்வு செய்வாய் – நீ
    அன்றாடச் செய்தி படிப்பாய்!
செறிவுறும் உன்றன் அறிவு – உளச்
    செழுமையும் வலிவும் பெறுவாய்!

மருத்துவ நூல்கள் கற்பாய் – உடன்
    மனநூலும் தேர்ந்து கற்பாய்!
திருத்தமெய்ந் நூல்கள் அறிவாய் – வருந்
    தீமையும் பொய்யும் களைவாய்! *

– பெருஞ்சித்திரனார்

### பொருள்

மாணவர்களே! ஓய்வாக இருக்கும் நேரத்தில் ஓவியம் வரையக் கற்றுக்கொண்டால் தூய எண்ணங்களும் அமைதியும் சேர்ந்து உள்ளத்தின் அழகு வெளிப்பட, அது காரணமாக அமையும்.

தமிழில் பாடல்கள் எழுதவும் பாடவும் பழகிக்கொள்ளுங்கள்; இசைத்தமிழின் இனிமையால் வாழ்வின் துன்பங்கள் தொலைந்துபோகும்.

அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்ளுங்கள்; அன்றாட நிகழ்வுகளைச் செய்தித்தாள் வாயிலாக அறிந்துகொள்ளுங்கள்; உலகநிகழ்வுகளை அறிவதன்மூலம் அறிவுத்திறன் மேம்படும்; உள்ளம் வளமும் வலிமையும் பெற்றுச் சிறக்கும்; மருத்துவ நூல்களையும் மனநல நூல்களையும் படித்துத் தெரிந்துகொள்ளுங்கள்; அவை உடலையும், உள்ளத்தையும் பாதுகாக்கத் துணைபுரியும்.

நீங்கள் வாழ்க்கைக்கு உதவும் தத்துவ நூல்களைக் கற்றால், அதன்வழித் தீமையையும் பொய்ம்மையையும் விடுத்து நல்வாழ்வு வாழலாம்.

எனவே, ஏட்டுக்கல்வியுடன் கலையறிவும் தொழிற்கல்வியும் அறிவியற் சிந்தனையும் இருந்தால், நீங்கள் வாழ்வில் வெற்றிபெறலாம்; ஆதலால், ஓய்வுநேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிட்டு வாழ்வில் வளம்பெறுங்கள்.



**ஆசிரியர் குறிப்பு :** பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரை.மாணிக்கம். இவரது ஊர் சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம். இவர்தம் பெற்றோர் துரைசாமி, குஞ்சம்மாள் ஆவர். 10.03.1933அன்று பிறந்த இவர், 11.06.1995ஆம் நாள் மறைந்தார்.

கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்கள்மூலம் உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்க இவர் பாடுபட்டார்.

**நூற்குறிப்பு :** இப்பாடல், பள்ளிப்பறவைகள் என்னும் குழந்தைப்பாடல் தொகுப்பின் இரண்டாம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்நூலிலுள்ள பாடல்கள் பலவும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்களில் வெளிவந்தவை. இந்நூல் குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழிமாலை என முப்பிரிவாக அமைந்துள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இசையால் ______________ மறைந்து போகும்.
2. உலக நிகழ்வுகளை அறிந்தால் ______________ மேம்படும்.
3. ஏட்டுக் கல்வியறிவுடன் ______________ கல்வியறிவும் தேவை.
4. பள்ளிப்பறவைகள் என்னும் நூல் ______________ பிரிவாக அமைந்துள்ளது.

### ஆ) குறுவினாக்கள்

1. பெருஞ்சித்திரனார் குறிப்பு எழுதுக.
2. உள்ளத்தின் அழகு எப்போது வெளிப்படும் ?
3. கற்பனைத்திறன் வளர என்ன செய்யவேண்டும் ?
4. அறிவுத்திறன் மேம்படும் வழி யாது ?
5. எப்போது நல்வாழ்வு வாழலாம் எனப் பெருஞ்சித்திரனார் கூறுகிறார் ?

### இ) சிறுவினாக்கள்

1. ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்கும் வழிகளாகப் பெருஞ்சித்திரனார் கூறுவன யாவை ?
2. வாழ்வில் வெற்றிபெறுவதற்கான வழிகள் யாவை ?

### ஈ) நெடுவினா

ஓய்வும் பயனும் பற்றிப் பெருஞ்சித்திரனாரின் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

**அறிந்துகொள்க.**

**எண்ணுப் பெயர்களுக்குரிய எண்ணடைகள்**

| எண்ணுப் பெயர்கள் | எண்ணடைகள் | எடுத்துக்காட்டு | பயிற்சி |
|---|---|---|---|
| ஒன்று | ஒரு, ஓர் | ஒருவர், ஒரு மரம், ஓர் உயிர் | ஒன்று + எழுத்து = |
| இரண்டு | இரு, ஈர் | இருவர், இருவகை, ஈரெழுத்து | இரண்டு + ஆண்டு = |
| மூன்று | மூ, மு | மூவர், முத்தமிழ் | மூன்று + கனி = |
| நான்கு | நால், நாலு | நால்வர், நாலுநாள் | நான்கு + வரி = |
| ஐந்து | ஐ | ஐவர், ஐம்பெருங்காப்பியம் | ஐந்து + வகை = |
| ஆறு | அறு | அறுவர், அறுபடை | ஆறு + கால் = |
| ஏழு | எழு, ஏழ் | எழுவர், ஏழிசை | ஏழு + ஏழு = |
| எட்டு | எண் | எண்மர், எண்டிசை | எட்டு + பேராயம் = |
| பத்து | பதின், பன் | பதின்மர், பன்னிருவர் | பத்து + ஐந்து = |

தமிழ்

தமிழ்

# திருவிளையாடற் புராணம்

– பரஞ்சோதி முனிவர்

திருவாலவாய்க் காண்டம்

( தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம் )

## முன்கதைச் சுருக்கம்

எந்நாட்டவர்க்கும் பொதுவாக இருப்பதனால், தென்னாட்டில் தன்னுடைய அருள் விளையாடலை நிகழ்த்தியவர் தென்னாடுடைய சிவபெருமான். தமிழ்ப்புலவர்கள் இறைவனுக்கும் தமிழுக்கும் உள்ள பிணைப்பை உறுதிப்படுத்தவே திருவிளையாடல் புராணம் முதலிய புராணங்களை இயற்றியதாகக் கொள்ளலாம்.

புலவர், தம்புலமைத் திறத்தை அறிய இறைவனை வேண்டிச் சங்கப்பலகையைப் பெற்றனர். சங்கப்புலவர் நாற்பத்தெண்மரின் கருத்துப்போரைத் தீர்க்க இறைவனே தலைமைப்புலவராய் எழுந்தருளினார். அவரையும் சேர்த்துச் சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர் ஆயினர். இச்சமயத்தில் வங்கிய சேகரபாண்டியனின் மகன் வங்கிய சூடாமணிபாண்டியன் மதுரையின் அரசாட்சிப் பொறுப்பை ஏற்றான். அவன், இறைவனுக்குச் சண்பகமாலை சாத்தி வழிபடக்கருதிச் சண்பக நந்தவனத்தை ஏற்படுத்தினான்.

இதனால், சூடாமணி பாண்டியனுக்குச் சண்பகப் பாண்டியன் என்னும் பெயர் வழங்கலாயிற்று. அவன் ஒரு சமயம், தன் காதல் மனைவியுடன் சண்பகவனத்துக்குச் சென்றான். அவ்வேளையில் மெல்லெனப் புகுந்த இளந்தென்றல் புதுமணத்தை வீசியது. அப்படியொரு மணத்தை இதுவரை நுகர்ந்திராத பாண்டியனின் மனத்தில் ஓர் ஐயம் எழுந்தது. அது தீர்ந்ததா என்பதனை விளக்குவதே நம் பாடப்பகுதியாகும்.

### இறைவனிடம் தருமி வேண்டல்

1. ஐய யாவையும் அறிதி யேகொலாம்
வையை நாடவன் மனக்க ருத்துணர்ந்(து)
உய்ய வோர்கவி யுரைத்தெ னக்கருள்
செய்ய வேண்டுமென் றிரந்து செப்பினான்.

பொருள் : இறைவனிடம் தருமி, ‘எல்லாவற்றையும் அறிந்த இறைவனே! நீங்கள், பாண்டியன் ஐயத்தை நீக்கும் கருத்தைக் கவியாகப் பாடியளித்து யான் பிழைக்க அருள்புரிய வேண்டும்‘ எனப் பணிந்து வேண்டினான்.

சொற்பொருள் : வையை நாடவன் – பாண்டியன்; உய்ய – பிழைக்க; இரந்து செப்பினான் – பணிந்து வேண்டினான்.

இலக்கணக்குறிப்பு: உரைத்து, இரந்து – வினையெச்சங்கள்.

பகுபத உறுப்பிலக்கணம் : இரந்து = இர + த் (ந்) + த் + உ. இர – பகுதி; த் – சந்தி; த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

### இறைவன் தருமிக்குப் பாடல் அருளல்

2. தென்ன வன்குல தெய்வம் ஆகிய
மன்னர் 'கொங்குதேர் வாழ்க்கை'யின்தமிழ்
சொன்ன லம்பெறச் சொல்லி நல்கினார்
இன்னல் தீர்ந்தவன் இறைஞ்சி வாங்கினான்.

பொருள் : பாண்டியர் குலத் தெய்வமாகிய சொக்கநாதர் கொங்குதேர் வாழ்க்கை எனத் தொடங்கும் பாடலைச் சொல்லினிமை தோன்ற இயற்றித் தருமிக்கு வழங்கினார். தருமி, தன்மனத்துயர் நீங்கி, அதனைப் பணிவுடன் பெற்றுச் சென்றான்.

சொற்பொருள் : தென்னவன் குலதெய்வம் – சொக்கநாதன் (அ) சுந்தரபாண்டியன்; இன்னல் – துன்பம்; நல்கினார் – அளித்தார்; இறைஞ்சி – பணிந்து.

இலக்கணக்குறிப்பு : சொல்லி, இறைஞ்சி – வினையெச்சங்கள்.

பகுபத உறுப்பிலக்கணம் : நல்கினார் = நல்கு + இன் + ஆர். நல்கு – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

### பாண்டியன் களிகூர்தல்

3. அளக்கில் கேள்வியார் அரசன் முன்புபோய்
விளக்கி அக்கவி விளம்பி னார்கடன்
உளக்க ருத்துநேர் ஒத்த லால்சிரந்
துளக்கி மீனவன் மகிழ்ச்சி தூங்கினான்.

பொருள் : அளவில்லாத நூலறிவுடைய சங்கப் புலவர்கள் பாண்டியனிடம் சென்று, அப்பாடலின் பொருளை விளக்கினார்கள். மீன்கொடியை உடைய பாண்டியனின் கருத்துக்கேற்றவாறு அவ்விளக்கம் பொருந்தி வந்தமையால், அவன் மனமகிழ்ந்தான்.

சொற்பொருள் : அளக்கில் கேள்வியார் – அளவற்ற நூலறிவினர்; சிரம் துளக்கி – தலையசைத்து; மீனவன்– மீன்கொடியை உடைய பாண்டியன்.

இலக்கணக்குறிப்பு: விளக்கி, சிறந்து – வினையெச்சங்கள்; மகிழ்ச்சி – தொழிற்பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம் : விளக்கி = விளக்கு + இ. விளக்கு – பகுதி; இ – வினையெச்ச விகுதி; தூங்கினான் = தூங்கு+இன்+ஆன். தூங்கு – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

## நக்கீரன் தருமியை விலக்குதல்

4. வேந்தன் ஏவலால் விபுதர் தம்மொடும்
போந்து மீண்டவைப் புறம்பு தூங்கிய
ஆய்ந்த பொற்கிழி அறுக்கும் நம்பியை
நேர்ந்து கீரனில் லெனவி லக்கினான். *

பொருள் : பாண்டியனின் ஏவலால், புலவரோடும் திரும்பிச்சென்று, கழகத்தின் வெளியில் தொங்கிய சிறந்த பொன் முடிப்பை அறுத்தெடுக்கும் தருமியைக் கீரன் எதிர்ப்பட்டு 'நில்' எனத் தடுத்தான்.

சொற்பொருள் : விபுதர் – புலவர்; தூங்கிய – தொங்கிய ; பொற்கிழி – பொன்முடிப்பு; நம்பி – தருமி; புறம்பு – வெளியில்.

இலக்கணக் குறிப்பு : ஆய்ந்த பொற்கிழி – பெயரெச்சம்.

## தருமி இறைவனிடம் முறையிடுதல்

5. செய்யுள் கொண்டுபோய்த் திருமுன் வைத்துளப்
பையுள் கொண்டஅப் பனவன் என்னைநீ
மையுண் கண்டஇவ் வழுவு பாடலைக்
கையுள் நல்கினாய் கதியி லேற்கெனா.

பொருள் : தருமி, இறைவன் அளித்த பாடலை அவன் திருமுன் வைத்து, 'நீலநிறக் கழுத்தை உடைய இறைவனே! குற்றமுள்ள பாடலை நீ எனக்கு அளித்தது ஏன்?' என மனவருத்தத்துடன் கேட்டான்.

சொற்பொருள் : பையுள் – வருத்தம்; பனவன் – அந்தணன்; கண்டம் – கழுத்து; வழுவு பாடல் – குற்றமுள்ள பாடல்.

## இறையனாரும் நக்கீரரும்

6. ஆரவை குறுகி நேர்நின் றங்கிருந் தவரை நோக்கி
யாரைநம் கவிக்குக் குற்றம் இயம்பினார் என்னா முன்னம்
கீரனஞ் சாது நானே கிளத்தினேன் என்றான் நின்ற
சீரணி புலவன் குற்றம் யாதெனத் தேராக் கீரன்.

பொருள் : புலவர்கள் நிறைந்த அவையில் நுழைந்த இறைவன், அவையினரை நோக்கி, "என் பாடலில் குற்றம் கூறியவர் யார்"? எனக் கேட்டார். அவ்வாறு அவர் கேட்டு முடிப்பதற்குள், "நானே குற்றம் கூறினேன்" எனப் புகழ்வாய்ந்த நக்கீரன், அஞ்சாது எழுந்து கூறினான். குற்றம் யாதென இறைவன் கேட்டார்.

சொற்பொருள்: ஆர்அவை – (புலவர்கள்) நிறைந்த அவை; கிளத்தினேன் – சொன்னேன்; சீரணி – புகழ் வாய்ந்த.

இலக்கணக்குறிப்பு : நோக்கி – வினையெச்சம்; கிளத்தினேன் – தன்மை ஒருமை வினைமுற்று; தேராக் கீரன் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

7. சொற்குற்றம் இன்று வேறு பொருட்குற்றம் என்றான் தூய
பொற்குற்ற வேணி அண்ணல் பொருட்குற்றம் என்னை ? என்றான்
தற்குற்றம் வருவது ஓரான் புனைமலர்ச் சார்பால் அன்றி
அற்குற்ற குழற்கு நாற்றம் இல்லையே என்றான் ஐயன்.

பொருள் : பாடலில், “சொல் குற்றம் இல்லை; பொருள் குற்றம் உள்ளது’ என்றான் நக்கீரன். பொன்னிறத்தன்ன சடையை உடைய இறைவன், “பொருள் குற்றம் என்ன ?” எனக் கேட்டார். அதற்கு, “மலர்கள் முதலியவற்றால் மணம் சாருமேயன்றி, இருளையொத்த கூந்தலுக்கு இயற்கையில் மணம் இல்லை” என்றான், நக்கீரன்.

சொற்பொருள் : வேணி – செஞ்சடை; ஓரான் – உணரான்; அற்குற்ற (அல்கு+உற்ற) – இருளையொத்த; நாற்றம் – நறுமணம்; குழல் – கூந்தல்; அல்கு – இரவு.

இலக்கணக்குறிப்பு : புனைமலர் – வினைத்தொகை.

8. பரவிநீ வழிபட்டு ஏத்தும் பரஞ்சுடர் திருக்கா ளத்தி
அரவுநீர்ச் சடையார் பாகத்து அமர்ந்தஞா னப்பூங் கோதை
இரவினீர்ங் குழலும் அற்றோ எனஅஃதும் அற்றே என்னா
வெருவிலான் சலமே முற்றச் சாதித்தான் விளைவு நோக்கான்.

பொருள் : நக்கீரனை நோக்கி, ‘நீ வழிபடும் பரஞ்சோதியாகிய இறைவன், திருக்காளத்தியில் கோவில் கொண்டவன்; பாம்பையும் கங்கையையும் அணிந்த சடையை உடையவன். அவனது இடப்பாகத்தில் எழுந்தருளிய உமையம்மையின் குளிர்ந்த கருங்கூந்தலுக்கும் இதே தன்மை தானோ ?’ என இறைவன் வினவினார். அதற்கு நக்கீரன், எதிர்வருவதனை எண்ணிச் சிறிதும் அஞ்சாமல், ‘அக்கூந்தலும் அத்தன்மையுடையதே’ எனப் பதிலிறுத்தான்.

சொற்பொருள் : ஏத்தும் – வணங்கும்; அரவுநீர்ச் சடையார் – சிவபெருமான்; ஞானப்பூங்கோதை – உமையம்மை; வெருவிலான் – அச்சமற்ற நக்கீரன்; சலம் – மன உறுதி.

தமிழ்

## நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே

9. கற்றைவார் சடையான் நெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவான் இன்னும் அஞ்சான் உம்பரார் பதிபோல் ஆகம்
முற்றுநீர் கண்ணா னாலும் மொழிந்தநும் பாடல் குற்றம்
குற்றமே யென்றான் தன்பால் ஆகிய குற்றம் தேரான்.

பொருள் : அடர்ந்த நீண்ட சடையை உடைய இறைவன், நெற்றிக்கண்ணைச் சிறிதளவு காட்ட, அதனால் துன்புற்றபோதும் அஞ்சாதவனாய், 'இந்திரன்போல் உடல் முழுவதும் கண்களை உடையவராயினும், உமது பாடல் குற்றமுடையதே' என்று கூறினான், நக்கீரன்.

சொற்பொருள் : கற்றைவார் சடையான் – சிவபெருமான்; உம்பரார் பதி – தேவர்தலைவன் (இந்திரன்).

இலக்கணக்குறிப்பு : பற்றுவான், அஞ்சான் – வினையாலணையும் பெயர்கள்; குற்றம் – தொழிற்பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம் : பற்றுவான் = பற்று + வ் + ஆன். பற்று – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; தேரான் =தேர் + ஆ + ஆன். தேர் – பகுதி; ஆ – எதிர்மறை இடைநிலை (மறைந்தது); ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

## நெற்றிக்கண் வெப்பத்தால் நக்கீரன் வருந்தலும் இறைவன் மறைதலும்

10. தேய்ந்த நாண்மதிக் கண்ணியால் நுதல்விழிச் செந்தீப்
பாய்ந்த வெம்மையில் பொறாதுபொற் பங்கயத் தடத்துள்
ஆய்ந்த நாவலன் போய்விழுந் தாழ்ந்தனன் அவனைக்
காய்ந்த நாவலன் இம்மெனத் திருவுருக் கரந்தான். *

பொருள் : பிறை நிலவைத் தலையில் சூடியவன் இறைவன். அவனது, நெற்றிக்கண்ணில் இருந்து வந்த தீப்பொறியின் வெப்பம் தாளாது நக்கீரன் பொற்றாமரைக் குளத்தில் மூழ்கினான். புலவர் வடிவில் வந்த சோமசுந்தரக் கடவுள் விரைந்து தனது திருவுருவத்தை மறைத்து அருளினார்.

சொற்பொருள் : நுதல்விழி – நெற்றிக்கண்; பொற்பங்கயத்தடம் – பொற்றாமரைக் குளம்; நாவலன் – புலவர்; கரந்தான் – மறைந்தான்.

இலக்கணக்குறிப்பு : தேய்ந்த, பாய்ந்த, ஆய்ந்த, காய்ந்த – பெயரெச்சங்கள்; விழுந்து – வினையெச்சம்; செந்தீ, வெம்மை – பண்புத்தொகைகள்.

பகுபத உறுப்பிலக்கணம் : தேய்ந்த = தேய் + த் (ந்) + த் + அ. தேய் – பகுதி; த் – சந்தி; த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

ஆசிரியர் குறிப்பு : பரஞ்சோதி முனிவர் நாகை மாவட்டத்திலுள்ள திருமறைக்காடு (வேதாரண்யம்) என்னும் ஊரில் பிறந்தவர். தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றவர். இவரின் தந்தையார் மீனாட்சிசுந்தர தேசிகர் ஆவார்.

பரஞ்சோதி முனிவர் துறவியாகிச் சிவாலயந்தோறும் சென்று இறைவனை வழிபட்டு வந்தார். அவ்வாறு மதுரை நகரை அடைந்து மீனாட்சிஅம்மனையும் சோமசுந்தரக் கடவுளையும் வணங்கியவர், அந்நகரிலேயே சிலகாலம் தங்கியிருந்தார்.

அந்நகரத்தார் அவரைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, திருவிளையாடற் புராணத்தை இயற்றினார். அந்நூலைச் சிவபெருமான் திருக்கோவிலின் எதிரே உள்ள அறுகால் பீடத்தில் இருந்து வடமொழி, தென்மொழிப்புலவர் யாவரும் போற்ற அரங்கேற்றினார்.

இவர் திருவிளையாடற் போற்றிக்கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

நூற்குறிப்பு : திருவிளையாடற் புராணம், மதுரைக்காண்டம் (பதினெட்டுப்படலம்), கூடற்காண்டம் (முப்பதுபடலம்), திருவாலவாய்க்காண்டம் (பதினாறுபடலம்) என்னும் முப்பெருங்காண்டத்தையும் படலம் என்னும் அறுபத்து நான்கு உட்பிரிவையும் உடையது. இந்நூலில், விருத்தப்பாக்கள் மூவாயிரத்து முந்நூற்று அறுபத்து மூன்று உள்ளன.

இந்நூல், இறைவனின் அறுபத்து நான்கு திருவிளையாடலை விளக்கி எழுந்த நூல்களுள் விரிவானதும் சிறப்பானதும் ஆகும். தொடைநயமும் பத்திச்சுவையும் மிக்க இந்நூலுக்கு ந.மு. வேங்கடசாமி உரையெழுதியுள்ளார்.

இறைவன் தருமிக்கு அருளிய பாடல்

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீஅறியும் பூவே.

– குறுந்தொகை, 2

தமிழ்

தமிழ்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. திருவிளையாடற் புராணத்தை இயற்றியவர் ____________.
2. திருவிளையாடற்புராணத்தில் காண்டங்கள் ____________ உள்ளன.
3. இறைவனிடம் பாடலைப்பெற்றுச் சென்றவன் ____________.
4. பொற்கிழி பெறச்சென்ற தருமியைத் தடுத்தவன் ____________.
5. உடல் முழுவதும் கண்களையுடையவன் ____________.

**2. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| மதுரைக்காண்டம் | – | பதினாறு படலம் |
| கூடல்காண்டம் | – | பதினெட்டுப் படலம் |
| திருவாலவாய்க்காண்டம் | – | முப்பது படலம் |

### ஆ) குறுவினாக்கள்

1. தருமி, இறைவனிடம் வேண்டியதும் இறைவன் தருமிக்கு வழங்கியதும் யாது?
2. தருமியின் பாடலைக்கேட்ட பாண்டியனின் மனநிலையைக் கூறுக.
3. தருமி, பொற்கிழி பெறச்சென்றபோது நிகழ்ந்தது யாது ?
4. இறைவனிடம் தருமி வருத்தத்துடன் வினவியது யாது ?
5. அரசவைக்கு வந்த இறைவன் வினவியது யாது ?

### இ) சிறுவினாக்கள்

1. திருவிளையாடற் புராணம் – குறிப்பு எழுதுக.
2. பரஞ்சோதி முனிவர் – குறிப்பு எழுதுக.
3. இறைவனுக்கும் நக்கீரனுக்கும் இடையே நடந்த உரையாடலை விவரிக்க.

### ஈ) நெடுவினா

தருமிக்குப் பொற்கிழி அளித்த படலக் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

# கடற்பயணம்

தமிழ்நாட்டு வாணிக வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்தது. பழங்காலந்தொட்டே தமிழர் உள்நாட்டு, அயல்நாட்டு வாணிகத்தில் சிறப்புற்றிருந்தனர். உள்நாட்டு வாணிகத்தைவிட அயல்நாட்டு வாணிகத்திலேயே வருவாய் மிகுதி. அயல்நாட்டு வாணிகத்திலும் தரைவழியாகச் செய்யும் வாணிகத்தைவிட, நீர் வழியாகச் செய்யும் வாணிகம் பெரும் பொருளைத் தரும். எனவே, அந்நாளில் கடல் வாணிகம் மிகவும் சிறந்திருந்தது.

## தமிழரின் கடற்பயணம்

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்னும் ஔவைமொழியும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் கணியன் பூங்குன்றன் மொழியும், தமிழர்களின் உலகளாவிய சிந்தனைக்கும் பன்னாட்டுத் தொடர்புக்கும் சான்றுகளாம்.

பழங்காலத்தில், தமிழர் பிற நாடுகளுக்குக் கடற்பயணம் மேற்கொண்ட செய்தி முந்நீர் வழக்கம் எனத் தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டுள்ளது. பழந்தமிழர் பொருளீட்டுதலைத் தம் கடமையாகக் கருதினர். இதனைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள பொருள்வயிற் பிரிவு விளக்குகிறது. இப்பிரிவு காலில் (தரைவழிப்பிரிதல்) பிரிவு, கலத்தில் (நீர்வழிப் பிரிதல்) பிரிவு என இருவகைப்படும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் மேற்கே கிரீசு, உரோம், எகிப்துமுதல் கிழக்கே சீனம்வரையிலும் கடல்வழி வாணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். எகிப்து, பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா, சீனம் ஆகிய நாடுகள் தமிழரின் பொருள்களை விரும்பிப் பெற்றன. ஏலமும் இலவங்கமும் இஞ்சியும் மிளகும் மேற்காசிய நாடுகளில் நல்ல விலைக்கு விற்கப்பட்டன. தமிழ்நாட்டில், பிற நாட்டார் உள்ளத்தைக் கவரும் பல பொருள்கள் மிகுதியாகக் கிடைத்தன. அவற்றுள், முத்தும் பவளமும் ஆரமும் அகிலும் வெண்துகிலும் சங்கும் குறிப்பிடத்தக்கன. பழந்தமிழர், கிரேக்கரையும் உரோமானியரையும் யவனர் என அழைத்தனர்.

## கப்பல்

பழங்காலத்திலேயே தமிழகத்தில் பலவகையான கப்பல்கள் கட்டப்பட்டன. ஒவ்வொரு பெரிய கப்பலும் மதில்சூழ்ந்த கோட்டைபோலத் தோன்றுமாம். அஃதாவது, நான்கு பக்கமும் நீர் நிரம்பிய கழனிகள். அதன் நடுவில் தனியாக மதிலோடு கூடிய மருதநில அரசனது கோட்டை. அக்கோட்டையின் தோற்றமானது, நடுக்கடலில் செல்லும் கப்பலுக்கு உவமையாகப் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.

### கடலும் மரக்கலங்களும்

ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி என்பவை கடலைக் குறிக்கும் தமிழ்ச்சொற்கள். இவ்வாறே மரக்கலத்துக்கும் தமிழ்மொழியில் பெயர்கள் பல வழங்குகின்றன. அவை: கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, பஃறி, ஓடம் என்பன. ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு வகையான கலத்தைக் குறிக்கும். இச்சொற்களைக் கொண்டே பண்டைத் தமிழர்களின் கடற்பயணம் பற்றித் தெளிவாக அறியலாம். உப்பங்கழிகளில் செலுத்துதற்குரிய சிறிய படகுகளும் கடலில் செலுத்துதற்குரிய பெரிய நாவாய்களும் அன்று இருந்தன. கடலில் செல்லும் பெரிய கலம் நாவாய் எனப்படும். புகார் நகரத்தில் நிறுத்தப்பட்ட நாவாய்கள், அலைகளால் அலைப்புண்டு கட்டுத்தறியில் கட்டப்பட்ட யானை அசைவதுபோல் அசைந்தன. அவற்றின் உச்சியில் கொடிகள் அசைந்து ஆடின எனப் பட்டினப்பாலை கூறுகின்றது.

| கடல் கடந்த தமிழ் | |
|---|---|
| தமிழ் | கிரேக்கம் |
| அரிசி | ஒரைஸா |
| கருவூர் | கரோரா |
| காவிரி | கபிரில் |
| குமரி | கொமாரி |
| தொண்டி | திண்டிஸ் |
| மதுரை | மதோரா |
| முசிறி | முசிரில் |

பெரிய நாவாய்கள் காற்றின் துணைகொண்டே இயங்கின. அவை பாய்மரக் கப்பல்கள் எனப்பட்டன. இதற்குக் காற்றானது, எவ்வெப்போது எவ்வெத்திசை நோக்கி வீசும் என்பதனைத் தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர். கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தினர் என்பதனைப் புறநானூற்றுப் பாடல் கூறுகிறது.

### துறைமுகங்கள்

தமிழகத்தில் நடைபெற்றுவந்த வாணிகத்தின் பயனாகப் பல துறைமுகங்கள் கடற்கரைப் பட்டினங்களாகச் சிறந்து விளங்கின. அவற்றுள் காவிரிப்பூம்பட்டினம், முசிறி, கொற்கை ஆகியவை குறிப்பிடத்தக்கன.

முசிறி, சேர மன்னர்க்குரிய துறைமுகம். அங்குச் சுள்ளி என்னும் பெரிய ஆற்றில் யவனர்களின் மரக்கலங்கள், ஆற்றுத்துறைகள் கலங்கிப் போகும்படி வந்து நின்றன. அக்கலங்களுக்கு உரிய யவனர்கள், பொன்னைச் சுமந்து வந்து, அதற்கு ஈடாக மிளகை ஏற்றிச் சென்றார்கள். இச்செய்தியை, அகநானூறு தெரிவிக்கிறது.

பாண்டிய நாட்டு வளத்தைப் பெருக்கியது கொற்கைத் துறைமுகம். இத்துறைமுகத்தில் முத்துக்குளித்தல் மிகச் சிறப்பாக நடந்ததனை வெனிசு நாட்டறிஞர் மார்க்கோபோலோ குறித்துள்ளார். இங்குச் சங்க காலத்தும் முத்துக்குளித்தல் நடந்தது. ஏற்றுமதிப் பொருள்களில் முத்தே முதலிடம் பெற்றது. மதுரைக்காஞ்சியும் சிறுபாணாற்றுப்படையும் கொற்கை முத்தைச் சிறப்பிக்கின்றன. விளைந்து முதிர்ந்த விழுமுத்து என மதுரைக்காஞ்சி கூறும்.

கடற்கரையை அடுத்து இருக்கும் ஊர்களைப் பட்டினம், பாக்கம் என்றழைப்பர்.



அவ்வூர்களில் பெரும்பாலும் வணிகர்களே வாழ்ந்து வந்தார்கள். சோழநாட்டின் துறைமுகமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் (பூம்புகார்), சுங்கச்சாலையும் கலங்கரை விளக்கமும் இருந்தன.

இங்குக் கப்பலிலிருந்து நிலத்தில் இறக்கப்படுவனவும், நிலத்திலிருந்து கப்பலில் ஏற்றப்படுவனவுமாகிய அளவில்லாத பண்டங்கள் முன்றிலில் மலைபோலக் குவிந்து கிடந்தன.

காவிரிப்பூம்பட்டினத்து மாடங்களில் உள்ள மகளிர் கைகளைக் கூப்பி, வெறியாடும் மகளிரொடு பொருந்தி வேய்ங்குழல் முதலியவற்றை வாசிக்க, நகர் விழாக்கோலம் பூண்டது. தெய்வத்துக்கென எடுத்த கொடிகளும், விலைப்பண்டங்களை அறிவித்தற்குக் கட்டிய கொடிகளும், ஆசிரியர்கள் வாது செய்யக் கருதி வைத்த கொடிகளும், கப்பலின் கூம்பிலுள்ள கொடிகளும் அங்குக் கலந்து காணப்பட்டன.

கடல்வழியே வந்த குதிரைகளும், தரை வழியே வந்த மிளகுப் பொதிகளும், இமயத்திலுண்டான மணிகளும் பொன்னும், குடகு மலையிற் பிறந்த சந்தனமும் அகிலும், கொற்கைத்துறையிற் பிறந்த முத்தும், கீழ்க்கடலில் உண்டான பவளமும், கங்கையில் உண்டான பொருள்களும், காவிரியில் உண்டான வளங்களும், ஈழ நாட்டிலிருந்து வந்த உணவுப் பொருள்களும், பிற நாட்டுப் பொருள்களும், பிற அரிய பொருள்களும் வந்து சேர, வளம் மிகுந்த பரந்த இடத்தையுடைய தெருக்களாக விளங்கின.

### ஏற்றுமதி இறக்குமதி

பழந்தமிழகத்தின் வாணிகப்பொருள்களைப் பற்றிய குறிப்புகள் பட்டினப்பாலையிலும் மதுரைக்காஞ்சியிலும் காணப்படுகின்றன. இங்கிருந்து ஏற்றுமதியான பொருள்களுள் இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண்துகில், அரிசி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இஞ்சி முதலியன குறிப்பிடத்தக்கவை.

தமிழகப் பொருள்கள் சீனத்தில் விற்கப்பட்டன. சீனத்துப் பட்டும் சருக்கரையும் தமிழகத்துக்கு இறக்குமதி ஆயின. கரும்பு, அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவிலிருந்து கொண்டுவந்து பயிரிடப்பட்டது.

கடற்பயணம்பற்றிய கல்வியறிவு இந்நாளில் மக்களை எட்டியுள்ளது. கடல்சார் பல்கலைக்கழகத்தின் வாயிலாகப் பட்டம், பட்டயக்கல்வி கற்பிக்கப்பெற்று வருகின்றன. இத்துறையில் பயில்வோருக்குப் பயிற்சியும் பணிவாய்ப்பும் நிரம்ப உள்ளன. எனவே,

மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம் என்னும் பாரதியின் கனவு இன்று நனவாகி உள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.

அ) கடல் பயணத்தை முந்நீர் வழக்கமெனக் குறிப்பிடும் நூல் ________.

ஆ) கடலில் செல்லும் பெரிய கலம் ________ எனப்பட்டது.

இ) காவிரிப்பூம்பட்டினத்தில் சுங்கச்சாலையும் ________ இருந்தன.

2. பொருத்துக.

| நாடு | | துறைமுகம் |
|---|---|---|
| சேர நாடு | – | காவிரிப்பூம்பட்டினம் |
| சோழ நாடு | – | கொற்கை |
| பாண்டிய நாடு | – | முசிறி |

### ஆ) குறுவினாக்கள்

1. கடற்பயணம் மேற்கொள்ளக் காரணங்கள் யாவை ?
2. யவனர் என்போர் யாவர் ?
3. பொருள்வயிற் பிரிவு பற்றி எழுதுக.
4. கலத்தைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை ?

### இ) சிறுவினாக்கள்

1. தமிழகத்தில் நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள்பற்றி எழுதுக.
2. கப்பலின் தோற்றத்தைப் புறநானூறு எவ்வாறு உவமிக்கிறது ?
3. அக்காலத்தில் பூம்புகார் எவ்வாறு விளங்கியது ?

### ஈ) நெடுவினா

தமிழகத்தின் பழங்காலத் துறைமுகங்கள் பற்றியும் அங்கு நடைபெற்ற வாணிகம் பற்றியும் விளக்குக.

### உ) மரபுத்தொடர்களைச் சொற்றொடர்களில் அமைக்க.

1. கைவந்த கலை : ________________________.
2. அத்தி பூத்தாற்போல : ________________________.
3. உள்ளங்கை நெல்லிக்கனி : ________________________.

### ஊ) சொற்றொடர் வகையை அறிந்து எழுதுக.

தமிழ்

1. நாவாய்களை வங்கம் என்றும் கூறுவர். – ______________.

2. கிரேக்கரையும் உரோமானியரையும் தமிழர் எவ்வாறு அழைத்தனர் ?

– ______________.

**எ) இருபொருள் எழுதுக.**

1. திரை ______________, ______________.
2. கலிங்கம் ______________, ______________.
3. கலை ______________, ______________.
4. கவி ______________, ______________.

**செயல்திட்டம் :** களப்பயணம் மேற்கொள்க. (துறைமுகம்)

> அறிந்துகொள்க.
>
> நீங்கள் வாழும் நிலப்பகுதி எவ்வகைத் திணை என அறிந்துகொள்க.
>
> திணையும் – நிலமும்



குறிஞ்சி – மலையும் மலைசார்ந்த இடமும்



முல்லை – காடும் காடுசார்ந்த இடமும்



மருதம் – வயலும் வயல்சார்ந்த இடமும்



நெய்தல் – கடலும் கடல்சார்ந்த இடமும்



பாலை –மணலும் மணல்சார்ந்த இடமும்
(வறண்ட நிலப்பகுதி)

தமிழ்



# கெலன் கெல்லர்

கெலன் கெல்லர், அமெரிக்காவின் புகழ்பெற்ற எழுத்தாளராகவும் அரசியல் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கினார். அவரைக் காணவந்த ஒருவர், அவரிடம், "உங்களுக்கு மிகவும் விருப்பமான ஒன்றனைப் பெற விரும்பினால், அஃது என்னவாக இருக்க வேண்டுமெனக் கேட்பீர்கள்" என்று கேட்டார்.

"இந்த உலகத்தில் அமைதி மலரவேண்டும் எனக் கேட்பேன்"– என்றார் கெலன்.

"பார்க்கும் திறனும் கேட்கும் திறனும் பேசும் திறனும் வேண்டும்" எனக் கேட்பார் என நினைத்தவருக்குப் பெருத்த ஏமாற்றம்.

ஆம், கெலன் கெல்லரின் கண்கள் பாரா; காதுகள் கேளா; வாய் பேசாது. பத்தொன்பது மாதக்குழந்தையாக இருந்தபோது ஏற்பட்ட கொடிய நோயானது, அவருடைய மூன்று புலனையும் பறித்துக்கொண்டது. கெலன், தன் உணர்வுகளை வெளிப்படுத்த இயலாத இருண்ட உலகில் வாழ வேண்டியதாயிற்று. ஆறு வயதானபோது அலெக்சாண்டர் கிரகாம்பெல் உதவியால் பெர்கின்ஸ் பள்ளியில் சேர்ந்தார். அங்குப் பணிபுரிந்த அன்னிசல்லிவான் என்பவர் கெலனுக்கு ஆசிரியராக வாய்த்தார்.

மூன்று புலனற்றவர் என்பது தெரிந்தும், ஆசிரியர் அன்னி, தன்னம்பிக்கையுடன் அவருக்குக் கற்பிக்கத் தொடங்கினார். அவர், முதலில் பொருள்களின் பெயரை ஒவ்வோர் எழுத்தாகக் கெலனின் உள்ளங்கையில் தம் விரல்களால் எழுதிக் கற்பித்தார்; கெலனும் அன்னியின் குரல்வளையின்மீது கைவைத்து ஒலி அதிர்வுகளின்மூலம் எழுத்துகளையும் சொற்களையும் அறிந்துகொண்டார். அதன்பின், பாஸ்டனில் உள்ள ஹோரஸ்மான் காதுகேளாதோருக்கான பள்ளியிலும், நியூயார்க்கில் உள்ள ரைட் ஹூமாசன் பள்ளியிலும் முறைப்படி பயின்றார்.

---

பெர்கின்ஸ் பள்ளி : பார்வையற்றோருக்கான பள்ளி அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் அமைந்துள்ளது.

கெலன், பிரெய்லி முறையில் எழுதவும் படிக்கவும் கற்றார். அவர், தனக்கெனத் தனியாக உருவாக்கப்பட்ட தட்டச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தினார். ஆசிரியை அன்னி அளித்த பயிற்சியின் பயனாக, கேம்பிரிட்ஜ் ரெட் கிளிஃப் கல்லூரி நுழைவுத் தேர்வில் வெற்றிபெற்று, இளங்கலைப்பட்ட வகுப்பில் சேர்ந்தார்;பட்டமும் பெற்றார்.இத்தகைய மாற்றுத்திறனாளர்களுள் முதன்முதலில் பட்டம் பெற்றவர் இவரே. இவர் பல நூல்களை எழுதினார்; போர்களை எதிர்த்து உலக நாடுகள் பலவற்றுக்கும் சுற்றுப்பயணம் செய்தார்.


ஆசிரியர் அன்னிசல்லிவனுடன் கெலன்

கெலன், தனது வாழ்நாளைக் கண்ணிழந்தோர் மற்றும் காதுகேளாதோர்க்காகச் செலவிட்டார். அதற்காக, அல்லும் பகலும் அயராது உழைத்தார். அவர்களுக்கென உலகமெங்கும் பள்ளிகள் திறக்கச்செய்யும் பொருட்டு மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியுடன் உலக நாடுகள் பலவற்றுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். ‘கெலன் கெல்லர் நிதி’ என ஒன்றனைத் தொடங்கி, அந்நிதியில் சேர்ந்த தொகையான ரூபாய் ஒன்றரைக் கோடியை அப்பள்ளிகளுக்கு வழங்கினார். பார்வையற்றோருக்கெனத் தேசிய நூலகம் ஒன்றனை உருவாக்கி, உலகம் முழுவதிலும் இருந்து நூல்கள் வந்து குவிய ஏற்பாடு செய்தார். தன்னைப்போல அவர்களும் மீட்சி பெறவேண்டும் என்னும் எண்ணத்துடன் தன் எண்பத்தெட்டு வயதுவரை அயராது உழைத்தார்.


அலெக்சாண்டர் கிரகாம் பெல்லுடன் கெலன்

“வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை; ஒன்றுபோனால் இன்னொன்று வரும். அந்த நம்பிக்கையிருந்தால் வாழ்க்கை வெறுமை ஆகாது”– இவ்வாறு கூறிய கெலன், அந்நம்பிக்கையை மெய்ப்பிப்பதுபோல், “நீங்கள் கண்பார்வை அற்றவராகவும், காது கேளாதவராகவும் இருந்தும்கூட எப்படி உங்களால் சாதிக்க முடிந்தது ?” எனக் கெலனிடம் விக்டோரியா மகாராணி, கேட்டபொழுது, ‘அதற்குக் காரணம் என்னுடைய ஆசிரியரே’ எனக் கெலன் கூறினார். “என் மூன்று புலன்களை இழந்ததனால்தான், எனக்கு அவர் ஆசிரியராகக் கிடைத்தார்.” எனப் பதிலளித்தார். ஆசிரியர் அன்னி இல்லாவிட்டால் கெலனை இவ்வுலகில் யாருக்கும் தெரிந்திலது.


பாலி தாம்சனுடன் கெலன்

ஆசிரியர் அன்னி 1930ஆம் ஆண்டு இறந்துவிடத் தனது மொழிபெயர்ப்பாளர் பாலி தாம்சன் என்பாரின் உதவியுடன் வாழ்ந்து வரலானார்; ஜப்பான் முதலான நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். கெலன், வாஷிங்டன் நகரின் புகழ்பெற்ற பெண்மணியாகத் திகழ்ந்தார்.

தமிழ்

கெலன் கெல்லர், ‘‘மனிதர்கள் எல்லாவற்றையும் எளிதாக எடுத்துக்கொள்கிறார்கள்; அவர்கள் எதனையுமே முதன்மையாகக் கருதுவதில்லை. எதனையாவது இழந்த பிறகுதான் அதன் அருமையை உணர்கிறார்கள். மனிதர்கள் பார்த்தல், பேசுதல், தொடுதல், முகர்தல், கேட்டல் ஆகிய ஐம்புல உணர்வை இயற்கையாகவே பெற்றிருக்கிறார்கள். இந்த உணர்வுகளின் மதிப்பைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் பலருக்கு இல்லை, அன்றாட வாழ்க்கைக்கு இவையெல்லாம் தேவையென்பதனை அவர்கள் மறந்துவிடுகிறார்கள்,’’ என்பார்.

ஒருநாள் இரவு கெலன் கெல்லர், கடவுளின் அருளால் மூன்று நாள் மட்டுமே தமக்குப் பார்வை கிட்டியதாகக் கனவு கண்டார். அதற்கே அவர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். முதல் நாள், கண்ணொளி கிடைத்ததும் முதன்முதலில் பார்த்தது, அவரின் கல்விக்கண் திறந்து வைத்த ஆசிரியரின் முகத்தையே. அவரைச் சந்தித்ததற்குப் பின், பொறுமை, அன்பு, இரக்கம், துணிவு, தன்னம்பிக்கை ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாகத் தமது ஆசிரியர் திகழ்வதனை உணர்ந்தார். ஆசிரியரைப் பார்த்ததற்குப் பின் அவர், தமது உயிர்த்தோழிகளைச் சந்தித்தார். அவர்களின் கள்ளங்கபடமற்ற அழகான முகங்களைக் கண்டார்.

வீட்டுக்கு வந்து, வீட்டிலுள்ள சின்னஞ்சிறு பொருள்களையெல்லாம் ஒன்றுவிடாமல் பார்த்தார். அவற்றுள், சில வண்ணப் பொருள்களையும் சுவரில் மாட்டப்பட்டிருந்த அழகிய ஓவியங்களையும் அலமாரியில் அடுக்கி வைக்கப் பெற்றிருந்த புத்தகங்களையும் கண்கொட்டாமல் பார்த்தார். அன்றைய மாலைப்பொழுதில் வெளியில் நடந்து செல்லும்போது மரங்களின் அழகையும் இயற்கையின் அழகையும் கண்டுகளித்தார். வீட்டுக்கு வரும்வழியில் பக்கத்து வீட்டுக்காரரின் பண்ணையில் மக்கள் சிலரையும் குதிரைகளையும் கண்டார். மாலைப்பொழுதில் கதிரவன் மறையும் காட்சியைக் கண்டு மகிழ்ந்தார். வீட்டிலுள்ள மின்விளக்குகள் அவரைக் கவர்ந்தன. அவை அவருக்கு மகிழ்ச்சியைத் தந்தன. பகலில் கண்ட பல்வேறு காட்சிகளில் மனம் ஈடுபாடு கொண்டிருந்ததனால், அன்றிரவு அவருக்கு ஆழ்ந்த உறக்கம் வரவில்லை.

இரண்டாவது நாள், கெலன் கெல்லர் கதிரவன் தோன்றுவதனைக் கண்டார். அன்று நியூயார்க்கிலுள்ள அருங்காட்சியகத்தைக் கண்டு, இயற்கை வரலாற்றைத் தெரிந்து கொண்டார். அருங்காட்சியகம் அவருக்கு உலக மரபியல் வளர்ச்சியை அறிந்துகொள்ளப் பேருதவியாக அமைந்ததனை எண்ணி மகிழ்ந்தார். அடுத்துப் பெருநகரப் பொருட்காட்சிச் சாலைக்குச் சென்றார். அங்கு இடம்பெற்றிருந்த புகழ்பெற்ற கலைஞர்கள், லியனார் டோ டாவின்சி முதலானோர் ஓவியங்களையும் கலைப்பொருள்களையும் கண்டுமகிழ்ந்தார். பிறகு, கெலன், செகப்பிரியருடைய நாடகமொன்றனைப் பார்த்தார். அந்நாடகம் அவரைப் பெரிதும் கவர்ந்தது. நடிகர்கள் வசனம் பேசிய முறை, உச்சரிப்பு, முகவெளிப்பாடு ஆகியவை அவர் மனத்தைவிட்டு அகலவில்லை. அன்றிரவு அவர் அமைதியாக உறங்கினார்.

மூன்றாவது நாள், நகரின் கிழக்குப் பக்கத்திலுள்ள ஆற்றுப்பாலத்தை உற்று நோக்கினார். ஆற்றில் படகுகளையும் அதில் செல்லும் மனிதர்களையும் கண்டார். பின்பு, நியூயார்க்கில் உள்ள வானளாவிய இரட்டைக் கோபுரக் கட்டடத்தைக் கண்டுகளித்தார். அவர், மக்களின் முகத்தில் வெளிப்படும் மகிழ்ச்சியையும் துன்பத்தையும் பார்த்துப்

புரிந்துகொண்டார். ஐந்தாவது நிழற்சாலையிலுள்ள கடைத்தெருக்களை எல்லாம் பார்த்தார். சிறிய சுற்றுலா மேற்கொண்டார்; பூஞ்சோலைகளையும் குடிசைகளையும் தொழிற்சாலைகளையும் கண்டார். இக்காட்சி அவருக்கு ஒருபுறம் மகிழ்ச்சியையும் மறுபுறம் துன்பத்தையும் அளித்தது. கெலன் சொன்னார்: "எனது கண்கள் துக்கத்தையும் மகிழ்ச்சியையும் முதன்முதலாகக் கண்டன." அன்றைய முடிவில் ஒரு நகைச்சுவை நாடகத்தைக் கண்டார். ஏனெனில், கண் பார்வை மறைவதற்கு முன்பு, மகிழ்ச்சியான ஒன்றனை மட்டுமே கண்கள் காண வேண்டுமென விரும்பினார். 'நம் உணர்வுகளுக்கு நாம் மதிப்பளித்தல் வேண்டும். கடவுள் நமக்குக் கொடுத்த மிகப்பெரிய அன்பளிப்பு, பார்வை. அதனை இன்னும் சற்றுநேரத்தில் இழக்கப் போகிறோம்' என்ற உணர்வோடு கற்பனை செய்து பார்த்தால், அதன் அருமையை நம்மால் உணரமுடியும். மூன்று நாளிலும் தாம் உணர்ந்தவற்றை நமக்குப் பாடமாக உணர்த்தினார். "மூன்றுநாள் பார்வை கிடைத்ததற்கே முழுப் பயனையும் என் கண்கள் கண்டன. அப்படியானால், வாழ்நாள் முழுவதும் பார்வையுள்ளவர்கள் எவ்வளவு சாதனைகள் செய்யமுடியும் என்பதனை எண்ணிப் பாருங்கள்" என்பதனை உணர்த்தினார்.

1880 சூன் 27இல் அமெரிக்காவிலுள்ள அலபாமா மாகாணத்தில் துஸ்கும்பியாவில் பிறந்து, சாதனையாளராகத் திகழ்ந்த கெலன், 1968ஆம் ஆண்டு சூன் முதல்நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது உடல் வாஷிங்டனில் அன்னி, பாலி ஆகியோரது உடல்களுக்கு அருகே நல்லடக்கம் செய்யப்பட்டது.

சிறு துன்பமோ தடையோ இழப்போ ஏற்பட்டாலே மனமுடைந்து மூலையில் முடங்கிப் போகும் நமக்குக் கெலன் கெல்லரின் வாழ்க்கை வரலாறு தன்னம்பிக்கையைத் தரும் என்பதில் ஐயமில்லை. உடல்நலத்தோடு இருப்பவர்களே செய்யவியலாத அரிய சாதனைகளைப் புலன்களை இழந்த கெலன் செய்தார். அதனால் அவர், உலகின் எட்டாவது அதிசயம் எனப் பாராட்டப் பெறுகிறார்.

> பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
> ஆள்வினை இன்மை பழி. – குறள், 618



பிரெய்லி

பார்வையற்றோருக்கான எழுத்துமுறையை உருவாக்கியவர்.



பார்வையற்றோருக்கான எழுத்துமுறை

## மாதிரி வினாக்கள்

### நெடுவினாக்கள்

1. கெலன் கெல்லர் எவ்வாறு கல்வி கற்றார்?
2. கெலன் கெல்லர், தம் கனவில் கண்ட முதல் நாள் காட்சிகள் யாவை?

# யாப்பு : செய்யுள் உறுப்புகள் (எழுத்து, அசை, சீர்)

## செய்யுள் உறுப்புகள்

யாப்பு – யாக்கப்படுவது – கட்டப்படுவது. யாப்பு என்பது செய்யுள்.

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறும் செய்யுளின் உறுப்புகளாகும்.

### 1. எழுத்து

செய்யுளில் குறில், நெடில், மெய், ஆய்தம் என்னும் எழுத்துகள் முதன்மையாகக் கருதப்படும். குறிலில், உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் அடங்கும். நெடிலில் உயிர்நெடிலும், உயிர்மெய் நெடிலும் அடங்கும். மெய் 'ஒற்று' எனவும் சொல்லப்படும், செய்யுளில் ஆய்தம் மெய்யாகக் கருதப்படும்.

நாணல் – இச்சொல்லில், நா – நெடில், ண – குறில், ல் – ஒற்றெழுத்து.

### 2. அசை

எழுத்தானது தனியாகவோ பல சேர்ந்தோ ஓசையுடன் அசைந்து (பிரிந்து) நிற்பது அசை எனப்படும். இது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

நேரசை : குறில் தனித்தும் குறில் ஒற்றடுத்தும், நெடில் தனித்தும் நெடில் ஒற்றடுத்தும் வருவது நேரசை எனப்படும்.

| | | |
|---|---|---|
| (எ.கா.) | குறில் தனித்து வரல் | – க |
| | குறில் ஒற்றுடன் வரல் | – கல் |
| | நெடில் தனித்து வரல் | – கா |
| | நெடில் ஒற்றுடன் வரல் | – கால் |

நிரையசை: குறில் இணைந்தும் குறில் இணைந்து ஒற்றும்; குறில் நெடில் இணைந்தும் குறில் நெடில் இணைந்து ஒற்றும் வருவது நிரையசை.

| | | |
|---|---|---|
| (எ.கா.) | குறில் இணைந்து வரல் | – பட |
| | குறில் இணைந்து ஒற்றுடன் வரல் | – படம் |
| | குறில் நெடில் இணைந்து வரல் | – படா |
| | குறில்நெடில் இணைந்து ஒற்றுடன் வரல் | – படாம் |

### 3. சீர்

அசைகள் தனித்தும் இணைந்தும் கூடி, அடிக்கு உறுப்பாக அமைவது சீர் எனப்படும் அஃது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நால்வகைப்படும்.

ஓரசைச்சீர் : வெண்பாவின் ஈற்றில் நேரசை, நிரையசையுள் ஏதேனும் ஒன்று தனித்து நின்று சீராய் அமையும். அவற்றை ஓரசைச்சீர் என்பர். அவை நாள் ( நேர் ), மலர் ( நிரை ), காசு ( நேர்பு ), பிறப்பு ( நிரைபு ) என நால்வகை வாய்பாடுகளுள் ஒன்றனைப் பெறும்.

(எ.கா.) 1. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

என் – நேர் (நாள்)

2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

படும் – நிரை (மலர்)

3. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

நாடு – நேர்பு (காசு)

4. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

உலகு – நிரைபு (பிறப்பு)

ஈரசைச்சீர் : நான்கு

ஈரசை சேர்ந்து ஒரு சீர் ஆவது ஈரசைச்சீர். நேரில் முடிவது இரண்டும், நிரையில் முடிவது இரண்டுமாக ஈரசைச்சீர் நான்கு ஆகும்.

| சீர் | | வாய்பாடு | |
|---|---|---|---|
| நேர் நேர் | = | தேமா | மாச்சீர் – 2 ( தேமா, புளிமா என |
| நிரை நேர் | = | புளிமா | மாவில் முடிவதனால் மாச்சீர். ) |
| நிரை நிரை | = | கருவிளம் | விளச்சீர் – 2 ( கருவிளம், |
| நேர் நிரை | = | கூவிளம் | கூவிளம் என விளத்தில் |
| | | | முடிவதனால் விளச்சீர் ) |

( ஈரசைச்சீர் நான்கும் ஆசிரியப்பாவுக்கு உரியவை. )

இவை இயற்சீர் எனவும், ஆசிரிய உரிச்சீர் எனவும் வழங்கப்படும்.

மூவசைச்சீர் : எட்டு

மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீர் ஆவது மூவசைச்சீர். நேரசையில் முடிவது நான்கும் நிரை அசையில் முடிவது நான்குமாக மூவசைச் சீர் எட்டு ஆகும்.

தமிழ்

காய்ச்சீர்கள் – நான்கு

நேர் நேர் நேர் – தேமாங்காய்
நிரை நேர் நேர் – புளிமாங்காய்
நிரை நிரை நேர் – கருவிளங்காய்
நேர் நிரை நேர் – கூவிளங்காய்

காய்ச்சீர்கள் – நான்கு

இவை வெண்பாவுக்கு உரியதனால், வெண்பா உரிச்சீர் எனவும் கூறுவர்.

கனிச்சீர்கள் – நான்கு

நேர் நேர் நிரை – தேமாங்கனி
நிரை நேர் நிரை – புளிமாங்கனி
நிரை நிரை நிரை – கருவிளங்கனி
நேர் நிரை நிரை – கூவிளங்கனி

கனிச்சீர்கள் – நான்கு

இவை வஞ்சிப்பாவுக்கு உரியதனால், வஞ்சியுரிச்சீர் எனவும் கூறுவர்.

நாலசைச்சீர் : பதினாறு

மூவசைச்சீர் எட்டுடன் நேரசை, நிரையசைகளைத் தனித்தனியாகச் சேர்த்தால் நாலசைச்சீர் பதினாறு கிடைக்கும். இதனைப் பொதுச்சீர் எனக் கூறுவர்.

பயிற்சி

1. பின்வரும் பெயர்களை அசை பிரித்துக் காட்டுக.

அ) தில்லை ஆ) வளவன் இ) இளங்கோ ஈ) தொல்காப்பியர்

2. விடுபட்ட இடங்களை நிரப்புக.

| 1. அன்/ புநாண் | ஒப்/புர/வு | கண்/ணோட்/டம் |
|---|---|---|
| நேர் ______ | நேர்______நேர் | நேர் நேர் நேர் |
| கூவிளம் | ______ | ______ |

| 2. ஆற்/றுவார் | ஆற்/றல் | பணி/தல் |
|---|---|---|
| நேர் நிரை | ______ | நிரை நேர் |
| ______ | தேமா | ______ |

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. மெய்யும் ஆய்தமும் யாப்பில் ______ எனக் குறிக்கப்படும்.

அ) சுட்டெழுத்து ஆ) வினா எழுத்து இ) ஒற்றெழுத்து

2. காய்ச்சீர் ________ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு

3. ஆசிரியப்பாவுக்கு உரிய சீர்கள் ________ ஆகும்.

அ) காய்ச்சீர் ஆ) மாச்சீர் இ) கனிச்சீர்

4. வெண்பாவில் 'உயர்வு' என்னும் ஈற்றுச்சீரில் வரும் ஓரசையின் வாய்பாடு ________.

அ) நாள் ஆ) மலர் இ) பிறப்பு

ஆ) குறுவினாக்கள்

1. யாப்புக்குரிய எழுத்துகள் எவையெனக் கணக்கிடப்படுகின்றன ?
2. அசை என்றால் என்ன ? அவை யாவை ?
3. ஈரசைச் சீர்களுக்குரிய வாய்பாடுகள் யாவை ?
4. காய்ச்சீர் வாய்பாடுகள் யாவை ?

அறிந்துகொள்வோம்.

வெண்பாவில் இயற்சீரும் வெண்சீரும் மட்டுமே வரும்.

இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும்.

வேற்றுத் தளைகள் வாரா.

ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்.

(எ.கா.) அலகிடல்: கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | கட/னென்/ப | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 2 | நல்/லவை | நேர் நிரை | கூவிளம் |
| 3 | எல்/லாம் | நேர் நேர் | தேமா |
| 4 | கட/னறிந்/து | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| 5 | சான்/றாண்/மை | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6 | மேற்/கொள் | நேர் நேர் | தேமா |
| 7 | பவர்க்/கு | நிரை நேர் | (நிரைபு) பிறப்பு |

இக்குறட்பாவில் ஈற்றுச்சீர் பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

பயிற்சி : கீழ்க்காணும் குறட்பாவுக்கு அலகிட்டு வாய்பாடு எழுதுக.

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

தமிழ்

தமிழ்

# அணி

## இல்பொருள் உவமையணி, வேற்றுப்பொருள் வைப்பணி

"அவள் நடந்து வந்தாள்."

"அவள் அன்னம்போல நடந்து வந்தாள்."

இவ்விரு தொடரைப் படித்துப் பாருங்கள். முதல் தொடர் இயல்பாக உள்ளது. அடுத்த தொடர் படிப்பதற்கு இனிமை தருகிறது.

பெண்ணொருத்தி, தன் இயல்பான அழகை ஆடை, அணிகலன்கள் அணிந்து, ஒப்பனைசெய்து கொள்வதுபோலப் புலவர், தம் கற்பனை ஆற்றலாலும் மொழிப்புலமையாலும் சொல்லிலும் பொருளிலும் அழகு சேர்த்துப் பாடல்கள் இயற்றுவர்.

இத்தகைய பாடல்களில் காணப்படும் அழகே அணி எனப்படும். இதனால், சொல்லப் புகும் கருத்து எளிதில் புரியும்; படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் இனிமை சேர்க்கும்.

அணிகள் சிலவற்றை இங்குக் காணலாம்.

### 1. இல்பொருள் உவமையணி

உலகில் இல்லாத பொருளை ஒன்றனுக்கு உவமையாக்கிக் கூறுவது இல்பொருள் உவமையணி எனப்படும்.

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. – குறள், 78

இக்குறட்பாவைப் படித்துப் பாருங்கள். உள்ளத்தில் அன்பில்லாத ஒருவர் குடும்ப வாழ்க்கை நடத்துவது என்பது, பாலை நிலத்தில், பட்டமரம் தளிர்விட்டு வளர்வது போன்றது. திருவள்ளுவர், இக்குறட்பாவில் அன்பில்லாதவன் வாழ்க்கை, பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்விட்டு வளர்வதற்கு ஒப்பானது என இல்லாத பொருளை உவமித்துக் கூறுகிறார்.

புலவன், உலகில் இயல்பாக இல்லாத பொருளை இவ்வாறு உவமையாக்கிக் கூறுவது இல்பொருள் உவமையணி ஆகும்.

### 2. வேற்றுப்பொருள் வைப்பணி

புலவர், தாம் கருதிய பொருளை நிலைநாட்ட, உலகம் அறிந்த வேறொரு பொருளைச் சான்றுகாட்டிக் கூறும்போது, பொதுப் பொருளால் சிறப்புப் பொருளையும், சிறப்புப் பொருளால் பொதுப் பொருளையும் விளக்குவதனை வேற்றுப்பொருள் வைப்பணி என்பர்.

உரைமுடிவு காணான் இளையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப – நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

இப்பாடலில், கரிகாலன் இளமையில் நரைமுடித்து வந்து, வழக்கில் நீதி வழங்கினான் என்பது சிறப்புச் செய்தி. வழிவழியாக நீதி தவிராமல் ஆட்சி புரிந்துவரும் சோழர் குலத்தில்

தோன்றியமையால், இயல்பாகவே கரிகாலனும் சிறந்த நீதி வழங்கினான் என்பது பொதுப் பொருள். எனவே, சிறப்புப் பொருளால் பொதுப் பொருள் விளக்கப்பட்டுள்ளதனால் இப்பாடலில் வேற்றுப்பொருள் வைப்பணி அமைந்துள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. உலகில் இல்லாத பொருளை உவமித்துக் கூறுவது ________.
2. கருதிய பொருளை நிலைநாட்ட சிறப்புப் பொருளைப் பொதுப்பொருளாலும் பொதுப்பொருளைச் சிறப்புப் பொருளாலும் கூறி விளக்குவது ________.

### ஆ) குறுவினாக்கள்

1. வேற்றுப்பொருள் வைப்பணியைச் சான்றுடன் விளக்குக.
2. இல்பொருள் உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

எழுதுதல் திறன் : படம் பார்த்துப் பாடல் எழுதுக.



________ ________

________ ________

________ ________

________ ________

________ ________

### குழுக் கலந்துரையாடல்

பாரதியார் – பாரதிதாசன் – கண்ணதாசன் கவிதைகளில் சமூக மாற்றம் குறித்துக் கலந்துரையாடுக.

தமிழ்

தமிழ்

## மொழித்திறன் பயிற்சி

### தொகைச்சொற்களை விரித்தெழுதுதல்.

(எ.கா.) ஐந்திணை என்னும் சொல் குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல் திணை, பாலைத்திணை ஆகியவற்றைக் குறிக்கும்.

1. முக்கனி – மாங்கனி, பலாக்கனி, வாழைக்கனி.
2. நாற்படை – தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை.
3. ஐந்திலக்கணம் – எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம்.
4. அறுசுவை – இனிப்புச்சுவை, கசப்புச்சுவை, புளிப்புச்சுவை, உவர்ப்புச்சுவை, கார்ப்புச்சுவை, துவர்ப்புச்சுவை.

### பயிற்சி : தொகைச்சொற்களை விரித்தெழுதுக.

இருதிணை ________ , ________.

முப்பால் ________ , ________, ________.

நாற்றிசை ________ , ________, ________ , ________.

ஐம்பால் ________ , ________, ________ , ________ , ________.

### எண்ணுப் பெயர்களைத் தமிழெண்களுடன் பொருத்துக.

| எண்ணுப் பெயர் | | தமிழெண் |
|---|---|---|
| எண்பத்திரண்டு | – | உரு |
| தொண்ணூற்றொன்பது | – | ௩O |
| இருபத்தைந்து | – | ௯௯ |
| பதினைந்து | – | அஉ |
| முப்பது | – | கரு |

### செயல்திட்டம்

1. இப்பாடப்பகுதியிலுள்ள பெயர்ச்சொற்களைத் தொகுக்க.
2. தொகுத்த பெயர்ச்சொற்களிலுள்ள தொழிற்பெயர்களை வட்டமிடுக.

### கட்டுரைப் பயிற்சி

மாற்றுத்திறனாளர் மறுவாழ்வு.

| கையெழுத்து இதழ் தயாரித்தல் ( மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பக் குழுக்களாகப் பிரித்துக் கையெழுத்து இதழ் உருவாக்கச் செய்தல் ) | | |
|---|---|---|
| விடுதலைத் திருநாள் சிறப்பிதழ் | | |
| அனைவருக்குமான விடுதலை! உலகத்தை உயர்த்தும் நன்றாய்! | | |
| சிறப்புச் செய்தி<br>விடுதலை நாள் | கவிதை<br>போரிடும் உலகத்தை வேரொடும் சாய்ப்போம். | நேர்காணல்<br>விடுதலைக்கு உழைத்தோர் |
| நாடகம்<br>விடுதலைப்போர் | துணுக்குகள்<br>விழிப்புணர்வு ஊட்டும் நகைச்சுவைத் துணுக்குகள் | கட்டுரை<br>விடுதலைத் திருநாள் போட்டியில் வெற்றிபெற்ற கட்டுரை |
| சிறுகதை (ஒருபக்க அளவு)<br>சிறுவர் கல்வி | உரையாடல்<br>காந்தி இன்று இருந்தால்... இருவர்/மூவர் உரையாடல் | |
| இத்திங்களுக்கான தமிழ் மன்ற நிகழ்ச்சிகள் | | |

## வாழ்க்கைத்திறன்

### பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்

தொடர்வண்டியில் பயணம் செய்யும்போது பார்வையற்றோர் பாட்டுப்பாடிச் செல்வதனைக் கேட்டிருப்பீர்கள். முன்னே செல்பவரைப் பின்பற்றி மற்றையோர் தொடர்வதனையும் கண்டிருப்பீர்கள். வழியறிந்த மாற்றுத்திறனாளி வழியறியா மற்றொரு மாற்றுத்திறனாளிக்கு உதவும்போது, பார்வையுள்ளோர் யாராவது அவர்களுக்கு உதவியதனைப் பார்த்திருக்கிறீர்களா? இயலாதோருக்கும் இல்லாதோருக்கும் மனிதநேயத்தோடு உதவுவோர் சிறந்த மனிதராவர்.

1. மாற்றுத்திறனாளிகளுக்கு எவ்வெவ் வகையில் உதவலாம்?
2. நீங்கள் பழகிய இடத்தில் கண்ணைக் கட்டிக்கொண்டு ஒரு பொருளை எடுக்க முயற்சி செய்க.
3. உங்கள் பட்டறிவை நண்பர்களுடன் கலந்துரையாடுக.

தமிழ்

## மதிப்புக்கல்வி

### உயிர் இரக்கம்

ஸ்டீன்மெட்ஸ் என்னும் புகழ்பெற்ற அறிவியல் அறிஞரின் வீட்டுக்கு, அவருடைய நண்பர் சென்றிருந்தார். அன்றைக்குக் கடுங்குளிர் நிலவியது. அறிவியல் அறிஞர், தம் உடலை நன்றாகக் கம்பளியால் போர்த்தியிருந்தார். எனினும், குளிர் தாங்காமல் நடுங்கிக்கொண்டே ஏதோ ஒரு சோதனையில் முழுமூச்சாய் ஈடுபட்டிருந்தார். அருகிலேயே கணப்புப்புரை (சூட்டடுப்பு) இருந்தும், அவர் அதனை எரிய விடவில்லை.

நண்பர் அவரிடம், “ஏன் கணப்பை எரியவிடாமல் இப்படிக் குளிரில் நடுங்குகிறீர்கள்?'' எனக் கேட்டார். அதற்கு, அந்த அறிவியல் அறிஞர் எழுந்து சென்று, அருகில் இருந்த கணப்பைச் சுட்டிக் காட்டினார். அங்குச் சுண்டெலியொன்று தன்னுடைய குட்டிகளுடன் இருந்தது.

“இந்தக் கடுமையான குளிரில் நாமே நடுங்கும்போது பாவம் இவை என்ன செய்யும்? அதனால்தான், அவற்றை விரட்ட எனக்கு மனம் வரவில்லை.” என்றார்.

இந்தச் சூழலில் நீயாக இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய்? நினைத்துப் பார்.

மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன்.
– வள்ளலார்

**மொழியாக்கம் செய்க.**

Mother Teresa, born in Yugoslavia became a nun at the age of 18. She came to India and started her career as a teacher. She established the “Home for dying and destitute” in Kolkata. “Service to the uncared is the service to God” is the principle of Mother Teresa. The highest honour of ‘Nobel Prize’ for peace was awarded for her selfless work.

**இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.**

1. In a fiddler’s house all are dancers.

   கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்.
2. No man can flay a stone.

   கல்லிலே நார் உரிக்க முடியுமா ?
3. Difficulties give way to diligence.

   கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.
4. Command your man and do it yourself.

   வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன்.
5. Charity is a double blessing.

   தருமம் தலை காக்கும்.

| வளரறி செயல்பாடுகள் | |
|---|---|
| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |

கீழுள்ள உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு வினாக்களுக்கு விடையளிக்க.

செய்யுள், உரைநடை, பேச்சு ஆகியன இயல்தமிழ் ஆகும். இசையோடு பாடுவதற்கென்றே எழுதப்பட்ட தமிழ்ப்பாடல்கள் இசைத்தமிழ் எனப்படும். இசையை இசைத்தமிழ் என்று மயங்குகின்றனர் சிலர்.

இசை வேறு; இசைத்தமிழ் வேறு.

இசைக் கலைஞர்கள் குழல், யாழ் போன்ற கருவிகளில் வாசிப்பது இசை. ஓதுவார் பாடும் தேவாரப்பாடல் இசைத்தமிழ். நாட்டியம் ஆடும்போது பாடுவதற்கென்றே இயற்றப்பட்ட பாடல்களே நாடகத்தமிழ் எனப்படும்.

நாடகம் என்பது இக்காலத்து நாடகம், திரைப்படங்களில் பேசப்படும் உரையாடல் என்று சிலர் கருதுகின்றார்கள். நாடகத்தமிழ்ப் பாடல்கள் நாட்டியத்துக்குரிய மெய்ப்பாடுகளுக்கு இடம்தரும் வகையில் அமைந்திருக்கும்.

வினாக்கள்

1. தமிழின் முப்பிரிவுகள் யாவை?
2. இயல்தமிழ் என எதனைக் கூறுகிறோம்?
3. இசை என்பது எது?
4. நாடகத்தமிழ் எத்தன்மையது?
5. தேவாரப்பாடல்கள் எவ்வகைத் தமிழைச் சாரும்?

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

உரையாடலை முழுமையாக எழுதி வகுப்பில் பேசுக.

இறைவனுக்கும் நக்கீரனுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல்

இடம்: புலவர்கள் நிறைந்த பாண்டியன் அவை

இறைவன்: என் பாடலில் குற்றம் கூறியவர் யார்?

நக்கீரன்: ஏன், நான்தான்!

இறைவன்: என் பாடலில் என்ன குற்றம் கண்டீர்? சொல்லிலா, பொருளிலா?

நக்கீரன்: ______________________________

இறைவன்: ______________________________

தமிழ்

தமிழ்

| படித்தல் திறன் – வாய்விட்டுப் படித்தல் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் பொருளுணர்ந்து படிக்க.

இளமை நலம் போற்றுதல் என்பது பொதுவாக மாந்தர்க்கு இயல்பான குணம். சிலருக்கு வயதைக் கேட்டாலே சினம் பிறக்கும். உடலில் தலையில் வயதாகிவிட்டதற்கு உரிய அடையாளங்கள் தென்பட்டாலும் வயதாகிவிட்டது என்று யாராவது கூறினாலும் அவர்களுக்குப் பொல்லாத கோபம் வருகிறது. இதனால், என்ன புரிகிறது! இளமையைப் போற்ற அனைவரும் விரும்புகின்றனர் என்பதே! ஆனால், இளமை என்பது உடலில் மட்டும் இருந்தால் போதாது. சிலர் ஆண்டில் இளையோராக இருக்கின்றனர். ஆனால், உணர்விலும் ஊக்கத்திலும் படுகிழமாகிச் செயலற்று ஏங்கித்திரிகின்றனர். இஃதெப்படி இளமையாகும்?

உடலில் இளமை; உணர்வில் இளமை; ஊக்கத்தில் இளமை காட்டவேண்டும். இளமையைப் போற்றுதல் வாழ்க்கைக்குச் சிறப்பைத் தரும். அதனாலன்றோ, இளமையையும் அழகையும் போற்றும்வகையில் நம் ஆன்றோர்கள் உடற்பயிற்சி முறைகளைக் கண்டார்கள். உடலுக்குப் போதிய பயிற்சி கொடுத்து எஃகுபோல் ஆக்கி இளமை நலம் பேணுக! துன்பங்களை வாழ்க்கையைக் கடக்கும் படிகளாக நினைத்து, எய்த்துக்களைத்துப் போகாமல், வெற்றியில் நம்பிக்கை வைத்து, உணர்வில் இளமை காத்து, வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்க! இன்றைய தோல்வி நாளைய வெற்றிக்கு அடிக்கல் என்னும் நம்பிக்கையுடன், இளமை நலமிக்க ஊக்கத்துடன் வாழ்க்கைப் பயணத்தை அமைத்துக்கொள்க.

– குன்றக்குடி அடிகளார், ஆலயங்கள் சமுதாய மையங்கள்

| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களை அகரவரிசையில் எழுதுக.

நிகழ்த்துக்கலை, மீமிசை, வையம், முந்நீர், மனத்துயர், நோக்கம், வீடுபேறு, நற்செயல், மேடுபள்ளம், வாழ்க்கை, நூற்பயன், மொழிபெயர்ப்பு, வேப்பிலை, நெற்றிக்கண், வெகுளாமை

ந – ______ , ______ , ______ , ______ , ______ .

ம – ______ , ______ , ______ , ______ , ______ .

வ – ______ , ______ , ______ , ______ , ______ .

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

தமிழ்நாட்டு வாணிக வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்தது. பழங்காலந்தொட்டே தமிழர் உள்நாட்டு, அயல்நாட்டு வாணிகத்தில் சிறப்புற்றிருந்தனர். உள்நாட்டு வாணிகத்தைவிட அயல்நாட்டு வாணிகத்திலேயே வருவாய் மிகுதி. அயல்நாட்டு வாணிகத்திலும் தரைவழியாகச் செய்யும் வாணிகத்தைவிட, நீர் வழியாகச் செய்யும் வாணிகம் பெரும் பொருளைத் தரும். எனவே, அந்நாளில் கடல் வாணிகம் மிகவும் சிறந்திருந்தது.

| குறுக்கெழுத்துச்சொல் விளையாட்டு | செயல்பாடு – 6 |
|---|---|

விடைக் குறிப்புகளைக்கொண்டு, கட்டங்களை நிரப்புக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 4 | 6 |
| | 2 | | | | | | |
| 5 | | 3 | | | | | |
| | 7 | | 8 | | 9 | | |
| | | | | | | | |
| | | | | | | | |

இடமிருந்து வலம்

1. ‘திரைகடலோடியும் திரவியம் தேடு’ எனக் கூறிய தமிழ் மூதாட்டி ________ .
2. பழந்தமிழரின் கடற்பயணத்தைத் தொல்காப்பியம் ________ வழக்கம் எனக் குறிப்பிடுகின்றது.
3. சேர மன்னர்க்குரிய துறைமுகம் ________ .

மேலிருந்து கீழ்

4. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ எனக் கூறியவர் கணியன் ________ .
5. கடலில் செல்லும் பெரிய கலம் ________ எனப்பட்டது.
6. வெனிசு நாட்டைச் சேர்ந்த பயணி ________ .
7. பாண்டிய நாட்டின் வளம் பெருக்கிய துறைமுகம் ________ .
8. சீனத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுள் ஒன்று ________ .
9. பெளவம் என்பதும் ________ என்பதும் ஒரு பொருள் தரும் சொற்கள்.

தமிழ்

| அலகிடுதல் | செயல்பாடு – 7 |
|---|---|

தமிழ்த்திங்களின் பெயர்களை எழுதி அலகிட்டு வாய்பாடு எழுதுக.

| வ.எண் | தமிழ்த் திங்களின் பெயர்கள் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| க | சித்திரை | நேர் நிரை | கூவிளம் |
| உ | | | |
| ௩ | | | |
| ச | | | |
| ரு | | | |
| சா | | | |
| எ | | | |
| அ | | | |
| சூ | | | |
| கO | | | |
| கக | | | |
| கஉ | | | |

| வழுஉச் சொற்களைத் திருத்துதல் | செயல்பாடு – 8 |
|---|---|

சொற்குவியலில் உள்ள திருந்திய சொற்களைப் பயன்படுத்தி உவமைத் தொடர்களில் உள்ள வழுஉச் சொற்களைத் திருத்துக.

( போர்த்திய, விழிக்கிறது, காற்றில், எண்ணெய், வெயில், பெய்த )

| | | |
|---|---|---|
| 1. | ஆடிக் காத்தில் உதிரும் சருகுபோல | |
| 2. | ஆந்தை முழிக்கிறதுபோல | |
| 3. | உரிய காலத்தில் பெஞ்ச மழைபோல | |
| 4. | எள்ளுக்குள் எண்ணைபோல | |
| 5. | பசுத்தோல் போத்திய புலிபோல | |
| 6. | வெய்யிலில் பட்ட புழுப்போல | |

| இடைச்சொல் அறிதல் | செயல்பாடு – 9 |
|---|---|

தொடரில் உள்ள வண்ண எழுத்துச் சொற்களுடன் ‘ஆவது’ என்னும் இடைச்சொல்லைச் சேர்த்துப் புதிய தொடரை உருவாக்குக.

| | | |
|---|---|---|
| 1 | திருக்குறளைப் படி. | திருக்குறளையாவது படி. |
| 2 | உயிரைக் கொடுத்து நாட்டைக் காப்போம். | |
| 3 | நீ அல்லது உன் தம்பி போட்டியில் கலந்து கொள்ளுதல் வேண்டும். | |
| 4 | தமிழன்பன் சொல்வது ‘மொழி நமது கண்கள்’. | |
| 5 | பாரதியின் தொழில் நாட்டுக்கு உழைத்தல். | |
| 6 | யாழினிக்குப் பேச்சுப்போட்டியில் இரண்டாம் இடம் கிடைத்தது. | |

| சொல்லுருவாக்கம் | செயல்பாடு – 10 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களிலிருந்து பல சொற்களை உருவாக்குக.

முத்துக்குளித்தல் – முத்து, குளி, குளித்தல், முதல், துளி, குத்து, தத்து, குத்தல், முதுகு, தளி, முக்கு

பல்கலைக்கழகம் –

கலங்கரைவிளக்கம் –

குதிரையேற்றம் –

கவியரங்கம் –

| விடுகதைக்கான விடை காணல் | செயல்பாடு – 11 |
|---|---|

விடுகதைகளுக்கான விடையை எழுதுக.

1. வானத்துக்கும் பூமிக்கும் ஆயிரம் கம்பிகள். அஃது என்ன ? ____________
2. உயிரில்லாத நீதிபதி ஒழுங்காய் நீதி கூறுகிறார். அவர் யார் ? ____________
3. செடியில் விளையாத பஞ்சு; தறியில் நூற்காத நூல்; கையில் தொடாத துணி. அஃது என்ன ? ____________
4. இரவும் பகலும் ஓய்வில்லை; அவன் படுத்தால் எழுப்ப ஆளில்லை. அவன் யார் ? ____________
5. உருவம் இல்லாத மனிதன் உலகமெல்லாம் சுற்றுகிறான். அவன் யார் ? ____________

| நிகழ்ச்சிநிரல் எழுதுதல் | செயல்பாடு – 12 |
|---|---|

உன் பள்ளியில் நடைபெறவுள்ள விடுதலைத்திருநாள் நிகழ்ச்சிக்கான நிகழ்ச்சிநிரல் எழுதுக.

### விடுதலைத் திருநாள் விழா

இடம் : ______________________

நாள் : ______________________

காலம் : ______________________

### நிகழ்ச்சிநிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து : ______________________

கொடியேற்றம் : ______________________

கொடிப்பாடல் : ______________________

வரவேற்புரை : ______________________

தலைமையுரை : ______________________

சிறப்புரை : ______________________

கலை நிகழ்ச்சிகள் : ______________________

பரிசு வழங்கல் : ______________________

நன்றியுரை : ______________________

நாட்டுப்பண் : ______________________

| வாழ்க்கைத்திறன் | செயல்பாடு – 13 |
|---|---|

### என்னால் முடியாதது யாரால் முடியும்?





வாழ்வில் வெற்றிபெறத் துடிப்பவர் தோல்வியைப் பொருட்படுத்தமாட்டார்.

உன்னால் முடியாது என எவரும் இவரிடம் கூறிவிடமுடியாது.

என்னால் மற்றவர்களைப்போல் செயல்படமுடியும் என மெய்ப்பித்துக்காட்டினார், இருப்பத்தேழு வயதேயான ஜெசிக்கா காக்ஸ். இவர் செய்த அருஞ்செயல் என்ன?

பிறவியிலேயே இரு கையும் இல்லாத இவர், தன்னிரு காலால் வானூர்தியை ஓட்டிய முதல் பெண்மணி என்னும் பெருமைக்குரியவர்.

தன்னம்பிக்கை, விடாமுயற்சி, துணிச்சல் ஆகியன இவரைச் சிறப்பாகச் செயலாற்றத் தூண்டின. ஆம், மனமிருந்தால் வழியுண்டு. இவரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் கருத்துகளைக் குழுவில் கலந்துரையாடுக.

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

**1. அடிக்கோடிட்ட சொல்லுக்கு ஏற்புடைய பொருளை எழுதுக.** 4 × 1 = 4

அ. உள்நாட்டு வாணிகத்தைவிட அயல்நாட்டு வாணிகத்திலேயே <u>வருவாய்</u> மிகுதி.

1. செலவு 2. ஏற்றுமதி 3. இறக்குமதி 4. வரவு

ஆ. திரைகடலோடியும் <u>திரவியம்</u> தேடு.

1. செல்வம் 2. வாசனைப்பொருள் 3. கப்பல் 4. வாணிகம்

இ. யாதும் ஊரே யாவரும் <u>கேளிர்</u> என்பது கணியன் பூங்குன்றனாரின் வாக்கு.

1. நண்பர் 2. உறவினர் 3. கேள் 4. பகைவர்

ஈ. பழந்தமிழரின் கடமைகளுள் ஒன்று <u>பொருளீட்டுதல்</u>.

1. பொருள் பெறுதல் 3. பொருள் பெருக்குதல்
2. பொருள் கொடுத்தல் 4. பொருள் அழித்தல்

**3. ஓரிரு வரிகளில் விடையளிக்க.** 6 × 1 = 6

அ. பொருள்வயிற் பிரிவு எத்தனை வகைப்படும். அவை யாவை?

ஆ. கடலைக் குறிக்கும் பல்வேறு சொற்களுள் ஐந்தனை எழுதுக.

இ. பாண்டிய நாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டு அறிஞர் யார்?

ஈ. சீனத்திலிருந்து தமிழகத்துக்கு இறக்குமதியான பொருள்கள் யாவை?

உ. சோழ நாட்டின் துறைமுகம் எது?

ஊ. பாண்டிய நாட்டின் வளம்பெருக்கிய துறைமுகம் எது?

தமிழ்

## “என்னால் முடியும், நானே செய்தேன்”

## ( ‘I can, I did’ )

### மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ.எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல்பாடு | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# ENGLISH

## STANDARD NINE

### TERM I

ENGLISH

## NOTE TO THE TEACHER

The English textbook for Standard IX has been prepared following the guidelines given by National Curriculum Framework, 2005. The three units of the book aim at acquainting the learners with different genres of literature such as story, autobiography, science fiction and humour. The different types of poems are selected to inspire the learners to explore the language and cherish the joy of learning.

The grammar and language activities are chosen to help the learners to communicate with confidence and accuracy. An attempt has been made to enrich vocabulary through a variety of activities on synonyms, antonyms, matching words to meanings, word building (prefixes, suffixes, phrasal verbs),British/American English, idioms, phrases and abbreviations. Attention has been drawn to grammar in context. A close reading of the prose texts will facilitate the understanding of prepositions of time and space, sentence patterns, the use of tenses and modals.

The learner friendly language study under the prose lesson of each unit focuses on the integration of four skills namely Listening, Speaking, Reading and Writing. Activity packed language tasks include role play, pair and group work, writing articles, making posters and translating words used in everyday life.

The task 'Warm-up' given at the beginning of each unit is designed to facilitate the learner to develop the skill of guessing and predicting what is coming next. The learner should be encouraged to actively participate in this task.

### UNIT-I

The learners are on the threshold of adolescence. An attempt has been made in this unit to motivate the learners to set goals, develop certain qualities and positively condition the mind to achieve the same. The learners may be encouraged to read the biographies of great achievers and listen to the inspirational speeches and motivational talks of living legends. The poem and the story in the supplementary reader are thematically related. The story portrays a vivid contrast, one man has decided to march ahead in life despite his handicap and ultimately becomes a successful insurance agent where as the other has become an embittered beggar, pitying himself because of his handicap. Each has made his choice that shaped his destiny.

## UNIT - II

Our future and well-being is closely linked with the well-being of the Planet Earth. Eco-degradation and its impact on all facets of life is heading towards alarming levels. The planet earth is a vibrant living entity. To add a personal and emotional touch, the prose piece is written in the form of an autobiography of Mother Earth. The learners should be made aware of the carbon footprints they leave every time they buy or consume some product. The poem by Khalil Gibran is chosen to highlight the great benevolence that the Earth showers on human beings. Learners should be taught to appreciate the marvels and the magic of Mother Earth. The supplementary lesson is about a tribal community. Those tribes had gone to the extent of sacrificing their lives to save trees, much before the modern world realised the importance of trees in the Ecosystem.

## UNIT - III

This unit focuses on the empowerment of women. 'The Will to Win' highlights how Anita, a humble village girl, not only empowered herself by procuring honey through bee-keeping but also helped the women in her village to raise their standard of living. The poem deals with 'never give in' attitude in life and the need to face the challenges with courage and determination. The supplementary lesson enlightens the grit and determination of Sunita Willams who became a successful astronaut.



Unit 1
Prose

# Buds to Blossoms

**'A flower is the promise of a fruit'**





**Warm-up**

Everyone is created to be somebody in this world. Those who realise this, accomplish their mission and touch the lives of their fellow beings. They bring about a wholesome transformation not only in their own lives but also in society. It is indeed a fulfilling experience to witness this change. You may have noticed a bud blooming into a blossom. A bud is small and delicate. It needs to be nourished and nurtured. When it blossoms, it creates joy and spreads its fragrance. You, the gifted buds of today, will soon blossom and fill this world with the fragrance of your love, kindness and happiness. Do you have the burning desire to achieve something big? What can possibly stand in the way of such a passion? Success is just a few steps ahead and is there very much for the taking.

ENGLISH

Long ago, there lived in a forest a pride of lions with several cubs. One of the cubs was always curious to know about things. One day he saw a butterfly and started chasing it. The little cub ran and ran but was unable to catch the butterfly. By then he had become too tired to run. He also realised that he had lost his way. Before he knew anything, he had fallen asleep.



When the lion cub woke up, he found himself in a strange company. He was surrounded by a flock of sheep and then there were several lambs too for him to play with. He seemed to like the new company and was soon accepted by the sheep.

**Glossary**

**shudder:** shiver

**crouch:** lower the body with the limbs close to the chest

As days went by, the lion cub grew bigger. But as he grew in the midst of sheep, he developed all the qualities of the sheep. His roar too was like a bleat. He was ignorant of the fact that he could roar so mightily that would make all sheep **shudder**. He **crouched** with other sheep, seeking cover when a wild animal chased the flock or passed by. He looked far from being the king of the jungle. He didn't even realise that he was a lion.

1. How did the lion cub join the sheep?
2. Why did the old lion take the young one to the pool?
3. How did the young lion react on seeing his image in the water?

One day an old lion happened to pass by the place, where this young lion stayed. As was natural, the old lion roared seeing another lion. But he did not respond with a roar. The old lion was astonished. He roared again and again but there was no response from the young one. The old lion looked around and when he saw the sheep, he soon understood the reason for the cub's strange behaviour.

The old lion wanted the young one to realise his true nature. So he took him to a



nearby pool and made him look at his own reflection in the water. A **conditioned** mind finds it difficult to believe its original nature, even when it meets the reality eye to eye. The little lion too was not different. As he saw his image in the water he asked the old lion, "Is it me?" "Yes" replied the old lion and said, "It is none other than you." The old lion continued and said, "Now roar like me. You'll be a true lion." So saying the old lion roared and roared again. Gradually the young lion repeated the roar and after several attempts he gave such a **ferocious** roar that his sheep friends panicked and ran away. When he roared like a true lion, his lion instincts returned to him. He leaped about in joy upon realising his true nature. The young lion, accompanied by the older one, walked away majestically like the king of the jungle.

Aren't some of you too like this young lion cub? It is quite reasonable to suppose that young as you are, you may be unaware of your real talent and potential. Like this young cub, some of you may have set your own limitations by a faulty conditioning of mind with convictions such as:

- ➡ I am good-for-nothing.
- ➡ I am not cut out for this.
- ➡ This is impossible for me.
- ➡ Luck doesn't favour me.

Isn't it time to break free from these self - imposed limitations? In fact, you are pretty little buds on the verge of blossoming into flowers. Remember, that hidden in a seed is the infinite potential of a mighty tree.



Arjun Bajpai

Spread your wings to discover new horizons in the promising journey of your life. While doing so, do not get disheartened by the **Impediments** and challenges you may come across. They are there for a purpose. They transform you from ordinary to extraordinary beings. It is the rough sea that makes a skilled sailor. A ship may be safe in the harbour but that is not what a ship is built for. If charcoal had thought that it was ugly and good-for-nothing, it would not have turned into a sparkling diamond. Similarly, if a person like Helen Keller had thought that it was impossible for her to read and write, she could not have championed the cause of the visually challenged. Had Arjun Bajpai thought that he was too young to trek, he would not have been successful in scaling Mount Everest at the tender age of sixteen. These examples **irrefutably** prove that anyone can aim high and achieve success against all odds.

**Glossary**

**conditioned** : habituated
**ferocious** : fierce, wild
**impediments** : obstacles
**irrefutably** : convincingly

1. What did Helen Keller and Arjun Bajpai accomplish ?
2. How should you face the impediments ?

ENGLISH

ENGLISH

Each one of you has an indispensable role to play in this world. Without you, this world will be short of one person and his/her contribution. Having set your goal high, visualise marching towards it each day of your life. Develop a passion for your goal. Have faith in yourself like the little girl in the following story.

Once, a village was **afflicted** by drought. The king summoned his subjects for a mass prayer to invoke the blessings of the Rain God. People assembled in large numbers with flowers, incense sticks and lamps. None but one little girl brought an umbrella with her. "Why did you bring this?" an old man asked. The little one said, "When we unite in prayer, it is going to rain like as never before. I have brought this umbrella to go back home without getting wet!" No wonder, there was a **torrential downpour** that day .This is a simple story that reveals the power of strong faith. Commence work with faith, then proceed with hard work and optimism.



A man was once told of a pot filled with gold at the foot of a mountain. He collected his tools, went to the place indicated and began digging for gold. He kept digging at it for a week. But then, a little suspicion started nagging him. He wondered whether he would really find gold or he was on a fool's errand. On the eighth day he gave up digging. The very next day a stranger passing that way stopped and enquired why a big pit was there. He was told that somebody had been digging there for gold. The stranger thought to himself, "Why not give it a try? Already the work is half done." He dug with great faith and after a couple of days, he found gold. The first man who had tried earlier said with great regret, "Had I but dug for two more days, I would have secured that pot of gold." Many of us give up just before reaching the goal. Thomas Edison says, "Many of life's failures are experienced by people who did not realise how close they were to success when they gave up." Remember, '**perseverance** pays'. All your hard work and positive energy will create a **ripple** of change across the world.

A farmer used to fetch water home in two buckets. One bucket had a small hole in it. Therefore everyday, the farmer reached home with one bucket full and the other half full. The bucket with a hole was pained at being unable to fulfil its purpose as efficiently as the other.

1. Why are you indispensable to the world?
2. Why did the girl bring an umbrella?
3. What made the man get suspicious?
4. Why was the bucket with a hole unhappy?

**Glossary**

**afflicted** : troubled
**torrential downpour** : heavy rain
**perseverance** : continuing with determination
**ripple** : wave

But the other bucket said, "Look at the path through which you have travelled home every day. You have transformed a gravelled road into a beautiful trail of green grass and colourful flowers." This story demonstrates the importance of seeing the things and people around you in a positive way.

Everyone wakes up with 24 hours a day at his/her disposal. How wisely the person spends time everyday determines the success that he/she will achieve in life. Time is precious. Thinking of the past or worrying about the future will not let you focus hundred percent on your present .The present moment is a blessing that has been bestowed upon you and you must make the most of it. Do not put off till tomorrow what you can do today. Each moment is special like you.

**Endowed** as you are with a unique personality, no one else is capable of being you. Isn't it wonderful to know that nowhere in the world can you find anyone else who looks the same as you? Take pride in the uniqueness of your nature as well. Is there anything under the sun that you cannot achieve, with your individual talent, integrity of thought, word and action, and humility?

Be grateful for your uniqueness and the qualities of head and heart. When you are thankful for all that you receive and count your blessings, you will receive much more blessings.

**Glossary**
- **endowed** : blessed
- **attributes** : qualities
- **charisma** : power to inspire
- **dormant** : hidden

The great **attributes** of achievers such as A.P.J. Abdul Kalam, Mother Teresa, and A.R. Rahman are all part of you. In you lies hidden, the talent of a Saina Nehwal or Vishwanathan Anand. The **charisma** of Bill Gates may lie **dormant** in you. Understand your true nature, nourish and nurture the good in you. You do the greatest of favours to yourself, by being instrumental in making this world a better place. It's time to get to work, make your mark and leave behind your footprints on the sands of time. Dream big and pursue those dreams fearlessly. The day it pays off will be worth a million lives.



**Answer each of the following in a paragraph not exceeding 100 words.**

1. What message do you get from the story of the young lion?
2. Are you conditioned by your circumstances? Justify your response.
3. List out the steps that you should follow to reach your goal.

1. How are you unique?
2. The present moment is a gift - explain.
3. What can you contribute to make this world a better place to live in?

ENGLISH

## Vocabulary

**I. Choose the most appropriate synonyms of the italicised words from the four alternatives given with each sentence.**

1. Do not get ***disheartened*** by the challenges along the way.
a. dissatisfied b. excited c. discouraged d. upset
2. Some of you may have set your own ***convictions.***
a. beliefs b. ideas c. priorities d. objectives
3. The king ***summoned*** his subjects for mass prayer.
a. dictated b. ordered c. gathered d. called
4. A little suspicion started ***nagging*** him.
a. distressing b. pleasing c. stopping d. warning
5. Everyone has an ***indispensable*** role to play in this world.
a. short b. essential c. major d. clear

**2. Choose the most appropriate antonyms of the italicised words from the four alternatives given with each sentence.**

1. Always ***commence*** your work with faith.
a. conclude b. continue c. complete d. start
2. All the sheep ***panicked*** and ran away.
a. cried b. bleated c. scattered d. relaxed
3. Take ***pride*** in your individual nature.
a. joy b. honour c. humility d. pity
4. A village was affected by ***drought.***
a. summer b. winter c. floods d. famine
5. Remember that you are ***unique.***
a. special b. simple c. different d. common

**3. a) Use the prefixes with the base words given below to form new words and use them in sentences. [Prefixes are a letter or letters we add to the beginning of a base/root word to form a new one. The new words are not always antonyms.]**

| Prefixes | Base words | Base words |
|---|---|---|
| dis- | belief | tell |
| tri- | possible | cycle |
| un- | obedient | discipline |
| bi- | conscious | regard |
| in- | honour | fold |
| fore- | prove | justice |
| im- | | |

**b) Use the suffixes with the words given below to form new words and use them in sentences. [Suffixes are a letter or letters, we add to the end of a word to make a new one.]**

| | | |
|---|---|---|
| ferocious<br>potential<br>success<br>astonish<br>reason<br>reflect | real<br>punctual<br>human<br>personal<br>visual<br>great | -ly<br>-ful<br>-ment<br>-ion<br>-ous<br>-ise<br>-ity<br>-ness<br>-able |

## 4. Similar Sounding Words - Homophones

**Fill in the blanks with the suitable word choosing from the pairs given in brackets.**

1. The driver applied the hand _____________ to stop the car.(break, brake)
2. The hungry lion went in search of its _________ . (pray, prey)
3. The ________ is pleasant today. (whether, weather)
4. Sundar ate the __________ cake yesterday. (hole, whole)
5. My uncle ___________ a strange sound last night. (herd, heard)

## 5. Phrasal Verbs

A verb followed by an adverb or a preposition (also called a particle) becomes a phrasal verb. The particle and the verb together (the phrasal verb) has a meaning that is different from the meaning of the verb when it stands alone. Example: 'put' means 'to place'. But add 'off' to 'put' and what do you get? You get the phrasal verb 'put off' which means 'to postpone'. You must have a good knowledge of phrasal verbs to understand most of the writing you come across in English.

**Look up a dictionary to find out the meanings for the following phrasal verbs and use them in sentences.**




**This is done for you**
bring up - raise
bring in - make, get
bring about - cause

The children must be **brought up** with love and care.
The south-west monsoon will **bring in** lots of rain.
We are trying to **bring about** a change in our education system.

**Activity:**
**Select a passage from a newspaper consisting of a few phrasal verbs.**
**Paste the paper cutting in your scrap book.**
**Frame illustrative sentences using those phrasal verbs.**

## 6. Singular-Plural

**(a) You have learnt how a noun takes an 's' / 'es' for its plural form. But what about some unusual words and hyphenated nouns?**

| SINGULAR | PLURAL |
|---|---|
| son-in-law | sons-in-law |
| commander-in-chief | commanders-in-chief |
| man-of-war | men-of-war |
| passer-by | passers-by |
| Inspector – General | Inspectors – General |

**(b) Certain foreign words in English have different plural forms.**

| SINGULAR | PLURAL |
|---|---|
| nucleus | nuclei |
| bacillus | bacilli |
| crisis | crises |
| datum | data |
| radius | radii |

**c) There are some words that remain the same in both singular and plural forms. Here are a few examples of such words.**

sheep, scenery, stationery, luggage, deer, swine, information, news, equipment, staff

**d) Give the plural forms of the following words.**

axis, analysis, thesis, basis, fungus, index, vortex, medium, phenomenon, formula

### Reading skill

**Skimming and Scanning:**

We **skim** a passage for general information. When we read the headlines of a newspaper to know general information, we are skimming.

We **scan** a passage for specific information. For example, we scan the school notice board for the specific dates of our examination.

**Skim through the following passage and answer the questions that follow.**

An elderly carpenter was about to retire. He told his employer-contractor of his plans to leave the house-building business to live a more leisurely life with his wife and enjoy his extended family. The contractor was sorry to see his good worker go and asked if he could build just one more house as a personal favour. The carpenter said, "Yes", but over a period of time it was easy to see that the carpenter's heart was not in his work. This resulted in producing a work of inferior quality. It was an unfortunate way to end a dedicated career.

When the carpenter finished his work, his employer came to inspect the house. Then he handed over the front-door key to the carpenter and said, "This is your house. It's my gift to you". The carpenter was shocked! What a shame! If he had known he was building his own house, he would have done it all so differently. So it is with us. We build our lives, a day at a time, often giving less than our best. Then, with a shock, we realise we have to live in the house we have built. If we could do it over again, we would do it much differently. But, you cannot go back. You are the carpenter, and everyday you hammer a nail, place a board, or erect a wall. Someone once said, 'Life is a do-it-yourself project.' Your attitude, and the choices you make today, help build the 'house' you will live in tomorrow. Therefore, build wisely!

**Questions:**

1) What did the carpenter tell his employer and how did his employer feel about it?
2) What was the attitude of the carpenter to his work?
3) Why was the carpenter shocked to receive the house as a gift?
4) What message do you get from this passage?
5) Give a suitable title to this passage.



## Grammar




**a. Read the following passage to revise the prepositions of time that are indicated in bold letters.**

It is good for children to get up early **in** the morning. When you get up early, your mind is fresh, relaxed and ready to receive. So, try to get up **before** 5 o' clock. **For** an hour, you must study the subject you find difficult. Have your breakfast **at** 7 o' clock and start to school. Your school starts **at** 8 a.m. So you should reach your school **In** time and not **on** time. It will be appreciated if you are attentive **till/until** the classes get over. You can always clarify your doubts **during** the class hours or **after**. **When/As soon as** you return home, you should wash your face. As you have been working **since** morning, you should relax for some time.

**b. Look at the following passage and understand the prepositions of time and place.**

The technocrat President, the missile man of India and a great visionary Dr. A.P.J. Abdul Kalam was born **on** 15th October, 1931 **at** the island town of Rameshwaram **on** the east coast of Tamilnadu **In** India. He always got up early **In** the morning sometime **between** 4 a.m. and 5 a.m. **before** sunrise. He secured his engineering degree **at** MIT **In** Chennai and then joined DRDO. His glorious moment came **in** 1998 when he conducted nuclear test **at** Pokhran **in** Rajastan.

**c. Activity: Select a paragraph from the lesson.**
**Pick out prepositions of time and place from it.**

**d. Choose the appropriate prepositions of time and place from the list and fill in the blanks. (before, after, during, since, till/until, at, on, often, in, below, above)**

